# யாழ் நாதம்



இதழ் 3 1997




யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CONGRATULATIONS to a team of dedicated professionals on obtaining LABORATORY ACCREDITATION from the SRI LANKA STANDARDS INSTITUTION**

Under ASTEL (the Accreditation Scheme for Testing Laboratories)

The First Laboratory to obtain Accreditation for specified tests in the analysis of Tea, Water & Effluents, Food & Beverages.
Reports issued under ASTEL Accreditation by Authorised Signatories.

## Bamber & Bruce

*Chemical & Microbiological Analysts*
*Consulting Chemists / Environmental Consultants*

## Laboratory Division

*CHEMICAL & MICROBIOLOGICAL TESTING SERVICES*
*Food Beverages Potable Water Soil Fertilizer*
*Spices Tea Effluents Foliage Dolomite*

## Environmental Monitoring

*Industrial Effluents Sewerage*
*Soil Air Water*

Environmental Consultancy Division
Water & Air Pollution Control Pollution Minimisation & Abatement
Environmental Impact Assessment/ Initial Environmental Examination
Water Treatment & Management Hazardous Waste Managerment
Geotechnical & Hydrogeological Surveys Public Health & Sanitation
Urban Environmental Issues Pollution Monitoring & Analysis

ACCREDITED BY

ASTEL

BAMBER & BRUCE
ESTD 1880

**BAMBER & BRUCE LTD.**
56 1/1, Vajira Road, Colombo 5.
Telephones :

| | | |
|---|---|---|
| Laboratory | : | 592151, 500254 |
| Consultancy Div | : | 596106, 596104 |
| Fax . | : | 508813 |
| E.mail | : | bambruce@Sri.lanka.net |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"It ought to be beautiful, I live here"

# கல்லூரி கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி – எங்கள்
பெரு வரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி – உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி – உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி – இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி – வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி – உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த் தொடுசூ டோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி – ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி – இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி – உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமா.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி – என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி – நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி – உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடு.

இதழ் 3 - 1997


## உள் அட்டை....


(1) கவலையை மறப்போம் கல்லூரியை வளர்ப்போம்..

(2) தலைவர் செய்தி

(3) பத்துப் பருவங்கள்

(10) சிரித்துக் கொண்டே இருப்பேன் ..

(17) சத்தியம் காத்த சந்திரமதி

(28) கீதையில் ஒரு துளி

(30) சங்க கீதம்

(31) நாலு கோடிப் பாடல்

(34) வாடக்கூடாது - கல்யாணமாலை

(36) மாதர் கட்டிய சேலை

(38) என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள்

(40) லலிதா

(51) பெண்ணின் பெருமை

(53) **Vertigo And Phobias**

(56) யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் மூன்றாம் ஆண்டறிக்கை 1996.

(65) **Freaky Facts**

(67) **How Should I Be ?**

(68) **Are you anxious to know about anxiety**

(71) எளிமையாக வீட்டில் செய்யும் சிற்றுண்டி வகைகள் சில.

(73) **Common Accidents - Precautionary Measures**

(75) கை மருந்துகள்

(79) **National Poison Information Centre.**

(81) சிறுவர் விஞ்ஞானம்

(85) உலகின் விந்தைகள் சில உங்களுக்காக

(87) தங்கம் பற்றிய தகவல்கள்

(89) யாழ் நாதம் -2 வெளியீட்டின் போது அளித்த மெல்லிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையை மறப்போம்

# கல்லூரியை வளர்ப்போம்

யாழ் நாதம் இதழ் 3 வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வருடம் அங்கத்தவர்கள் பலர் தங்கள் மனநிலை சரியில்லாத காரணத்தால் தங்களால் யாழ் நாத மலருக்கு விஷயதானம் செய்ய முடியவில்லை எனத் தெரிவித்தார்கள். இது உண்மைதான். எங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏன் எங்கள் சமூக மக்கள் எல்லோருமே கஷ்டப்படும் போது எப்படி நாங்கள் எங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி ஏதாவது எழுத முடியும்?

இருந்தாலும் நாங்கள் கவலைப்படுவதால் ஒன்றையும் அடைய முடியாது. எப்படியாவது எங்கள் கவலைகளுக்கு ஒரு முடிவு வரும். நாம் எங்கள் கடமைகளைச் செய்து கொண்டு போவோம்.

*"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"*

என்னைப்போல் இக்கருத்துடைய சிலரின் முயற்சியினால் மலர்ந்ததுதான் யாழ்நாதம் இதழ் 3. அவர்களுக்கு எங்கள் சங்கத்தின் சார்பில் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நூல் உருவாவதற்கு பொருளுதவி செய்த அன்பர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் இம்மலருக்கு கதை, கவிதை, கட்டுரைகள் எழுதி உதவியவர்களும் எம் மனதில் நிலைத்து நிற்பார்கள். அடுத்த இதழில் இழந்த உற்சாகம் மீண்டும் திரும்பும் என எதிர்பார்க்கிறோம்.

வழமைப்போல் இந்நூலை அச்சிட்டு உதவிய யுனிஆட்ஸ் நிறுவனத்திற்கும், அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்கட்கும் நாம் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

**61/ 2, Abdul Gaffoor Mawatha**
**Colombo-03.**

திருமதி. சி. அம்பலவாணர்
*ஆசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் செய்தி

யாழ்நாதம் இதழ் இவ்வாண்டிலும் மலர்கிறது. ஓராண்டில் ஒரிதழாவது மலர வேண்டும் என்று உற்சாகத்துடன் உழைக்கும் மன்றச் செயலாளருக்கு முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். "ஒருமைக் கண் தான் பெற்ற கல்வி, ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து" ஒரு பிறப்பில் அல்ல ஏழு பிறவிகள் இருப்பினும் உதவும் தன்மையுடைய கல்வியை எமக்குத் தந்த கல்லூரிக்கு சமர்ப்பணமாக யாழ்நாதம் வெளியிடப்பட்டு வருகிறது.

எமது கல்லூரி எதிர்நீச்சல் போட்டு இப்பொழுது சிறிது சிறிதாக வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. மாணவர், ஆசிரியர் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் மறுமலர்ச்சி காணும் விதத்தில் அங்கு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக அறிந்து ஆறுதல் பெறுகின்றோம்.

பழைய மாணவிகள் சங்கத்தில் அங்கத்தவர் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லாத போதிலும் ஆர்வம் குன்றவில்லை. இவ்விதழை வெளியிடவும், இன்னும் பல நல்ல நிகழ்ச்சிகளை நடத்திடவும் செயற்குழுவினர் விரும்பிச் செயற்படுவது இதற்குச் சான்று பகர்கிறது. கருத்தரங்குகள், நாடகங்கள் போன்ற இலக்கியப் பணிகள் மூலம் அறிவு வளர்ச்சி தொடர வேண்டும் என விரும்புகிறோம். நிதி அன்பளிப்புகள் மூலம் எமது கல்லூரிக்குத் தேவையான சில உபகரணங்களைப் பெற்றுத்தர முடிந்தது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்து சமய பணிகளையும் முன்னின்று நடத்துவதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

இந்த யாழ்நாத இதழ் சென்ற இதழ்களைப் பார்க்கிலும் சிறிது சிறப்பு வாய்ந்தது என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். எமது கல்விப்பணி தொடர்வதற்கு இறைவனின் ஆசியை வேண்டுகிறோம்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்
*தலைவர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துப் பருவங்கள்



சற்சொருபவதி நாதன்

பிறந்தநாளைக் கொண்டாடுதல் இப்போது ஒரு ஃபாஷன் ஆகிவிட்டது என்று கூறினால் அதைப் பிழையென்று எவருமே கூறமாட்டார்கள். பிறந்த நாளைக் கொண்டாடுதல் தவறு என்பது என் கருத்தல்ல; ஆனால் இன்றைய கொண்டாட்டம் பண்டைக்காலச் சிறப்பைக் கொண்டிருக்கவில்லை. "நாகரீகம்" என்ற போர்வையில் இந்தக் கொண்டாட்டம் இன்று அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது எனலாம்.

பிறந்தநாளைத் தமிழர் கொண்டாடினார்கள் என்பதற்கு இலக்கியத்திலே நிறையச் சான்றுகள் உண்டு. இதனை நான்மங்கலம் என்று இலக்கியங்கள் கூறும்; அரசரின் பிறந்தநாள் விழாவும் நான்மங்கலம் எனப்படும். இலக்கிய காலத்திலே பெருவழக்குப் பெற்றிருந்த இந்த விழா, இடைக்காலத்திலே மறக்கப்பட்டு இப்போது திரும்பவும் மலர்ந்திருக்கின்றது. நல்லதுதான். பிறந்தநாள்விழா என்பது ஆண்டிலே ஒருதரம் கொண்டாடப்படுவது; அன்றியும் சிறுவரின் பிறந்தநாளையே வெகுவிமரிசையாக நாங்கள் கொண்டாடிவருகிறோம். சிறுவரை மையமாக வைத்துக் கொண்டாடப்படும் விழாக்கள் பல அன்றிருந்தன. அவை இன்று மறக்கப்பட்டுவிட்டன. மறக்கப்பட்ட அந்த விழாக்கள் மிகவும் நல்லவை; சிறுவர்க்கு அறிவூட்டும் வகையிலும், தாய்மையுணர்ச்சி, தாயின்மீதான அன்பு என்பனவற்றை வளர்க்கும் வகையிலும் அவை அமைந்திருந்தன. அந்த விழாக்கள் மறக்கப்பட்டதால், நமது சமுதாயத்துக்குப் பல இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன எனலாம். ஆகவே, மறக்கப்பட்ட அவற்றைப் பற்றி இப்போது நினைவூட்டுதல் குடும்பத்தின் – சமுதாயத்தின் முதுகெலும்பாய் அன்றும் இன்றும் விளங்கிவரும் பெண்களுக்கும் தாய்மார்க்கும் நன்மையாய் இருக்கும் என்று கருதுகிறோம்.

தமிழரின் வாழ்நாளில் ஒவ்வொருநாளும் விழாநாளே என்றால் அது மிகாயாகாது. சுருக்கமாகச் சொல்லுவதென்றால், ஒருவர் பிறந்தாலும் அது விழாதான்; ஒருவர் இறந்தாலும் அது விழாதான். பிறப்புவீட்டிலும் இறப்பு வீட்டிலும் ஒரு கலைநிகழ்ச்சியைக் காணமுடிகிறது.

கருக்கொண்ட நாளிலிருந்து, குழந்தை உருக்கொண்டு, பெருத்து, முதிர்ந்து வெளிவருவதன்முன்னர் நடைபெறும் சீமந்தச் சடங்கு (ஆறாம் மாதம்), வளைகாப்பு (ஐந்தாம், ஏழாம் மாதங்கள்) முதலிய சடங்குகள் ஒருபுறமிருக்கப் பிள்ளை பிறந்ததன் பிறகு, அது குறிப்பிட்ட ஒரு வயதையடையும்வரை வேறு சில விழாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடப்படுகின்றன. ஒரு பிள்ளை பிறந்த முதலாம்நாள், 11 ஆம் நாள், இருப்பத்தோராம் நாள், முப்பத்தோராம் நாள், நாற்பத்தோராம் நாள் ஆகிய நாட்கள் விழா நாட்களாகக் கொண்டாடப்படுகின்றன. இவை இன்றும் நிகழ்ந்து வருகின்ற நிகழ்ச்சிகளாதலின், பெண்ணுலகத்தாருக்கு நினைப்பூட்டவேண்டிய அவசியமில்லை.

கருக்கொண்ட நாளிலிருந்து, குழந்தை உருக்கொண்டு, பெருத்து, முதிர்ந்து வெளிவருவதன்முன்னர் நடைபெறும் சீமந்தச் சடங்கு (ஆறாம் மாதம்), வளைகாப்பு (ஐந்தாம், ஏழாம் மாதங்கள்) முதலிய சடங்குகள் ஒருபுறமிருக்கப் பிள்ளை பிறந்ததன் பிறகு, அது குறிப்பிட்ட ஒரு வயதையடையும்வரை வேறு சில விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒரு பிள்ளை பிறந்த முதலாம்நாள், 11 ஆம் நாள், இருப்பத்தோராம் நாள், முப்பத்தோராம் நாள், நாற்பத்தோராம் நாள் ஆகிய நாட்கள் விழா நாட்களாகக் கொண்டாடப்படுகின்றன. இவை இன்றும் நிகழ்ந்து வருகின்ற நிகழ்ச்சிகளாதலின், பெண்ணுலகத்தாருக்கு நினைப்பூட்டவேண்டிய அவசியமில்லை.

மனிதனுக்கு ஏழுநிலைகள் இருப்பதாக சேக்ஸ்பியர் கூறுகின்றார். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரினம் பெண் என்று ஏழு நிலைகள் பெண்களுக்கு இருப்பதாகத் தமிழ் இலக்கியம் கூறுகிறது. ஆனால் இவற்றைக் கொண்டாடும் விழாக்கள் இல்லை; சாமார்த்தியக்கல்யாணம் ஒன்றே கொண்டாடப்படுகின்றது. ஆனால் குழந்தைகளின் வாழ்க்கையைப் பத்துப் பருவங்களாகப் பிரித்து அப்பருவங்களைக் கொண்டாடும் வழக்கம் பண்டைய நாளில் இருந்ததுபோலத் தெரிகிறது. இதைப்பற்றி நூல்களே எழுந்துள்ளன. அவை பிள்ளைத் தமிழ் எனப்படும். பிள்ளைகளின் பருவங்கள் பற்றிய விடயங்களைக்கூறும் தமிழ் ஆதலின் பிள்ளைத்தமிழ் என்று பெயர்பெற்றது. பிள்ளையை ஒரு பேறாக, ஒரு செல்வமாக மதித்துப் போற்றுதல் நமது மரபு. இதனால், போடுதல் முதலிய மரபுகளால் உயிர்ப்பிறப்பை வழங்குகின்ற தமிழ், குழந்தை பிறத்தலைப் பிள்ளைப்பேறு என வழங்கும்.

பிறவியின் நோக்கம் ஞானமடைதல்; ஞானத்துக்கு வழிகாட்டுவது அறிவு; அறிவுக்கு வழி அனுபவப்படுதல்; குழந்தைப்பேறு – அதாவது பிள்ளைப்பேறு ஒரு அனுபவம். அந்த அனுபவத்தின் பயன் ஞானம். பெற்ற குழந்தையை அனுபவிப்பது, பெற்ற செல்வத்தை அனுபவிப்பதுபோன்ற ஓர் அருஞ்செயல் ஆகும். செல்வத்தை அனுபவிக்க எல்லோருக்கும் தெரிவதில்லை. குழந்தையை அனுபவிப்பதும் ஒரு கலை. குழந்தை அதன் ஒரு வயதுக்குள் பத்துவிதத் தோற்றப்பொலிவுகளை, மாற்ற மலர்ச்சிகளை, ஏற்ற எழில்களைக் காட்டிப் பொற்றோரை மயக்கி வளரும். "மயக்குறு மக்களை அனுபவித்தல் ஒரு கலை".

புலவர்கள், பிள்ளைகளாகிய செல்வத்தை அனுபவிக்கும் முறையை இலக்கியமாக்கிப் பாடிய பாடல்களே பிள்ளைத்தமிழ். பத்துப் பருவங்களிலும் பத்துவித அழகு, பத்துவித அனுபவங்கள். பிள்ளைத் தமிழைப் படித்ததன்பின்னரே இத்தனை இன்பங்கள் உண்டா ? "எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா" என்று அதிசயிக்கின்றோம். இத்தனை இன்பங்களையும் "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், அவர்தம் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" என்று இரண்டடியுள் அடக்கினார் வள்ளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்பெற்ற பிள்ளைச் செல்வத்தைக் கொஞ்சிக் குலாவி அனுபவித்த பாசமுடையான், "காமஞ்சான்ற கடைக் கோட்காலை, பாசம் பரஞ்சோதிக்கு ஆக்கி, அவனைக் காதலியாக்கி, புல்லிப் புணர்வது என்று கொலோ" என, மனிதக் காதல் மாறித்தெய்வீகக் காதலானதும், அவனைக் குழந்தையாக்கிப் பிள்ளைத்தமிழ் பாடிப் பக்திபண்ணியதும் தமிழ் காட்டும் இலக்கியத்துள் ஒன்று. இந்தப் பிள்ளைத் தமிழைப்பற்றி மேலோட்டமாகச் சிந்தனை செய்வோம். பிரபந்தவகைகள் 108 என்று சொல்வார்கள். பிள்ளைத்தமிழ் இதில் ஒருவகை. பல புலவர்கள் பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறார்கள்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், முருகன் பிள்ளைத்தமிழ், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், கொடியிடைநாயகி பிள்ளைத்தமிழ் என்பன இவற்றுட்சில. குமரகுருபர சுவாமிகள் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் இவற்றுள் எல்லாம் தலைசிறந்தது என்பது பொதுவான கருத்து.

மக்களின் இயல்பை, குழந்தைகளின் இயல்பினைப் படம்பிடித்துக் காட்டுவதில் பிள்ளைத்தமிழ் நூல்கள் ஒப்பிணையின்றி விளங்குகின்றன. பெண்களைப் பற்றியும் குழந்தைகளைப்பற்றியும் பேசப்படுகின்ற செய்திகள் இதில் அனந்தம்.

குழந்தையானது கண்பிசைந்தழுதல், குழந்தையன்பு, குறுமென்நடை, சப்பாணி கொட்டுதல், சிறுகுறும்பு செய்தல், செங்கீரையாடுதல், செவிலியருடைய மார்பிலே உதைத்தல், தளர்நடையிடுதல், தாள் உதைத்து அழுதல், தொட்டிலை உதைத்தல், புழுதியளைதல், பெருவிரல் சூப்புதல், வீழ்நீர் வழிதல், விம்மிப் பொருமி அழுதல் ஆகிய செய்திகள் இந்த நூலிலே மிகவும் அழகாகக் கூறப்படும்.

மகளிர் குழந்தைகளை உச்சிமோதல், காவிற்கிடத்திக் குளிப்பாட்டுதல், வாயிதழ்நெரித்துப் பாலூட்டுதல், தொடையில் வைத்து நித்திரையாக்குதல், தலைமயிரைச் சீவுதல், முகந்துடைத்தல் முதலிய செய்திகளும் கூறப்படுகின்றன. அம்மானை ஆடுதல், அன்னம், கிளி, மான், மயில் என்பனவற்றை வளர்த்தல், ஊஞ்சலாடுதல், கண்பொத்தி விளையாடுதல், கழங்காடுதல் முதலிய மகளிரின் விளையாட்டுக்கள் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே கிடக்கின்றன. இவற்றையெல்லாம் எங்கள் பெண்கள் தெரிந்திருக்கவேண்டும்.

குழந்தைகளின் பருவங்கள் பத்தாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டது, அவையாவன :–

1. காப்புப் பருவம்
2. செங்கீரைப் பருவம்
3. தாலப் பருவம்
4. சப்பாணிப் பருவம்
5. முத்தப் பருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வருகைப் பருவம்
7. அம்புலிப் பருவம்
8. அம்மானைப் பருவம்
9. நீராடற் பருவம்
10. ஊசற் பருவம்

என்பன. ஆனால் இந்தப் பத்துப் பருவங்களும் பெண் குழந்தைகளுக்கே பொருந்துவன : பெண்பாற் பிள்ளைத்தமிழில் பத்துப் பருவங்களும் விபரிக்கப்பட்டிருக்கும். ஆண்பாற் பிள்ளைத்தமிழில் அம்மானைப் பருவம், நீராடற் பருவம், ஊசற் பருவம் என்பனவற்றுக்குப் பதிலாக, சிற்றிற்பருவம், சிறுபறைப்பருவம், சிறுதேர்ப் பருவம் என்பனவும் ஏனைய இருபாலாருக்கும் பொதுவான ஏழு பருவங்களும் இருக்கும். இந்தப் பத்துப் பருவங்களும் குறிப்பிட்ட வயதுகளில் விழாக்களாகக் கொண்டாடப்படும்.

பிள்ளைத்தமிழிலே கூறப்பட்டிருக்கும் பத்துப் பருவங்களும், வெறும் இலக்கிய மரபுகள் என்று எண்ணிவிடுவது சரியாகாது. தமிழ்நாட்டில் வழங்கிவந்த சமுதாயப் பழக்கவழக்கங்களை அடிப்படையாக வைத்தே இவை எழுந்திருக்கவேண்டும். ஆணாயினும் பெண்ணாயினும் குழந்தை பிறந்தபோது, அக்குழந்தையைப் பற்றிப் பிள்ளைத்தமிழ் என்னும் நூலைப் பாடுவிக்கும் வழக்கம் பண்டைத் தமிழரிடம் நிலவிவந்தது. குழந்தை பிறந்து மூன்றாம் மாதத்திலிருந்து பத்து மாதங்களுக்குள் ஒரு புலவனை அழைத்துக் குழந்தையைப் பற்றிப் பாட்டுக்கள் பாடுவித்தனர். பிள்ளையின் பெற்றோரும் உற்றோரும் மற்றோரும் இதனைக் கேட்டு மகிழ்வார். பத்து மாதமும் பத்துப் பருவமாக அமையும். பிள்ளைத்தமிழில் சொல்லப்பட்டிருக்கும் பருவங்கள் எல்லாம் இன்றும் நம் சமூகத்திலே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்று கூறமுடியாவிட்டாலும் ஒரு சிலவாகுதல் இன்றும் போற்றப்பட்டு வருகின்றன என்பதை உணர்ந்தால், பிள்ளைத்தமிழ் கூறும் செய்திகள் தமிழரின் வாழ்வின் ஒருகூறாய் அமைந்திருந்தன என்பது புலனாகும்.

இப்போது பருவங்களைப் பற்றிப் பார்ப்போம். முதலாவது பருவம் காப்புப்பருவம் எனப்படும். காப்பு என்றால் காவல் என்பது கருத்து. நோயோ பேயோ அணுகக்கூடாதென்று கடவுளை வேண்டிக் கையில் கட்டப்படும் நூல் காப்பு எனப்பட்டது. காலப்போக்கில் இந்தக் காப்பு நூல்தான் பொற்காப்பாக மாறி, நாகரீகத்தின் குறியாகவும் செல்வத்தின் கட்டளைக் கல்லாகவும் ஆகிவிட்டது. திருமால் முதலிய தெய்வங்கள், பிள்ளையைக் காப்பாற்றவேண்டும் என்று தெய்வங்களை வழிபடும் விழாவொன்று இருந்தது. இந்த விழா குழந்தை பிறந்த ஏழாவது நாள் நிகழும்.

இரண்டாவது பருவத்துக்குச் செங்கீரைப்பருவம் என்பது பெயர். இளங் குழந்தையானது "ங்க் ங்க்" என்று, ஒலி கூட்டக் கேட்டுத் தாய்மாரும் தந்தையரும் உவக்கின்ற பருவம் இது. இவ்வொலி மழலைக்கு முதற்படியில் உள்ளது. மழலையிலே கருத்திருக்கும்; செங்கீரையிலே கருத்திருக்காது. தொடையமைதி இல்லாத ஒன்றைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தொடை என்று இலக்கியகாரர் சொல்வது போல, அர்த்தமற்ற சொல்லைச் "செங்கீரை" என்றனர் தமிழர். "கீர்" என்றால் "சொல்" என்று அர்த்தம். பிள்ளையின் பருவங்களில் செங்கீரைப் பருவம், பெற்றோரையும் மற்றோரையும் பிள்ளையின்பால் ஈர்க்கும் பருவமாதலின் இதுவும் பெற்றோரால் கொண்டாடப்பட்ட ஒரு பருவமாக இருந்தது போலும்.

தாலப்பருவம் மூன்றாவது பருவம். தாலாட்டுப் பருவம் என்ற சொற்றொடர்தான் தாலப்பருவம் என மருவி வழங்குகின்றது. குழந்தையைத் தொட்டிலிட்டுத் தூங்கச் செய்யும் பருவம் தாலாட்டுப்பருவம் அல்லது தாலாட்டில் பிள்ளை அயரும் பருவம் மயங்கும் பருவம் என்றும் கூறலாம். ஒரு தொட்டிலிடுவது ஒரு விழாவாக இன்றும் சில இடங்களில் நடைபெற்று வருகின்றது. தாலாட்டுப் பருவம், பிள்ளையின் வாழ்வின் முக்கியமான ஒரு பருவமாகும். இசையின்பத்தில் குழந்தை நாட்டம் காட்டுகின்ற பருவம் இதுவென்று கூறினாலும் மிகையாகாது. அதுமட்டுமல்ல; தாயின் கற்பனாசக்தி வளர்வதற்கும், இந்தப் பருவம் சந்தர்ப்பம் அளிக்கின்றது என்று கூறலாம். பாலூட்டிக் கொண்டே தாலாட்டும்போது பிள்ளை உடலாலும் உள்ளத்தாலும் பயன்பெறுகின்றது.

அடுத்த பருவத்துக்குச் சப்பாணிப் பருவம் என்று பெயர். இங்கே சப்பாணி என்பது சாதாரண கருத்தில் அல்ல. கையோடு கைசேர்த்துத் தட்டுதலைத்தான் சப்பாணி என்கிறார்கள். தொட்டிலில் வளர்ந்த பிள்ளையைக் கைகொட்டி மகிழுமாறு பெற்றோர் வேண்டுகின்ற பருவம்தான் இது.

குழந்தாய் ! குழந்தாய் என்று கூவி என்னைக் கொஞ்சு, என்னைக் கொஞ்சு என்று குழந்தையைக் கெஞ்சுகின்ற பருவம் முத்தப்பருவம். முத்தம் கொடுத்தல் என்பதும் கொஞ்சுதல் என்பதும் ஒன்றென்பதை விளக்கவேண்டியதில்லை.

ஆறாவது பருவம் வருகைப்பருவம் எனப்படும். தளர்நடையிட்டுத் தள்ளாடித் தடுமாறி வரும் குழந்தையை நோக்கி, "வாங்கோ, வாங்கோ" என்று கேட்கும் பருவம் வருகைப்பருவம் எனப்படும். வருகைப்பருவம் பற்றிக் கூறும் ஒரு பாடல்;

*"தொடுக்கும் கடவுட் பழம்பாடற்*
*றொடையின் பயனே நறைபழுத்த*
*துறைத் தீந்தமிழினொழுகு நறுஞ்*
*சுவையே யகத்தைக் கிழக்கையகழ்ந்*
*தெடுக்கும் தொழும்பருளக் கோயிற்*
*கேற்றும் விளக்கே வளர்சிமய*
*இமயப் பொருப்பில் விளையாடும்*
*இளமென்பிடியே யெறிதரங்கம்*
*உடுக்கும் புவனம் கடந்துநின்ற*
*ஒருவன் றிருவுள்ளத்திவழ*
*கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்*
*உயிரோவியமே மதுகரம்வாய்*
*மடுக்கும் குழற்காடேந்து மிள*
*வஞ்சிக் கொடியே வருகவே*
*மலையத்துவசன் பெற்ற பெரு*
*வாழ்வே வருக வருகவே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது, அம்புலிப் பருவம் எனப்படும் வெண்ணிலாவைப் பிள்ளையோடு சேர்ந்து விளையாட வரும்படி அழைப்பதாய் அமைவது இந்த அம்புலிப் பருவம். சிறுவர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தோன்றுகின்ற ஓர் எண்ணம் இது. சந்திரனைப் பிடித்துக் தரும்படி தசரத இராமன் சுமந்திரனைக் கேட்டதாக ஒரு கதையை சிறுவராக இருந்தபோது நாமெல்லாம் படித்திருக்கின்றோம். அப்படியே சிறுபிள்ளைகள் ஒவ்வொன்றிற்கும் எண்ணம் எழுகின்ற பருவம் அம்புலிப்பருவம் எனப் புலவரால் கையாளப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட ஏழு பருவங்களும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பொதுவான பருவங்களாகக் கொள்ளப்படும். 8ஆம், 9ஆம், 10 ஆம் பருவங்கள் பெண்ணுக்கு வேறு, ஆணுக்கு வேறு.

எட்டாம் பருவம் அம்மானைப் பருவம். அம்மானை பெண்கள் விளையாட்டுக்களில் ஒன்று. இதைப்பற்றிய குறிப்புகளைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் காணலாம். பிரபந்த வகைகளில் ஒன்றான கலம்பகத்திலும் அம்மானை விளையாட்டுப்பற்றி விரிவாகக் கூறுப்படும். அம்மானையும் கொக்கான் வெட்டுதலும் ஒன்று என்று கூறுவர்.

ஒன்பதாம் பருவம் நீராடற்பருவம். நீராடவரும்படி கேட்டு, மறுக்கின்ற குழந்தையைக் குளிக்க வரும்படி மன்றாடும் நிலையைக் குறிப்பது இந்தப் பருவம்.

ஊஞ்சற் பருவம் பத்தாம் பருவம். ஊஞ்சலாடுதல் பெண்களுக்கே உரிய ஒரு விளையாட்டு. ஆகவே அவ்விளையாட்டில் ஈடுபாடு கொள்ளுமாறு பெண்பிள்ளையை வேண்டுவதாக இந்தப் பருவம் அமையும். இந்தப் பருவம் பற்றி பாடல்கள் மிகவும் இனிமையானவையாய் இருக்கும்.

*இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட்*
*டிரைத்திடு மரிச்சிலம்பும்*
*இறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொன்*
*எழுதுசெம் பட்டுவீக்கும்*
*திருவிடையு முடைதார மும்மொட் டியாணமும்*
*செங்கைப் பசுங்கிளிள்ளையும்*
*திருமுதலைத் தரளவுத் தரியமும் மங்கலத்*
*திருநாணு மழகொழுகநின்*
*றருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில*
*வரும்புகுறு நகையுஞான*
*ஆனந்தமாக்கடல் குடைந்துகுழை மகரத்தொ*
*டமராடு மோடரிக்கட்*
*பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி*
*பொன்னூச லாடியருளே*
*புழுகுநெய்ச் சொக்கரதிரு வழகினுக் கொத்தகொடி*
*பொன்னூச லாடியருளே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments :-*

# Colombo Diagnostics (Pvt) Ltd.

**Facilities Offered :**

* Automated laboratory with computerised reports
* Channelled consultations
* ECG, X ray
* Medical Profiles, hormone profiles
* Viral studies
* Mobile services

**For your convenience we provide you with**

Ample parking space
Personalised attention


## PS. WE ARE NOW IN BORELLA

**100 Yards away from the Borella Junction**

62, Cotta Road, Colombo - 8
Tel: 694102, Fax : 575472, Email: andy@sri.lanka.net
Hotline : 074-510510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய வேப்பமரம் தன்னை சுற்றி நிகழும் அவலங்களை பார்த்து சோகத்தின் வெம்மையால் தனது பெரும்பாலான இலைகளை உதிர்த்து சருகாக்கியிருந்தது. அதன் கிளைகளில் முன்பு துள்ளி விளையாடிய அணில்கள் கூட எதற்கோ பயந்தாற்போல ஊர்ந்து சென்றன. காலை வேளைக்கு மாறாக பறவைகள் கூட சப்திக்க மறந்து மௌனமாய் தலைகளை அங்கும் இங்கும் திருப்பி அங்கலாய்த்துக் கொண்டிருந்தன. இந்த மாதத்திற்குள் எப்படி ஒன்று இவ்வளவு வெறுமை இங்கு ஏற்பட்டது ?





# சிரித்துக் கொண்டே இருப்பேன்



த. பிருந்தா

ஒரு பெருமூச்சுடன் விழிகளை நகர்த்தி எதிரே பார்க்கிறேன். அங்கே யாழ். இந்து மகளிர் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறார். "என்ன பிள்ளையாரே ! உம்மை கவனித்துப் பூட்டி வைக்க ஆக்கள் இல்லையா ? அதுவும் நல்லதுக்குத்தான். இங்கை நடக்கிறதை பாக்க உமக்கு வசதியாய் இருக்கும்" எனது வாய்க்குள்ளே நான் மெல்ல முணுமுணுத்துக்கொள்கிறேன். மீண்டும் அவர் என்னை பார்த்து சிரிப்பது போல் ஒரு பிரமை.

மெல்ல தலையை வலப்புறம் திருப்பிப்பார்க்கிறேன் கண்முன்னே எங்கள் கல்லூரி மைதானம் விரிந்து கிடக்கிறது. "எந்த இனம் அழிந்தாலும் எங்களிடம் யாரும் வாலாட்ட முடியாது" என்று சவால் விடுவது போல புற்களும் முட்செடிகளும் புதராய் மண்டிக்கிடக்கின்றன. சில மாதங்களுக்கு முன்பு இங்கு எங்கள் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி நடந்ததென்றால் யாரும் நம்புவார்களா ?

விளையாட்டுப்போட்டி ஒ ! அவை எவ்வளவு இனிமையான நாட்கள். எனது நினைவுகள் பின்னோக்கி சிறகடித்துப் பறக்கின்றன.

மாலையில் விளையாட்டுப்போட்டி மாணவிகளும் ஆசிரியர்களும் மும்முரமாக தங்கள் இல்லங்களை அலங்கரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை இல்லத்தலைவி என்ற பெயரில் என்னிடம் பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் மீண்டும் சரிபார்த்து திருப்தியடைகையில் எனது கஷ்டங்களெல்லாம் பஞ்சாகப்பறந்து போகிறது. அதுவரை அடங்கிக்கிடந்த பசி மெல்ல எட்டிப்பார்த்து வயிற்றை பிறாண்டத் தொடங்கியது. காலையில் கூட சாப்பிடாமல் வந்தது அப்போதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

மணிக்கட்டை திருப்பி நேரத்தைப் பார்க்கிறேன். "நிறைய நேரம் இருக்குது. வீட்டைபோய் சாப்பிட்டிட்டு கொஞ்சநேரத்தால வர சரியாயிருக்கும்" இவ்வாறு எண்ணமிட்டபடியே நவக்கிரக வகுப்புத் தொடரிலிருந்து இறங்கி எங்கள் கல்லூரி வாசலை நோக்கி நடக்கிறேன்.

எதிரே பாரதி என்னை நோக்கி கையை ஆட்டி சிரித்தபடி வருகிறாள். "நீ வீட்டில் இருப்பாயாக்கும் எண்டு போனன், இன்னும் வரேல்லை எண்டு அம்மா சொன்னவ. ஒரேயடியாய் வேலை வேலை எண்டு களைத்துப்போகாதை. இந்த முறை என்னை வெல்ல வேண்டாமோ ?" அவள் என்னைக் கடிந்து கொள்கிறாள்.

"அய்யோ ! உன்டை இந்த நீளஅழகான கால்களை வெல்ல இந்த கட்டைக்கால்களுக்கு தைரியம் இல்லையம்மா !" நான் விளையாட்டாய்ச் சொல்ல அவள் முகம் வாடிப்போகிறது.

"அதற்காக போட்டியே இல்லாமல் விட்டு விடுவேனா ? என்னோட முழு சக்தியையும் பாவிச்சு முயற்சிக்கப்போகிறேன். ஒரு வேளை நீதான் மண்கவ்வுறியோ ஆருக்குத் தெரியும்" அவள் கன்னத்தை தட்டி அவளுக்கு சமாதானமாகவும் என் மனதை திடப்படுத்திக் கொள்ளவும் இப்படி சொல்லிக் கொள்கிறேன்.

இதோ! விளையாட்டுப்போட்டி தொடங்கிவிட்டது. "200 மீற்றருக்கான தடைதாண்டும் போட்டி ஆரம்பமாகப்போகிறது அதில் பங்குபற்றுவோர்கள்..." ஒலிபெருக்கி அலறத்தொடங்கியதும் நான் மைதானத்தை நோக்கி நடக்கத் தொடங்குகிறேன். எனது இல்லத்தோழிகள் தோளைத்தட்டி வாழ்த்துக்கள் சொல்லி அனுப்புகிறார்கள்.

குலுக்கலில் எனக்கு ஐந்தாவது ஓட்டப்பாதை கிடைக்கிறது. எனக்குரிய இடத்தில் நின்றுகொண்டு திரும்பிப்பார்க்கிறேன். பாரதி இரண்டாவது ஓட்டப்பாதையில் நிற்கிறாள். என்னைப் பார்த்துச் சிரித்து தனது கட்டை விரலை தூக்கி காட்ட நானும் பதிலிற்கு என்னுடைய கட்டை விரலை தூக்கிக்காட்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகாக காலை மடக்கி கைகளை ஊன்றி இருந்து கொண்டு தலையை நிமிர்த்திப் பார்க்கிறேன். இதோ ! விசில் சத்தம். வில்லிலிருந்து விடுபட்ட அம்புகளாய் எல்லோரும் பாய்ந்து செல்கிறோம். சுற்றிலும் எங்களை ஊக்கப்படுத்தும் உற்சாக ஒலிகள், கைதட்டல்கள்.

ஒவ்வொரு தடைகளாகப் பாய்ந்து, கடந்து ..... எனக்கு மூச்சு முட்டுகிறது. "இல்லை ! எப்படியும் முதலாவதாக வரவேண்டும்" எனது சக்தி அத்தனையையும் திரட்டி கால்களை எட்டிப்போட்டு ஓடுகிறேன். மனதிற்குள்ளே ஒரு அடி முன்னால் ஓடிக்கொண்டிருக்கும் பாரதியை முந்த வேண்டும் என்னும் வேகம். இதோ கயிறு பிடித்திருக்கிறார்கள். மூச்சைப் பிடித்து ஓடுகிறேன்.

முடியவில்லை. இம்முறையும் நான் இரண்டாவதுதான். மனதினுள் ஏமாற்றம் சின்ன மின்னலாய் வந்து மறைகிறது. வாய் திறந்து பாராட்ட முடியாது மூச்சிரைக்க பாரதியின் கைகளைப் பற்றி தட்டிக்கொடுக்கிறேன். உடனேயே விநோத உடைப்போட்டிக்காக உடைமாற்ற ஓடுகிறேன்.

"என்ன பிருந்தா ! என்னை ஏமாற்றி விட்டாயே ! " விளையாட்டுப்போட்டி முடிந்து ஒழுங்குபடுத்தும் வேலையில் சக மாணவிகளோடு ஈடுபட்டிருந்த வேளையில் பாரதி வருகிறாள்.

"இது எல்லோருக்கும் தெரிஞ்ச விஷயம் தானே ! இந்தா உனக்கு என்னுடைய பிறந்தநாள் பரிசு" ஒரு பையை எடுத்து அவளிடம் கொடுக்கிறேன்.

"அடடே ! எங்கே என்னுடைய பிறந்தநாளை மறந்திட்டியோ எண்டு நினைச்சன். இண்டைக்கு இருட்டீட்டுது. நாளைக்கு எண்டாலும் வீட்டை வரோணும்" அவள் ஆசையாய் பையைத்திறக்கிறாள்.

உள்ளே ஒரு சோடிக்கொலுசு. வெள்ளியல்ல. வெள்ளி முலாமிட்டது. நான் சில மாணவிகளுக்கு புல்லாங்குழல் சொல்லிக் கொடுத்ததில் கிடைத்த காசு. சொந்த சம்பாத்தியம். எனக்கு அது தங்கக்கொலுசு போல. அவள் முகபாவனையை ஆவலாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

"நல்ல வடிவாயிருக்கு. மாங்காய் மாங்காயாய். Thank you பிருந்தா !" அவள் அதை தன் கால்களில் கட்டிக்கொள்கிறாள்.

ஓ.... ! என்ற ஒப்பாரியின் ஓலம் எனது சிந்தனையைக் கலைக்கிறது. எங்கள் கல்லூரியில் இருந்துதான் கேட்கிறது. ஆம் ! முன்பு மிடுக்காக ஒளிர்வுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட கல்லூரியிலிருந்தல்ல. இன்று பொலிவிழந்து சோகமே உருவாகியிருக்கும் இந்த அகதிமுகாமிலிருந்து.

''யாரோ இண்டைக்கும் செத்துப்போய்ச்சினம் போல'' மனதிற்குள் நினைத்துக் கொள்கிறேன். இதுவே இங்கு வழமையாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் எங்கள் கல்லூரியில் இருந்த அகதிகளில் இரண்டு மூன்று பேராவது உயிர் விட்டுக் கொண்டிருந்தனர்.

வியப்பில்லை ! நாங்கள் வீடு வீடாக, கடை கடையாக ஏறி இறங்கி நாள் முழுதும் சேர்த்துக்கொடுக்கும் உடுப்புகளும் உணவு வகைகளும் எங்கள் கல்லூரியிலிருக்கும் கட்டிடங்களிலும், மைதானத்திலும் நெருக்கியடித்துக் கொண்டிருக்கும் ஆயிரத்து இருநூற்று முப்பத்தாறு குடும்பங்களுக்கும் யானைப்பசிக்கு சோளப்பொரி போல எந்த மூலைக்குப்போதும் ? பற்றாக்குறைக்கு சுத்தம் என்னும் சொல்லிற்கு இங்கிருக்கும் ஜனநெருக்கடியில் அர்த்தமே இல்லாது போயிருந்தது.

இந்தச் சூழ்நிலையில், இத்தனை பசி பட்டினியிலும் தொற்று நோய்களுக்குமிடையில் இத்தனை பேர் இன்னும் உயிரோடு இருப்பதுதான் வியப்பு! இந்த இறப்புகள் எங்கள் கல்லூரியில் மட்டுமல்ல இங்கு அகதி முகாமாயிருக்கும் எல்லா பாடசாலைகள், கல்லூரிகள், கோயில்கள், வாசகசாலைகள் அனைத்திலும் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகள்.

வேப்பமரத்தில் நன்றாக நான் சாய்ந்து கொள்கிறேன். என் மனம் மீண்டும் கட்டுக்கடங்காமல் நினைவுகளை அசை போடத் தொடங்குகிறது. நேற்று.....

வழக்கம்போலவே புக்காரா, சுப்பசொனிக்கின் குண்டு வீச்சில் காயப்பட்ட பொதுமக்களுக்கு முதலுதவிச்சிகிச்சை செய்ய வரும்படி எங்கள் கல்லூரி சென். பரியோவான் சங்க முதலுதவிக்குழுவிற்கு வேண்டுகோள் வருகிறது. எங்கள் முதலுதவிக்குழுவிலிருந்து நான்கு பேர் விரைந்து செல்கிறோம். கொக்குவில் சாரதா மகளிர் வித்தியாலயத்திற்கு முன்னால் காயமடைந்து வீழ்ந்து கிடந்தவர்களுக்கு எங்களால் முடிந்த முதலுதவிகளை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

எங்களிடம் இருந்த மருந்துகளோ உண்மையில் இருவருக்குக்கூட போதாது. பண்டேஜுக்கள் எதுவும் இல்லை. பழந்துணிகளை தோய்த்து உலர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தோம். அவைதான் காயங்களின் இரத்தப்பெருக்கை கட்டுப்படுத்த உதவிக்கொண்டிருந்தன. நாங்கள் நான்கு பேர், வேறு கல்லூரிகளில் இருந்து வந்த ஆறு பேர் அங்கே காயப்பட்டிருப்பதோ இருபத்தேழு பேர். எங்களுக்கு முதலுதவி அளிப்பதே பெரிய சவாலாக இருக்கிறது. எத்தனையோ தரம் இம்மாதிரி சூழ்நிலைகளை சமாளித்துப்பழகியிருந்த எங்கள் கைகள் துரித கதியில் இயங்கி முதலுதவிகளை செய்து முடிக்கிறது.

ஒருவாறு காயப்பட்டோரை ஒரு வானில் ஏற்றி, இல்லை அடைந்து அனுப்பி விட்டு இறந்தவர்களின் சிதைந்து சின்னாபின்னப்பட்ட உடல்களையும் ஒரு ஒதுக்குப்புறமாக தூக்கிப் போடுகிறோம். வேறு வாகனங்கள் இல்லை. போன வான்தான் திரும்பி வரவேண்டும். வானில் ஏற்றிக் கொண்டு போக வசதியாக அங்கங்கே சிதறிக்கிடந்த கால்கள், கைகள் இன்னும் என்னென்னவோ அங்கச்சிதைவுகள், தசைத்துண்டங்கள் எல்லாவற்றையும் கூட்டி அள்ளி ஒரு சாக்கிற்குள் போட்டு அடைகையில் உண்மையிலேயே அருவருத்துப்போகிறது.

"நல்ல வேலைதான் உங்களுக்கு இன்னும் கொஞ்சநாளால பார் பிருந்தா ! பிணங்களுக்கு குழி வெட்டிற வேலையும் உங்களுக்குத்தான்." யாரிதைச் சொன்னது? அறியும் ஆவலில் திரும்பிப் பார்க்கிறேன். "பாரதி ! எங்கே இந்தப்பக்கம்?"

"இங்கைதான் என்டை சித்தி வீடு. குண்டு போட்டது எண்டாப்போல பாக்க வந்தனான்." அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கூ...... ! என்று கூவிக்கொண்டு ஷெல் வரும் சத்தம் எல்லோரும் நிலத்தோடு நிலமாக காதைப்பொத்தியபடி விழுந்து படுக்கிறோம்.

டொம் ! டொம் ! ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு ஷெல்கள். அவை விழுந்த அதிர்ச்சி எங்களை நிலத்திலிருந்து அரையடி தூக்கிப் போடுகிறது. காதுகளைப் பொத்தியிருந்தும் செவிப்பறை வெடித்துவிட்டதோ ? என்று எனக்குச் சந்தேகம். எங்கும் ஒரே தூசி மண்டலம். கந்தக நெடி மூக்கைத் துளைக்கிறது.

யாரோ என் முதுகின் மேல் 'பொத்' என்று விழுகிறார்கள். என் பின் சட்டையில் ஈரத்தை உணர்ந்து அவசரமாக எழுந்து உட்காருகிறேன்.

நான் கண்டது.... கடவுளே ! இப்போது நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது. என் முன்னால் ஒரு ஒற்றைக்கால் துடித்துக்கொண்டிருக்கிறது. இரத்தம் சொட்டும் அந்தக் கால்களில் கொலுசு. மாங்காய் மாங்காயாய்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கண்கள் நிலைகுத்த, இதயம் துடிப்பதை சில கணங்கள் மறந்து விடுகிறது. என் உடல் முழுவதும் ஒரு தரம் குலுங்கியது. உண்மைநிலை என் மூளையில் உறைத்து அவசரமாக தேடுகையில் சற்றுத்தள்ளி பாரதி உணர்விழந்து கிடக்கிறாள், ஒற்றைக்காலுடன் !

என் தலையை ஒரு தரம் குலுக்கி நினைவுகளை அறுத்துக்கொள்கிறேன். கண்களில் அஜந்தாவும் சித்திராவும் எதிரே வருவது படுகிறது.

"என்ன பிருந்தா ! நேற்று நடந்ததை பற்றி நினைச்சுக்கொண்டிருக்கிறியா?" என் அருகில் வந்தபடி அஜந்தா கேட்கிறாள்.

"இல்லை அஜந்தா ! இண்டைக்குக் காலம பாரதி ஒண்டு சொன்னவள். அதைத்தான் யோசிக்கிறாள் போல" இது சித்திரா.

ஆர்வமாக அஜந்தா "அப்பிடி பாரதி என்ன சொன்னவள் ?" என்று கேட்கவும் அதுவரை தலை குனிந்திருந்த நான் சித்திராவின் கையைப் பிடிக்கிறேன். என் கண்களில் இருந்த கெஞ்சலைப்புரிந்து கொண்ட இருவரும் மௌனமாக என் பக்கத்தில் அமர்கிறார்கள்.

என் மனம் மட்டும் என் சொல் கேளாது இன்று நடந்த நிகழ்ச்சிகளில் சுழலத்தொடங்கியது.

இன்று காலை சுமார் ஏழு மணியிருக்கும் இரவு முழுவதும் பெரியாஸ்பத்திரியில் காயப்பட்டிருந்தோருக்கு கண் விழித்து உதவி செய்ததில் கண் வலித்தது. என்ன செய்வது ? தாதிகள் பற்றாக்குறை. கட்டில்கள் நிறைந்து, அறைகளின் தரைகள் நிறைந்து, வாட்டுகளின் வெளி வராந்தாக்களில் கூட பெரும் காயங்களுடன் மக்கள் முனகிக் கொண்டிருக்கையில் இந்த பெரியாஸ்பத்திரியில் வேலை செய்யும் தாதிகள் எப்படி போதும் ?

என்னுடன் பணிபுரிந்த சித்திராவுடன் சேர்ந்து பாரதி கிடத்தப்பட்டிருந்த அறைக்குள் விரைந்து செல்கிறேன். பாரதிக்கு நினைவு திரும்பியிருந்தது. என்னைப் பார்த்து சிரிக்க முயற்சிக்கிறாள். அவள் அருகில் சென்று அவள் கையைப் பிடித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ட காலைக்கூட நீதான் சாக்கிக்கை போட்டு கட்டினியா ?" அவள் கண்களில் கோடாய் கண்ணீர். "வெளிநாடுகளில் துண்டாப்போன காலைக்கூட சேத்துத் தைக்கினமாமே ? இங்கை ஏலாதா ?" சாதாரண காயத்திற்குகூட மருந்தில்லாமல் தவிக்கும் இடத்தில் அவள் கேள்வி அர்த்தமில்லாதது. நான் பதில் சொல்ல முடியாமல் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

அவள் கண்களை துடைத்துக் கொள்கிறாள். என்னைப்பார்த்து சிரித்துக் கொண்டே "ஆனா எனக்கொரு சந்தோஷம் தெரியுமா பிருந்தா ! அடுத்த முறை விளையாட்டுப்போட்டியில் நீதான் சம்பியன் !" அதற்குமேல் கேட்க முடியாமல் வெடுக்கென அவள் கையை விட்டுவிட்டு வெளியே வருகிறேன். வீடு போக பிடிக்காமல் நேராக கல்லூரிக்கு வருகிறேன்.

இதோ இப்போது இந்த மைதானத்திற்கு முன்னால் இருக்கிறேன். எனக்கு தொண்டை வெடிக்கக்கத்தவேண்டும் போல், கதறி அழ வேண்டும் போல் ஒரு ஆவேசம். தலையை பிய்த்துக்கொண்டு, முகத்தில் அறைந்து, இந்த வேப்ப மரத்தில் தலையை மோதி, கீழே விழுந்து புரண்டு அழ வேண்டும்.

எதிரே பார்க்கிறேன். இன்னும் பிள்ளையார் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டு இருக்கிறார். இந்த யுத்தத்தினால் எத்தனை பூக்கள், மொட்டுக்கள், இளம் குருத்துக்கள் கருகிச்சாம்பலாகிக் கொண்டிருக்கின்றன. இவர் சிரித்துக்கொண்டிருக்கின்றாரே!.

பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொள்கிறேன். இல்லை ! நான் அழப்போவதில்லை !. இந்த நிகழ்ச்சிகள் முற்றப்பெறாத தொடர்கதைகள். எல்லாவற்றையும் சந்திக்க என் மனது கல்லாயிக்கவேண்டும். சகல உணர்ச்சிகளுக்கும் சமாதி கட்ட வேண்டும். விழி விளிம்புவரை எட்டிப்பார்த்த கண்ணீரை கண்ணை தட்டி விழித்து உள்ளிழுத்துக்கொள்கிறேன். என் மனதினுள்ளே ஒரு வைராக்கியம் எழுகிறது. மெல்ல சிரித்துக் கொள்கிறேன்.

ஆம் ! இந்த கல்லுப்பிள்ளையாரைப் போல இனி எதற்கும் எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்கப்போகிறேன். சிரித்துக்கொண்டே.... !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம் காத்த சந்திரமதி



எல்லோரும் (பாட்டு)

தந்தனத்தோம் என்று சொல்லியே ஏ!
தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசை பாட வில்லிசை பாட
வந்திருந்தோம் கணபதியே

குற்றம் குறை பல இருக்கும் – அவற்றை
பொறுத்தருள்வாய் கணபதியே
குற்றம் குறை பல இருக்கும் – அவற்றை
பொறுத்தருள்வாய் கணபதியே

வந்திருக்கும் சபையோரே எங்கள்
சபையோரே
சொல்லுகின்றோம் வணக்கம் இங்கே.
வந்திருக்கும் சபையோரே எங்கள்
சபையோரே
சொல்லுகின்றோம் வணக்கம் இங்கே.

வணக்கம். வணக்கம்.

ஞானி
வணக்கம் சொல்லிட்டியள். இனி விஷயத்தைச் சொல்லுங்கோ.

எல்லோரும் (பாட்டு)
சத்திய சீலனவன் அயோத்தியை
ஆண்டிருந்தான் – அவன்
வாய்மையில் வெற்றி பெற முன்னே
நின்று உழைத்தது யாரோ
சத்திய சீலனவன் அயோத்தியை
ஆண்டிருந்தான் – அவன்
வாய்மையில் வெற்றி பெற முன்னே
நின்று உழைத்தது யாரோ

கேட்டிடுவீர் அவையோரே சொல்ல
வந்தோம் நல்ல கதை.
கேட்டிடுவீர் அவையோரே சொல்ல
வந்தோம் நல்ல கதை.

கீதா
என்ன அது நல்ல கதை.

தலைவி
அதுதான் அரிச்சந்திரன் கதை.

கீதா
அரிச்சந்திரன் கதையா. சத்தியம் காத்த சந்திரமதி கதையல்லோ ?

தலைவி
இரண்டும் ஒரு கதைதான். இது வித்தியாசமான கோணத்தில் சொல்லப்போகிறோம்.

விமலா
வித்தியாசமான கோணத்திலா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி
ஆமாம். அவனின் வெற்றிக்குக் காரணமாக முன்நின்று உழைத்த ஒரு உத்தமியின் கதை இது.

கீதா
அப்படியும் ஒரு கதையா ?

விமலா
வெற்றி மீது வெற்றி வந்து என்னைச்
 – சேரும்.
அதை வாங்கித் தந்த பெருமைகள்
 – எல்லாம் உன்னைச் சேரும்.

அனு
நீங்கள் இருங்கோ. இருங்கோ. கனக்கக் கஷ்டப் படாதேங்கோ. நீங்கள் சொல்லுங்கோ கதையை.

தலைவி
முன்னொரு காலத்திலே.

எல்லோரும்
ஆமா.

தலைவி
இந்திரலோகத்திலே

எல்லோரும்
ஆமா

தலைவி
இதென்ன. ஒரேயடியாய் ஆ..ஆமா போடிறியள். முன்னொரு காலத்திலே இந்திரலோகத்திலே ஒரு பெரிய சர்ச்சை.

கீதா
ஆருக்கிடையில் சர்ச்சை ?

தலைவி
இரண்டு முனிவர்களுக்கிடையில் சர்ச்சை. அவர்கள் ஆதி காலம் முதலே கீரியும் பாம்பும் போல இருந்தவர்கள்.

அனு
ஆஆஆஆ

விமலா
என்ன கனைக்கிறீர் ?

அனு
நான் கண்டுபிடித்து விட்டேன்.

கீதா
என்ன கண்டுபிடித்து விட்டீர் ?

அனு
அந்த முனிவர்கள் வசிஷ்டரும் விசுவாமித்திரரும்.

விமலா
பரவாயில்லை. அவ்வப்போதாவது உமக்கு மூளை வேலை செய்கிறது.

தலைவி
சரி சரி, அவர்களுக்கு இடையில் உள்ள சர்ச்சை என்ன என்றால் இந்த உலகிலேயே செய்வதற்குக் கஷ்டமான செயல் என்ன ? வாய்மை. எப்பொழுதும் உண்மையே பேசுதல்.

கீதா
ரொம்பக் கஷ்டமான செயலெல்லோ.

தலைவி
ஆமாம். ஆமாம். வசிஷ்டர் சொன்னர், அப்படியும் ஒருவன் இப்போது வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இருக்கிறான். விசுவாமித்திரர் சொன்னார். இருக்க முடியாது.

எல்லோரும்
இருக்கவே முடியாது.

தலைவி
இல்லை. இல்லை. அரிச்சந்திரன் இருக்கிறான். என்று வசிஷ்டர் சொன்னார்.

ஞானி
விசுவாமித்திரர் என்ன சொன்னார்?

தலைவி
நீர் சொல்லி நான் நம்பப்போவதில்லை. நான் பரீட்சித்துப் பார்க்கிறேன் என்று புறப்பட்டார். போட்டி தொடங்கியது.

அனு
ஒன் யுவர் மாக்ஸ். கெற் செற். றெடி. ஸ்றெடி கோ சொல்லவா?

விமலா
ஆரது சில்வண்டு மாதிரி ? நீங்கள் கதையைச் சொலுங்கோ.

தலைவி
சரி. நீங்கள் ஒரு பாட்டு பாடுங்கோ.

அனு (பாட்டு)
ஆகா இன்பங்கள் பல கோடி – அன்று
அரிச்சந்திரனின் வாழ்வினிலே
வாழ்வினிலே வாழ்வினிலே
அன்பாய் மனைவி சந்திரமதி
அருமைப் பிள்ளை லோகிதாசன்
லோகிதாசன் லோகிதாசன்

நீதி நேர்மை தவறா மன்னன் மக்கள்
விரும்பும் ராஜனவன் ராஜனவன்
அவனின் மனைவி சந்திரமதி – அவள்
பெண்மைக்கு இங்கே பெருமை
தந்தாள் பெருமை தந்தாள்
(ஆகா இன்பங்கள்..)

தலைவி
இப்படியாக அவர்கள் வாழ்ந்து வரும் காலத்திலே வந்ததே சோதனை.

கீதா
எப்படி வந்தது?

தலைவி
விசுவாமித்திரர் வடிவில் வந்தது.

விமலா
என்ன நடந்தது?

தலைவி
முதலில் விசுவாமித்திரர் அரிச்சந்திரனின் அரச சபைக்குச் சென்றார். தன் யாகத்துக்குப் பொன் தந்து உதவுமாறு கேட்டார்.

விமலா
இத்தனை பொன்னா ?

தலைவி
இல்லை. மலையளவு பொன்.

விமலா
போச்சடா

தலைவி
அரிச்சந்திரனிடம் வாக்குப் பெற்றுக் கொண்ட விசுவாமித்திரர், மன்னா தற்சமயம் நீ எனக்குத் தந்த பொன்கள் உன்னிடமே இருக்கட்டும். எனக்கு வேண்டும்போது நான் அவற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்கிறேன் என்று சொன்னார்.

சீதா
ஏன் அப்படிச் சொன்னார் ?

விமலா
விஷயம் இல்லாமல் இருக்காது.

தலைவி
ரொம்பச் சரி. விசுவாமித்திரர் மேலும் மேலும் பல துன்பங்கள் அரிச்சந்திரனுக்குக் கொடுத்தார். கடைசியாக அவனுடைய இராச்சியத்தையே பறித்துக் கொண்டார்.

விமலா
சோதனைமேல் சோதனை போதுமடா சாமி வேதனைதான்...

தலைவி
கொஞ்சம் பொறுங்கோ கொஞ்சம் பொறுங்கோ. சோதனை இன்னும் முடியவில்லை. இராச்சியத்தை இழந்து நின்ற அரிச்சந்திரனிடம் விசுவாமித்திரர் என்ன கேட்டார் தெரியுமா ?

அனு
நான் உன்னிடம் கேட்டு வைத்த பொன்னை இப்பொழுது தா.

தலைவி
ஆஆ.. அப்பிடிக் கேட்டார்.

ஞானி
ஐயோ பாவம் அரிச்சந்திரன் என்ன செய்தான் ?

தலைவி
வேதனை கொண்ட அரிச்சந்திரன் தனது புன்னகை மாறா மனைவி முகம் பார்த்து உறுதி கொண்டான். உறுதி கொண்ட அரிச்சந்திரன் முனிவரிடம் பொன்னைத் தருவதற்கு அவகாசம் கேட்டான்.

எல்லோரும்
ஆமா.

தலைவி
பொன்னைப் பெறுவதற்கு முனிவர் அனுப்பிய சீடன் நட்சத்திரேயனுடனும் மகன் லோகிதாசனுடனும் காட்டு வழியே காசியை நோக்கி நடந்தது அத்தம்பதிகளின் பயணம்.

எல்லோரும்
ஆமா.

(பாட்டு)
பயணம் போனார்கள் அவர்கள் பயணம் போனார்கள்.
நட்சத்திரேயன் தொல்லைகள் செய்யப் பயணம் போனார்கள்.
பயணம் போனார்கள் அவர்கள் பயணம் போனார்கள்.
நட்சத்திரேயன் தொல்லைகள் செய்யப் பயணம் போனார்கள்.

சோர்ந்ததுபோல் விழுந்திடுவான்
நட்சத்திரேயன்
சேர்ந்து செல்ல நடப்படிப்பான்
நட்சத்திரேயன்
சோர்ந்ததுபோல் விழுந்திடுவான்
நட்சத்திரேயன்
சேர்ந்து செல்ல நடப்படிப்பான்
நட்சத்திரேயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் அந்த அரிச்சந்திரன் சந்திரமதி
அல்லோ
அவனை நடத்திக்கூட்டி மெல்லப்
பயணம் போனார்கள்
பாவம் அந்த அரிச்சந்திரன் சந்திரமதி
அல்லோ
அவனை நடத்திக் கூட்டி மெல்லப்
பயணம் போனார்கள். (பயணம்)

தலைவி
இவ்வாறு செல்கையிலே.

எல்லோரும்
ஆமா.

தலைவி
விசுவாமித்திரர் சூழ்ச்சியால்

கீதா
சூழ்ச்சியால்

தலைவி
கடும் வெய்யில்

அனு
மரங்கள் எல்லாம் காய்ந்து விட்டன.

கீதா
தண்ணீரே இல்லை.

விமலா
நாவோ வறண்டுவிட்டது.

தலைவி
இந்த நட்சத்திரேயன் தாகம் தாகம் தாகம் என்று ஓலமிட்டான். தண்ணீர் தேடச் சென்ற அரிச்சந்திரனைக் காணவில்லை. நட்சத்திரேயன் அரிச்சந்திரனை இகழ்வதைப் பொறுக்க முடியாத சந்திரமதி...

விமலா
சந்திரமதி ?

தலைவி
பாடினாள்

எல்லோரும் (பாட்டு)
இறைவா உனையே சரணடைந்தேன்
நட்சத்திரேயன் தாகம் தீர்ப்பாய்
இறைவா உனையே சரணடைந்தேன்
நட்சத்திரேயன் தாகம் தீர்ப்பாய்

காய்ந்த மரங்கள் காய்த்துக் குலுங்க
கருணைத் தெய்வமே வரமருள்வாய்
காய்ந்த மரங்கள் காய்த்துக் குலுங்க
கருணைத் தெய்வமே வரமருள்வாய்

தலைவி
அப்போது ஒரு அதிசயம் நடந்தது.

கீதா
என்ன அதிசயம் ?

தலைவி
காய்ந்த மரங்களில் கனிகள் வந்தது. நட்சத்திரேயனின் தாகமும் நீங்கியது.

அனு
ஓ... அப்படியா.

தலைவி
ஆமாம்.

ஞானி
பிறகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி

தொடர்ந்தது அவர்கள் பயணம். விசுவாமித்திரர் வஞ்சகத்தால் நெருப்பு வந்தது.

எல்லோரும்

நெருப்பு, நெருப்பு, அச்சச்சோ அச்சச்சோ, பயர் பிறிகேட் பயர்பிறிகேட். பயர் பிறிக்கேட்டைக் கூப்பிடுங்கோ.

தலைவி

அமைதி, அமைதி, அமைதி. நெருப்பு வந்தது இங்கை இல்லை. காட்டிலை.

அனு

ஆஆஆ

தலைவி

சந்திரமதி அக்கினிதேவனை வணங்கினாள்.

எல்லோரும் (பாட்டு)

கானகத்தே கணவனுடன் மகனும்
நானும்
ஊணுறக்கம் இல்லாமல் ஓடுகின்றோம்.
கானகத்தே கணவனுடன் மகனும்
நானும்
ஊணுறக்கம் இல்லாமல் ஓடுகின்றோம்.

யானுன்னைத் தொழுகின்றேன்
அக்கினிதேவா
ஊனத்தை அளிக்காது ஒதுங்குவாயே.
யானுன்னைத் தொழுகின்றேன்
அக்கினிதேவா
ஊனத்தை அளிக்காது ஒதுங்குவாயே.

தலைவி

நெருப்பு அணைந்து விட்டது. இவ்வாறு இன்னல்களைத் தாண்டிக் காசியை அடைந்தார்கள்.

விமலா

ஆ... காசி வந்திட்டுதா ? கடனை அடைக்க வேணுமே.

கீதா

அதுதானே. என்ன செய்தான் அரிச்சந்திரன் ?

தலைவி

அரிச்சந்திரன் திகைத்தான். அதனைத் தாங்கமுடியாத சந்திரமதி தன்னை விற்று அந்தக் கடனை அடைக்குமாறு வேண்டினாள்.

ஞானி

ஐயோ பாவம்.

தலைவி

அரிச்சந்திரனும் வேறு வழியில்லாது அவ்வாறே செய்து விசுவாமித்திரர் கடனை அடைத்தான்.

எல்லோரும் (பாட்டு)

மாலையிட்ட நாள் முதலாய் இன்றுவரை
பிரிந்ததில்லை
என் கடன் தீர்ப்பதற்கென்றோ–
சந்திரமதி
இன்று நீ பிரிந்து சென்றாயோ –
உயிரே
இன்று நீ பிரிந்து சென்றாயோ.

மாலையிட்ட நாள் முதலாய் இன்றுவரை
பிரிந்ததில்லை
என் கடன் தீர்ப்பதற்கென்றோ–
சந்திரமதி
இன்று நீ பிரிந்து சென்றாயோ –
உயிரே
இன்று நீ பிரிந்து சென்றாயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி
இவ்வாறு அரிச்சந்திரன் சோகத்தில் ஆழ சந்திரமதி தன் மகனுடன் அடிமையாகச் சென்றாள். அங்கும் கொடுமை.

எல்லோரும்
கொடுமை கொடுமை. கொடுமையோ கொடுமை.

தலைவி
பொறுமையின் சிகரம் அல்லவா சந்திரமதி. அனைத்தையும் பொறுத்துக் கொண்டாள். ஆனால்

கீதா
ஆனால்

தலைவி
ஒரு நாள் விசுவாமித்திரர் அனுப்பிய அரவம் லோகிதாசனைத் தீண்ட அவன் உயிர் பிரிந்தது.

எல்லோரும்
சுச் சுச் சுச் சுச்.

தலைவி
செய்தி கேட்ட சந்திரமதி நள்ளிரவில் அவ்வுடலை ஏந்தி சுடு காட்டிற்குச் செல்கிறாள்.

தலைவி (பாட்டு)
கள்ளி கபடி லில்லி சுடு காட்டில் என்னடி
ஜொல்லி
எல்லி வந்தனையோடி இல்லை ஏற்க
வந்தனையோடி
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹா
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹா
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹா
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹா
ஊ.... கீ....க்....ஊ.....

நாயும் நரியும் குஞ்சும் இந்த
நள்ளிரவினில் அஞ்சும்
பேயும் அஞ்சும் நேரம் இங்கு
பிணத்தைச் சுமந்த கோலம்
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹா
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹா
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹா
அஹஹ்ஹ ஹஹ்ஹ ஹா

அனு
அங்கே என்ன நடந்தது ?

தலைவி
அங்கே இவ்வாறு கூறியபடி சுடலைக் காப்போன் வந்தான். நீ இப்பிணத்தைத் தகனம் செய்ய வேண்டுமாயின் எஜமானனுக்கும் எனக்கும் வேண்டிய பணத்தைத் தந்துவிட்டு செய்யலாம்.

விமலா
சந்திரமதியிடம் பணம் ஏது ?

எல்லோரும்
அதுதானே.

தலைவி
ஆமாம். சந்திரமதி தன் இயலாமையைச் சொல்கிறாள். உடனே சுடலைக் காப்போன் உன் கழுத்தில் உள்ள தாலியை விற்று என் எஜமானுக்காவது பணத்தைக் கொடுக்கலாமே ? என்று சொன்னான்.

அனு (பாட்டு)
நாடும் நகரும் போனதே என் நாதனும்
பிரிந்தானே
காடு போன மகனும் இறந்தான் என்
கற்பும் போனதா ?
இறைவா நீ சொல்லையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணாளனக்கு மட்டும் தெரியும்
மாங்கல்யம் இது அல்லவா – இந்த
புலையனுக்கும் தெரிந்ததே இது என்ன
சோதனை

விமலா
என்ன சத்தத்தைக் காணோம் ?

அனு
துக்கம் தொண்டையை அடைக்கிறது. சொல்ல முடியவில்லை.

தலைவி
உக்கும். இப்பாடலைக் கேட்டதும் சுடலைக் காப்போன் தேவி இது நம்மகனா ? என்று கேட்டான்.

கீதா
ஒஹோ அது அரிச்சந்திரனா?

தலைவி
ஆமாம். விசுவாமித்திரர் சுடனை அடைத்தபின் அரிச்சந்திரன் நட்சத்திரேயனுக்குக் கூலி கொடுப்பதற்காக தன்னையே சுடலைக் காப்போனுக்கு விற்றுக் கொண்டான்.

கீதா
இப்பதான் எல்லாம் விளங்குது.

அனு
ஆஆஆ பிறகு என்ன செய்தார்கள் ?

தலைவி
சந்திரமதி பணம் பெற்று வருவதற்காகத் திரும்பினாள்.வழியிலே லோகிதாசனைப் போன்ற ஒரு சிறுவனின் பிணத்தைக் கண்டு மகனை நினைத்து அழலானாள்.

விமலா
ஓ ஹொஹ் ஹொஹ் ஹொஹ் ஹோ ஒஒஒ.

அனு
பொறுங்கோ. பொறுங்கோ

கீதா
இதுவும் விசுவாமித்திரர் சூழ்ச்சிதான். நான் சொல்லுகிறது சரியோ ?

தலைவி
மிகவும் சரி, அந்த நேரம் என்ன நடந்தது தெரியுமோ? காவலாட்கள் வந்து சந்திரமதியைக் கைது செய்து கூட்டிச் சென்றார்கள்.

விமலா
ஏன் அப்படிச் செய்தார்கள் ?

அனு, கீதா, ஞானி
அதுதானே.

தலைவி
ஏனென்றால் இறந்து கிடந்தது மன்னனின் மகன். எனவே சந்திரமதிக்கு மரண தண்டனை கிடைத்தது.

விமலா
அட கடவுளே

கீதா
மிகவும் அநியாயமாய் இருக்கிறதே.

தலைவி
அதுமட்டும் அல்ல. மரண தண்டனை எங்கே நிறைவேற்றப்பட இருந்தது தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதா
எங்கே ?

விமலா
சுடலையாய் இருக்குமோ ?

தலைவி
சரியாய் யூகித்தீர்கள். அதுவும் அரிச்சந்திரன்கையால் நிறைவேற்றப்பட இருந்தது.

அனு
பிறகென்ன நடந்தது ?

தலைவி
துயரடைந்த அரிச்சந்திரன் சொன்னான், கற்பூரத்தைப் போல் ஒளி தந்து ..

எல்லோரும்
ஆமா.

தலைவி
என் வாழ்வினில் புகழ் சேர்த்தாய் கண்ணே.

எல்லோரும்
கண்ணே.

தலைவி
நான் வாய்மையில் வெற்றிபெற உன்னையே தந்தாய் பெண்ணே

எல்லோரும்
பெண்ணே

தலைவி
என்று கூறிய அரிச்சந்திரனிடம் தனது இறுதி வணக்கத்தைச் செலுத்திவிட்டு சந்திரமதி வெட்டுப் பாறையில் கழுத்தை வைத்தாள்.

அனு
ஐயையோ எனக்குப் பயமாய் இருக்கு பயமாய் இருக்கு.

தலைவி
பயப்படாதே. வாளை ஓங்கிய அரிச்சந்திரன் செவிகளில் "நில்" என்ற கட்டளை கேட்டது.

அனு
அப்பாடா ம்ம்ம்.

தலைவி
வந்தது யார் தெரியுமோ?

விமலா
வேறு யார் விசுவாமித்திரர்தான்.

கீதா
வந்து என்ன செய்தார்?

தலைவி
அரிச்சந்திரா. இப்பொழுதேனும் நீ ஒரேயொரு பொய்யைச் சொல்லு. உன் கஷ்டங்களை எல்லாம் நான் தீர்த்து வைக்கிறேன் என்று விசுவாமித்திரர் சொன்னார்.

அனு
அவருக்கு அப்பவும் ஒரு நப்பாசை.

கீதா
பிறகு விசுவாமித்திரர் சொன்னதுக்கு அரிச்சந்திரன் என்ன செய்தான் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி
அரிச்சந்திரன் ஏதும் கூறுமுன் சந்திரமதி சொன்னாள்.

விமலா
என்ன சொன்னாள். என்ன சொன்னாள்.

தலைவி
முனிவரே தாங்கள் சொல்வது சரியல்ல. தலைவரே நீங்கள் என் தலையை வெட்டுங்கள்.

எல்லோரும்
பிறகு.

தலைவி
உடனே அரிச்சந்திரன் சொன்னான் என் மனைவி குற்றம் ஏதும் செய்திராவிட்டால்...

எல்லோரும்
குற்றம் ஏதும் செய்திராவிட்டால்....

தலைவி
நான் வாய்மையைக் கடைப்பிடிப்பது உண்மையாக இருந்தால்.....

எல்லோரும்
உண்மையாக இருந்தால்

தலைவி
இந்தவாள் அவள் கழுத்தில் மாலையாக விழட்டும்.

எல்லோரும்
மாலையாக விழட்டும். ஆமாம் மாலையாக விழட்டும்.

(பாட்டு)
வாளை ஓங்கினான் வாளை
ஓங்கினான்
கண்ணை மூடினான் கடவுளை
நினைத்தான்
வாளை ஓங்கினான் வாளை
ஓங்கினான்
கண்ணை மூடினான் கடவுளை
நினைத்தான்

புதுப்பொலிவடைந்தான் மங்கை
கழுத்தில்
மின்னலைப் போல விழுந்ததே மாலை
புதுப்பொலிவடைந்தான் மங்கை
கழுத்தில்
மின்னலைப் போலே விழுந்ததே மாலை.

தலைவி
தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். இறந்த சிறுவர்கள் உயிர் பெற்றெழுந்தார்கள்.

ஞானி
விசுவாமித்திரர் என்ன செய்தார் ? அவருக்கு அசடு வழிந்ததா?

தலைவி
விசுமித்திரர் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு தான் பெற்றுக் கொண்ட நாடு நகரங்களையும் தன் தவ வலிமையிற் பாதியையும் அரிச்சந்திரனிடம் கொடுத்தார்.

எல்லோரும் (பாட்டு)
சத்தியத்தின் சீலன் அவன்
அரிச்சந்திரன் – அவனுக்கு
உத்தமியாம் பத்தினியாள் சந்திரமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுங்கோ
சத்தியத்தின் சீலன் அவன்
அரிச்சந்திரன் – அவனுக்கு
உத்தமியாம் பத்தினியாள் சந்திரமதி

எத்தனையோ இன்னல்கள்
வந்திருந்தும் – அந்த
பத்தினியின் பணி அவனைக்
காத்ததம்மா

சொல்லுங்கோ

எத்தனையோ இன்னல்கள்
வந்திருந்தும் – அந்த
பத்தினியின் பணி அவனைக்
காத்ததம்மா

என்ன

காத்ததம்மா

சொல்லுங்கோ

காத்ததம்மா

தலைவி
அரிச்சந்திரனுக்கு ஈடாய் நின்று சத்தியம் காத்தது யார்?

எல்லோரும்
சந்திரமதி. சந்திரமதி. சந்திரமதி.

(பாட்டு)
தந்தனத்தோம் என்று சொல்லியே ஏ
தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசை பாட வில்லிசைபாட
வந்திருந்தோம் சபையோரே
குற்றம் குறை பல இருக்கும் – அவற்றை
பொறுமையுடன் பொறுத்திருந்தீர்
குற்றம் குறை பல இருக்கும் – அவற்றை
பொறுமையுடன் பொறுத்திருந்தீர்

வந்திருக்கும் சபையோரே – எங்கள்
சபையோரே
சொல்லுகின்றோம் வணக்கம் இங்கே
வந்திருக்கும் சபையோரே – எங்கள்
சபையோரே
சொல்லுகின்றோம் வணக்கம் இங்கே.
வணக்கம் வணக்கம் வணக்கம்.

**ஆக்கியோர்**
*செல்வி பிருந்தா தவக்குமாரன்*
*செல்வி அனுராதா அம்பலவாணர்*

**உதவி**
*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*திருமதி விமலா மணிவாசகன்*

**பங்கு பற்றியவர்கள்**
*செல்வி பிருந்தா தவக்குமாரன்*
*(தலைவி)*
*செல்வி அனுராதா அம்பலவாணர்*
*(அனு)*
*செல்வி கீதா சேனாதிராஜா (கீதா)*
*செல்வி ஞானலட்சுமி பாலசிங்கம்*
*(ஞானி)*
*திருமதி விமலா மணிவாசகன்*
*(விமலா)*
*செல்வி சாந்தி தருமலிங்கம் (சுருதி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையில் ஒரு துளி

விமலா மணிவாசகன்

ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயம்
ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயம்
ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீகிருஷ்ண ஜெயம்

நான் ஞானியும் அல்ல வேதங்கள் கற்றதும் இல்லை
மந்திர ஆசார முறைகளும் தெரியாது
அன்பால் உன் திருவடி தொழுகின்றேன் - உன்
அருளால் உன் மகிமையும் உணர்ந்தேன்

துவாதசாதித்தருள் விஷ்ணு நீயானாய்
சப்த மருத்துவரில் மாரீசி நீயானாய்
பிரகாச சஸ்துக்களில் எங்கும் பிரகாசிக்கும் ஆதித்தன் நீயானாய்
வானத்தில் ஒளிரும் நட்சத்திரங்களுள் சந்திரன் நீயானாய்

வேதங்களில் சாமவேதம் நீயானாய்
தேவர்களில் இந்திரன் நீயானாய்
இந்திரியங்களில் மனம் நீயானாய்
சர்வப் பிராணிகளின் காரண காரியங்களுள் சேதனம் நீயானாய்

உருத்திரர்களுள் மந்திரரூபமான சங்கரன் நீயானாய்
யட்சரருள் குபேரன் நீயானாய்
மலைகளுள் மகம்மேரு நீயானாய்
அஷ்டவசுக்களுள் அக்னி நீயானாய்

சேனாதிபதிகளுள் தேவசேனாதிபதி நீயானாய்
நீர் நிலைகளுள் கடல் நீயானாய்
புரோகிதர்களுள் பிரகஸ்பதி நீயானாய்
யாகங்களுள் ஜப யாகம் நீயானாய்

சலனமற்ற பொருட்களில் இமாசலம் நீயானாய்
மகரிஷிகளுள் பிருகுரிஷி நீயானாய்
வாக்குகளில் பிரணவமாகிய ஓங்காரம் நீயானாய்
மரங்களில் அரசு நீயானாய்

தேவரிஷிகளில் நாரதர் நீயானாய்
கந்தர்வருள் சித்திராதன் நீயானாய்
சித்தர்களில் கபிலமுனி நீயானாய்
அசுவங்களில் உச்சைச்சிவம் என்ற அசுவம் நீயானாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளுள் ஐராவதம் நீயானாய்
மனிதர்களுள் அரசர் நீயானாய்
ஆயுதங்களுள் வச்சிராயுதம் நீயானாய்
சர்ப்பங்களுள் வாசுகி நீயானாய்

நாகங்களுள் ஆதிசேடன் நீயானாய்
பசுக்களில் காமதேனு நீயானாய்
ஜலத்தில் சஞ்சரிப்பவைகளில் வருணன் நீயானாய்
தண்டிப்பவர்களில் யமன் நீயானாய்

காமங்களுள் புத்திரோத்பத்திக் கேதுவான காமம் நீயானாய்
அசுரர்களுள் பிரகலாதன் நீயானாய்
கணிக்கப்பட்டவைகளுள் காலம் நீயானாய்
பட்சிகளுள் கருடன் நீயானாய்

மிருகங்களுள் சிங்கம் நீயானாய்
வேகமாய்ச் செல்லும் வஸ்துக்களுள் வாயு நீயானாய்
யுத்த வீரர்களுள் இராமன் நீயானாய்
மச்சங்களுள் மகரம் நீயானாய்

நதிகளில் கங்கா நதி நீயானாய்
வித்தைகளுள் பிரம்ம வித்தை நீயானாய்
அட்சரங்களுள் 'அ' காரம் நீயானாய்
அழிவற்ற காலம் நீயானாய்

இருவினைப் பயன்களைக் கொடுப்பவனும் நீயானாய்
உயிர்களைச் சங்காரம் செய்யும் மிருத்யு நீயானாய்
அவ்வுயிர்களை உற்பவம் செய்பவனும் நீயானாய்
பெண்களில் சப்த மாதர் நீயானாய்

ஆறு இருதுக்களில் வசந்த இருது நீயானாய்
மாதங்களுள் மார்கழி மாதம் நீயானாய்
சந்தசுக்குள்ளே காயத்திரி நீயானாய்
வஞ்சிப்பவைகளுள் சூது நீயானாய்

முயற்சியுடையாரிடம் முயற்சி நீயானாய்
ஜெயசீலர்களிடம் வெற்றி நீயானாய்
பலசாலிகளிடம் வல்லமை நீயானாய்
சாத்துவீக புருடரிடம் தர்மம், சாந்தம், வைராக்கியம் நீயானாய்

ஞானிகளிடமுள்ள ஞானம் நீயானாய்
யாதவரிடம் கிருஷ்ணன் நீயானாய்
சாஸ்திரவான்களுள் சுக்கிரன் நீயானாய்
பாண்டவர்களுள் தனஞ்சயன் நீயானாய்

முனிவர்களுள் வேதவியாசர் நீயானாய்
மறைவான பொருள்களுள் மௌனம் நீயானாய்
இப்பிரபஞ்சமனைத்துக்கும் சேதனரூபமான காரணம் நீயானாய்
எல்லாப் பதார்த்தமும் பரமேஸ்வரனாகிய நீயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் சரணம் சரணம் ஐயா
திருமால் சரணம் சரணம்

விஷ்ணு சரணம் சரணம் ஐயா
விஷ்ணு சரணம் சரணம்

ராமா சரணம் சரணம் ஐயா
ராமா சரணம் சரணம்

கிருஷ்ணா சரணம் சரணம் ஐயா
கிருஷ்ணா சரணம் சரணம்

ஓம் ஹரி ஓம் ஓம் ஹரி ஓம்
ஹரி ஓம் ஹரி ஓம் ஓம் ஹரி ஓம்
ஓம் ஹரி ஓம் ஓம் ஹரி ஓம்
ஹரி ஓம் ஹரி ஓம் ஓம் ஹரி ஓம்




அனுராதா அம்பலவாணர்

மங்கையர் நாம் ஒன்று கூடி பாடிடுவோம் - எங்கள்
மங்களத்தாய் இந்து மகளிர் கல்லூரியை வணங்கிடுவோம்
நங்கையர் நாம் தேனிசையில் பாடிடுவோம் - என்றும்
நானிலத்தில் அறிவுடனும் புகழுடனும் வாழ்ந்திடுவோம்

| | | |
|---|---|---|
| ஸ க ம பா ; , ம ப நீ | / ஸ்ா நி த ப ம | / பா ; ; // |
| ஸ்ா ரி நி ஸ்ா பா நி ம பா | / கா ம க ரி நி | / ஸா ; ; // |
| ஸகா கமா மபா பநீ | / நீ ஸ் கர் ரி நி | / ஸ்ா ; ; // |
| நிஸ்க்ரிஸ்நி ஸ்ா நி த பா | / ஸ் நி த பா ம | / கா ரி ஸ நீ // |

பல்துறையிலும் பண்பாட்டிலும் மகளிர் நாம் - இன்று
பாரினிலே சிறப்புடனே வாழ்ந்திருக்க வழிவகுத்தாய்
ஒன்று கூடி உன்பாதம் பணிந்திடுவோம் - இங்கு
ஓங்கு தமிழில் உன் புகழை பெருமையுடன் பாடிடுவோம்

| | | |
|---|---|---|
| ஸ்ஸ் ஸ்ா ; ; க்ரிஸ்நி | / ஸ்ஸ் ஸ்ா ; | / ; ; ; // |
| ஸ்ா நிதபம கா ரிஸநீ | / ஸஸ ஸா ; | / ; ; ; // |
| ஸகம கமப மபநி பநிஸ் | / நி ஸ் கர் ரி நி | / ஸ்ா நி த பா // |
| ஸ்நித பாம காரி ஸநீ | / ஸஸ ஸா; | / ; ; ; // |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலு கோடிப் பாடல்

திருமதி. திலகவதி வீரசிங்கம்

தமிழிலக்கிய வரலாற்றிலே பல புலவர்கள் தோன்றித் தமிழை வளர்த்து வந்துள்ளதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்று சங்ககால இலக்கியங்கள் இன்றும் நமக்கு அவர்தம் பெருமைகளை, பாடலின் சிறப்புகளை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

காளமேகப் புலவர், ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், புகளேந்தி, திருவள்ளுவர் போன்ற பேர்பெற்ற புலவர்கள் சாகாவரம் பெற்றவர்களாக என்றும் தமிழுள்ளவரை வாழ்ந்து கொண்டே–யிருப்பார்கள். சிலேடை பாடுவதிலே வல்லவர் காளமேகப் புலவர். இம்மென்று சொல்லமுதல் அறுநூறு எழுநூறு பாடல்களைப் பாடக்கூடிய வல்லமை பெற்றவர் கம்பர். நளவெண்பா பாடிய புகழேந்திப் புலவர் "வெண்பாவிற் புகழேந்தி" என்னும் பெருமையைப் பெறுகின்றார். உலக மொழியாக விளங்கும் திருக்குறளை தமிழுக்குத் தந்தவர் திருவள்ளுவர். "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாரதியாரால் போற்றப்படுகின்ற புலவர்களைப் பெற்ற பெருமை எங்களுக்குண்டு.

அந்த வரிசையிலே பெண் புலவராகப் பெருமை பெற்றவர் ஔவையார். "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா" என்று முருகப் பெருமானாலேயே ஆட்கொள்ளப்பட்ட பெருமை ஔவையாருக்குண்டு. "அரியது கேட்கின் வரிவடி வேலோய் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று மனித வாழ்வின் மேம்பாட்டினைப் புகழ்ந்து கூறியவர் ஔவையார். கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு என்று கல்விக்கு ஓர் எல்லையே இல்லை என்றும், கல்வியறிவில்லாதவனைப் பெற்றவளை அறைய வேண்டும் என்றும் கல்வியின் சிறப்பினை விரிவாகப் பாடியுள்ளார் ஔவையார்.

சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலைக்குப் போகும் செய்தியறிந்து தானும் போக வேண்டும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிருப்பினால் அவசரம் அவசரமாக பூசையை நிகழ்த்திய ஔவையைப் பார்த்து "ஆறுதலாகப் பூசையைச் செய் நான் உன்னைக் கைலை சேர்க்கின்றேன்'' என்று கூறிய விநாயகர் தமது துதிக்கையாலேயே ஔவையைத் தூக்கி கைலையில் விட்ட பெருமை வேறு யாருக்குத்தான் கிடைக்கும்.

*சீதக்களபச் செந்தாமரைப் பூ என்று*
*பாடத் தொடங்கி*
*சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான*
*அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே*

என்று விநாயகரைத் தொழுதவர் ஔவையார்.

சிலம்பி என்னும் தாசி ஐந்நூறு பொன் கொடுக்கக் கம்பர் அரைவாசிப் பாடலை சிலம்பியின் மண்சுவரிலே எழுதிவிட்டுப் போகின்றார். அவ்விடத்திற்குக் களைப்பு மேலீட்டினால் ஔவையார் வந்து தங்கியிருக்கும் பொழுது அந்தச் சிலம்பி என்பவள் அவரது களைப்பைப் போக்க கூழ் கொடுத்து உபசரிக்கிறாள். அவ்வேளை கம்பரால் எழுதப்பட்ட அசைவாசிப் பாடல் ஔவையின் கண்ணிலே தென்படுகின்றது. உடனே ஔவையார் ஈற்றிரு அடிகளையும் எழுதி அப்பாடலைப் பூர்த்தி செய்கின்றார்.

இந்தச் செய்தி கம்பர் காதிலே விழுகின்றது. அவர் பொறாமையால் ஔவையை அடியென்று சொல்ல விரும்பி

*"ஒரு காலடி நாவிலைப் பந்தலடி"*

என்று சிலோடையாகச் சொல்லிப் பொருள் கேட்ட பொழுது

*"கூழுக்குப் பாடி"*

என்று கம்பர் தன்னை அவமானப்படுத்தியதை மனதிலே கொண்டு

*"எட்டே கால் லட்சணமே"*

என்று தொடங்கி

*"ஆரையடா சொன்னாயடா"*

என்று ஈற்றடியிலே அடா போட்டுப் பாடி ஆரைக்கீரைதான் நீர் கேட்ட பொருள் என்று உரைத்த நெஞ்சுரம் படைத்தவர் ஔவையார்.

ஒரு பொழுது நாளை விடிவதற்குள் நாலு கோடிப் பாடல்கள் பாட வேண்டுமென்ற மன்னவன் ஆணையைக் கேட்டு புலவர்கள் கதிகலங்கிப்போய் நிற்பதைப் பார்த்தார் ஒவையார். "நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாது போய் நித்திரை கொள்ளுங்கள். நாளை நான் பாடலோடு வருகின்றேன் கலங்க வேண்டாம்'' என்று அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார் ஔவையார்.

மறுநாட் காலை கையிலே ஏடுமின்றி புன்னகையோடு வந்த ஔவையைப் பார்த்து புலவர்கள் கலக்கமடைந்தனர். இன்று மன்னனுடைய கோபத்திற்கு ஆளாக வேண்டியதுதான் என்று எல்லோரும் பயந்து நடுநடுங்கியபடி சபையிலே வீற்றிருந்தார்கள்.

முன்னொரு பொழுது மன்னனை "வரப்புயர" என்று மட்டும் வாழ்த்திய பொழுது மன்னன் திகைக்க

*"வரப்புயர நீருயரும்*
*நீருயர நெல்லுயரும்*
*நெல்லுயரக் குடி உயரும்*
*குடி உயர கோன் உயர்வான்"*

என்று பொருளை விளக்கச் சபையோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த சிறப்பு உண்டல்லவா ஔவைக்கு

அத்துணைப் பெருமை வாய்ந்த ஔவையார் சபை நடுவே வந்து நின்று மன்னனைப் பார்த்து முறுவல் செய்த பொழுது மன்னன் நாலு கோடிப் பாடலை இவர் எப்படிப்பாடி முடிக்கப் போகின்றாரோ. எத்தனை நாட்கள் செல்லப் போகின்றதோ என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்க.

1. மதியாதார் முற்றமதித்தொருகாற் சென்று மிதியாமை கோடி பெறும்.

2. உண்ணீருண்ணீரென்று பசரியார் தம்மனையிலுண்ணாமை கோடி பெறும்.

3. கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடையநாக் கோடாமை கோடி பெறும்.

4. கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்

என்று நான்கு குறளிலே நாலு நிமிடத்திலே நாலு கோடிப்பாடலைப் பாடி முடித்து மௌனமாக நின்றார் ஔவையார். சபையோரும் மன்னவனும் முதலில் திகைத்துப்போய் நின்றுவிட்டனர். பின் திகைப்பு மாறியது. மகிழ்ச்சி ஆரவாரம் காதைப் பிளந்தது. மன்னன் இருக்கையை விட்டெழுந்து ஔவையாரின் மதிநுட்பத்தை வியந்து அவரருகே வந்து ஔவையாரை வணங்கி அழைத்துச் சென்று தம் அருகிலுள்ள ஆசனத்தில் அமரச் செய்தார். ஔவையின் புகழ் நாடெங்கும் பரவியது. எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய முறையிலே இக்குறட்பாக்கள் திகழ்கின்றன. ஆனபடியால் இதிற் கூறப்பட்ட அறிவுரைகளை நாம் போற்றி எமது வாழ்க்கையிலே கடைப்பிடித்தல் நன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடக்கூடாது கல்யாணமாலை

**சிவா**

வாழ்க்கை ஒன்று;
திருமணம் ஒன்று;
வாழப் போவது
ஒருவனுக்கு ஒருத்தி என்று!

வாக்குறுதி ஒன்று
எடுப்பது நன்று
இன்பமோ துன்பமோ
ஏற்றுக் கொள்வது என்று!

எழுதுங்கள் இன்று,
சாசனம் ஒன்று-
எதுவந்த போதும்
இணை பிரியோம் என்று!

இயற்கை அன்று,
இயற்றியது ஒன்று-
இல்லறம் என்பது
நல்லறம் என்று!

ஆசைகளுக்கு என்று
அளவிருப்பது நன்று;
மகிழ்சி என்பது
மனதைப் பொறுத்த ஒன்று!

புதிதாக ஒன்று
பாடிடுவேன் இன்று -
விட்டுக் கொடுப்பவர்
வெற்றி பெறுவார் என்று;

தவறுகள் என்று
நடந்திடும் அன்று,
மறப்பது அல்லது
மன்னிப்பது நன்று!

சுவர்க்கம் சென்று
சுகிப்பது போன்று
சுமைகளைப் பகிர்வது
சுவையான ஒன்று!

சேமிப்பு என்று
செல்வங்கள் மூன்று:
பொறுமை, புரிந்துணர்வு,
அன்பு இருப்பது நன்று!

வாழ்க்கை ஒன்று;
வாழ்த்துகிறேன் இன்று-
பதினாறும் பெற்று
வாழ்ந்திடுகவென்று!
வாழ்ந்திடுகவென்று!!

**நிலவு ஏன் இளைக்கிறது?**

அல்லியைக்
காண முடிகிறதே தவிர
அடைய முடியவில்லையே
என்று தவிக்கிறது - அதனால்
இளைக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள்
வந்து போகத் தொடங்கி
விட்டனர்;
செய்மதிகள் வந்து
படங்களாய் எடுக்கின்றன;
தன் தனிமையும்
தூய்மையும்
பழுதாகி விடும் என்று
அழுகிறது - அதனால்
இளைக்கிறது!

நிலா என்று சொல்லி
பெண்ணாக்குகிறார்கள்;
சந்திரன் என்று சொல்லி
ஆணாக்குகிறார்கள்.
இது என்னவென்று புரியாமல்
முழிக்கிறது - அதனால்
இளைக்கிறது!

ஔவைப் பாட்டியையும்
அழகான முயலையும்
சின்னவர்க்கு காட்ட
முயற்சிசெய்துகளைக்கிறது அதனால்
இளைக்கிறது!

வெண்பனிப் பந்து நிலவு
இரவியின் வெப்பத்தால்
ஏற்கனவே உருகியிருந்தும்
இரவில் எமக்கு குளிர்மை தந்து
இளைத்துப் போகிறது!

கவிஞர்கள்
கவியெழுதும் போதெல்லாம்
நிலவில் கொஞ்சம் கொஞ்சம்
தொட்டுதம்கவிக்கு அழகு சேர்ப்பதால்
இளைத்துப் போகிறது !

வெண்ணிலவிலும்
கறையுண்டு என்று
மண்ணிலுள்ளவர் தம்
தவறுக்கெல்லாம்
காரணம் சொல்ல
ஆளாகினேனே என்று
பூரண நிலவு புலம்புகிறது-அதனால்
இளைக்கிறது!

தேய்வது - அதன் பின்
வளர்வது - மீண்டும்
தேய்வது.
இதுவே வாழ்க்கை என்று
சலிக்கிறது - அதனால் இன்னும்
இளைக்கிறது!

## பெற்றோர்க்கு

குழந்தை குழப்படி என்று சொல்லாதீர்
குழந்தைகள் என்றால் குழப்படிக்கே உரியவர்கள்
குழப்படி செய்யாவிட்டால் அவர்கள் பெரியவர்களே
இக்கால குழந்தைகள் புத்தி வலிமை கூடியவர்கள்
அவர்கள் போக்கிலே விட்டுப்பிடித்து எங்கள்
அன்பினாலே அவர்களை கட்டுப்படுத்தி வளர்த்தால்
நாம் பிள்ளைகளால் வெற்றி பெறலாம்

சத்தியலெட்சுமி சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர் கட்டிய சேலை

ஒரு சேலை கட்டிய மாது

ஆறே ஆறு யார்தான் அது - அதுதான் மாதர் கட்டும் சேலை. ஆனால் அந்த ஆறு யார்ச்சேலை எத்தனை சாகஸங்கள் புரியும் என்பது சேலை கட்டிய மாதருக்குத்தான் தெரியும்.

கடும் வெய்யிலில், தூறும் மழையில் மொட்டாக்குப் போட உதவும் சேலை. இந்த மொட்டாக்கு; ஒருவரின் உயிரையே காப்பாற்றியது என்று உங்களுக்குத் தெரியுமா?

அந்த மறக்க முடியாத ஆண்டு 83இல் நடந்த கதை. என்னுடைய உறவினர் ஒருவர், பெண்களுக்குரிய பின் புத்தியால் உந்தப்பட்டு, காம்பிலிருந்து தன் வீட்டைப் பார்க்க வெளிக்கிட்டார். இரண்டடி வைக்கவில்லை வந்தான் காடையன் ஒருவன். "நம மொக்கதே" என்றான். போட்டா இவ மொட்டாக்கை. "சயிதா பேகம்" என்று சொல்லி, கண் மூடித்திறக்கும் நேரத்திலும், குறைந்த நேரத்தில் பாய்ந்து விட்டா காம்பிற்குள். அன்று அப்பெண்மணியைக் கடவுள் போல் காப்பாற்றிய சேலையை இன்றும் வைத்து வணங்குகிறா என்றால் மிகையாகாது?

நிலைக்கண்ணாடி முன் நின்று அந்தக்கொடுந்தானைக் கோட்டழகை, அழகாக்கி, அந்த அழகில் மயங்கி, மினி பஸ்சில் புறக்கோட்டைவரை சென்று திரும்பும் போது, அந்த கொடுந்தானைக் கோட்டழகு, விரிகோணம், குறுங்கோணமாக உருமாறினும், ஒரு மாட்டுசியைப் பற்றிக்கொண்டு உருப்படியாய் உடலை மூடிப்பாதுகாத்து, மானங்காக்கும் சேலையின் கெட்டித் தனத்தைக் கூற சொற்களும் உண்டோ?

எமது உடல் அஷ்ட கோணமாயிருக்கலாம், காட்டிக்கொடுக்காது சேலை. அங்குமிங்கும் பிளவுசில் தையல் பிரிந்திருக்கும் பட்சத்தில், பிரிந்த தையலையும், தன்னை நம்பி வரும் தையலையும் மூடிப்பாதுகாத்து, அடக்க ஒடுக்கமான தோற்றத்தையும் கொடுப்பது இந்த ஆறு யார் அற்புதமல்லவோ?

குழந்தைக்குத் தூளியாய் தொண்டு செய்வதும் இதே ஆறு யார்ச்சேலைதான். பெட்சீற்றைத் தோய்த்துப் போட்டு அது உலரும்வரை அந்த பெட்சீற்றுக்கு ஆங்கிலத்தில் சொல்வது போல் நல்ல Substitute அல்லது பதிலீடு செய்வதும் இந்த சேலையல்லவோ?

"ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்பது போல் ஆறு யார்ச் சேலை, பாவிப்பால் மூன்று யாராகக் குறைந்தாலும், சமையலறையில் வேலை செய்யும் பெண் கை துடைக்க உதவுமல்லவோ?

இவ்வாறு, மாதர் மானத்தை அந்த ஆபத்பாந்தவன் போல் காப்பாற்றுவதோடு, கிழிந்தாலும் மேன் மக்கள் போல் உதவி செய்யும் இந்த சேலைக்கு, உடுக்கை இழந்தவன் கைபோல் இரட்சிக்கும் இந்த ஆறு யார் அற்புதத்திற்கு ஒரு சேலை Sorry சிலை எடுத்தால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

For your Requrements of

**Labornatory Chemicals & Glassware**

Contact :

**Sri Lanka Chemical Distributors**

191, Sri James Peries Mawatha,
Colombo - 02.
Tel: 325936, 449064 &
Tele fax : 423676.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள்

1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாளாகும். அன்று காலை 4.00 மணியளவில் ஷெல் வந்து விழும் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுகளின் உறுமல் சத்தங்களும் காதைப் பிளக்குமாறு கேட்டவண்ணம் இருந்தன. காலை 11. 00 மணியளவில் சுப்பர் சொனிக் விமானம் ஒன்று உயிர்களைக் குடித்தவாறு விண்ணில் வட்டமிட்டுக்கொண்டு அட்டகாசம் புரிந்தது.

அன்று யாழ்ப்பாணத்தில் ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள் நிலை குலைந்து பரிதவித்து செய்வதறியாது பயத்தினால் உறைந்திருந்தார்கள். இவற்றிற்குச் சிகரம் வைத்தாற் போல யாழ்பாணம் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் ஷெல்கள் வந்து விழுந்தன. பரம விரோதிகளே சண்டையிடும்போது ஆஸ்பத்திரிகளைத் தாக்குவதில்லை என்பதைச் சகலரும் அறிவர். இதனால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என மக்கள் நன்கு உணர்ந்து கொண்டனர்.

மாலை 6. 07 மணியளவில் இருந்து உயிர் தப்பினால் போதும் என மக்கள் தங்கள் உடமைகளை எல்லாம் துறந்து விட்டு, கால் நடையாக வெளியேறத் தொடங்கினர். எங்கள் அப்பா யாழ்பாணத்தில் இல்லை. உத்தியோகம் காரணமாக வெளியூரில் இருந்தார். எங்கள் அம்மாவிற்கோ வயதுபோன தன் தாயாரையும் பாட்டியாரையும் விட்டுவிட்டு வரமுடியாத நிலை. இளம் வயதினரான நானும் என் அக்காவும் யாழ்பாணத்தில் இனியும் இருப்பது மிகவும் ஆபத்து என எங்கள் அயலவர்கள் அம்மாவை எச்சரித்தனர். எனவே அம்மாவின் விருப்பத்தின்படி நானும் அக்காவும் கூட்டத்துடன் கூட்டமாக வெளியேறினோம்.

இரவு முழுவதும் நடந்தோம். ஒரு அடிகூட நிதானமாக எடுத்து வைக்கமுடியாமல் மக்கள் வீதியில் நிறைந்திருந்தனர். நடக்கும் போது ஒரு அடி எடுத்து வைத்துவிட்டு மற்ற அடி எடுத்து வைப்பதற்கு ஐந்து நிமிடங்கள் எடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவின் கையைப்பற்றியவாறு கடவுளைத் துதித்துக்கொண்டு நான் நடந்தேன்.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்று சொல்லுவார்கள். இக்கூற்றை உண்மையாக்குவது போல் ஒரு புக்காரா விமானம் வந்து குண்டுமழை பொழிந்தது. நான் அக்காவை இறுக அணைத்தபடி என் கண்களை மூடிக்கொண்டேன். தெய்வாதீனமாக நானும் அக்காவும் தப்பித்துக்கொண்டோம்.

நான் கண்களைத்திறந்து பார்த்தபோது என் உடம்பு மயிர் முழுவதும் குத்திட்டு நின்றது. குருதி ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. பலர் கைகள், கால்கள் வெட்டப்பட்டு இருந்தனர். சிலர் தலைகள் கூட வெட்டப்பட்டு இருந்ததைக் கண்டோம். மக்கள் கூட்டம் பயத்தினால் சிதறி ஓடியது. இதனால் சில சிறு பிள்ளைகள் மிதிபட்டு இறந்தார்கள். பலர் தாய், தந்தை, உற்றார், உறவினர் ஆகியோரைப் பிரிந்தனர்.

இரவு முழுவதும் ஊண் உறக்கம் இன்றி நடந்தோம். தாகசாந்திக்கு நீர் கூடக் கிடைக்கவில்லை. மழை பெய்யும் நேரங்களில் குடையை விரித்து, அதில் இருந்து ஒழுகும் நீரைப் பருகி எங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டோம். அன்று இரவு மூன்று தடவை மழை பெய்தது. மழையில் நனைந்தபடி நடந்து கொண்டிருந்தோம். மாற்று உடை இல்லை. இருந்தாலும் உடை மாற்ற இயலாதவாறு மக்கள் கூட்டம். மழை விடுகிற நேரங்களில் எங்கள் உடைகள் தானாகக் காயும். ஈர உடையுடன் நடந்ததால் கைகளும் கால்களும் விறைத்துப் போய் விட்டன.

மழை நீர் படாமல் இருக்க ஒரு அம்மா தன் குழந்தையைப் பொலித்தின் பையினால் மூடிக்கொண்டு வந்தார். அவர் கைகள் விறைத்துப் போயிருந்தமையால் குழந்தை எப்போது எங்கு விழுந்தது என்று அவருக்குத் தெரியவில்லை. வெறும் பொலித்தின் பைதான் கடைசியில் இருந்தது. அடுத்த நாள் காலை 9.00 மணியளவில் சாவகச்சேரி வந்து சேர்ந்தோம்.

இவைகளே என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள்.

தீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

அதிகாலை வேளையில் எங்கும் பெரும் நிசப்தம் நிலவுகின்றது. அடி வானத்திலோ சூரியனின் வரவுக்காக சிவந்த கோடுகள் தெரிகின்றன. பட்சிகளும் தங்கள் துயில் கலைந்து கூவவோ விடவோ என நினைக்கும் நேரத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள அரசடி வீதியில் இருக்கும் "மதுரவாசா" மாடிக் கட்டிடத்தில் "கிணு கிணு" என்று அலாரம் அடிக்கின்றது. மெல்லிய வனப்பான கை ஒன்று நீண்டு அதை அமர்த்தி நிற்பாட்டுகின்றது. அக்கைக்குரிய பெண் எழும்பி "முருகா" என தொழுகின்றாள். அப்பொழுது நேரம் 4 மணி.




அவள் அவரசமாக தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்து தனது பாடசாலை வேலைகளைப் பார்க்கின்றாள்.

ஐந்து மணியானதும் அவள் படிப்பதை நிறுத்திவிட்டு எழுந்து சென்று "அன்னம்மா அன்னம்மா" என்று சமையல்காரியை துயில் எழுப்பிவிட்டு சமையல் அறைக்குள் புகுந்து காலை காப்பி தயாரிக்கின்றாள். அன்னம்மா வந்ததும் காலை உணவை தயாரிக்கும்படி பணித்துவிட்டு காப்பித்தட்டுடன் மாடி ஏறிச் செல்கின்றாள்.

தனது மாமன் பிள்ளைகள் நித்திரை செய்யும் அறையில் வைத்துவிட்டு "ராஜி" "ரவி" "விஜி" எழுந்திருங்கள் என குரல் கொடுக்கின்றாள். மாட்டோம் முடியாது என மறுக்கும் குழந்தைகளை சமாதானப்படுத்தி எழவைத்துவிட்டு அவர்கள் அன்று பாடசாலைக்கு போட வேண்டிய உடுப்புகளை எடுத்து வைத்துவிட்டு கீழே இறங்கிச் சென்று பூசை அறையை ஒழுங்கு பண்ணி பூசைக்கு ஆயத்தம் செய்கின்றாள்.

"லலிதா" "அம்மா லலிதா" பூசைக்கு எல்லாம் ஆயத்தமா என கேட்டபடி அவளின் மாமனார் வரதன் வருகின்றார். "எல்லாம் ஆயத்தம் நீங்கள் தொடங்குங்கள் மாமா" என முகத்தில் புன்முறுவலுடன் கூறுகின்றாள்.

"நீ நல்ல பெண். உன் அம்மா மாதிரியே பொறுப்புடன் எல்லாம் செய்கின்றாய். உனக்கு இப்படி ஒரு சோதனையை கடவுள் தந்திருக்கக் கூடாது. விதி யாரை விட்டது உம்" என்ற பெருமூச்சுடன் "உன் வேலையை பார் அம்மா" என்று அனுப்புகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சமையல் அறையில் புகுந்து அன்னம்மாவுக்கு ஒத்தாசை செய்துவிட்டு காப்பி கலக்கி எடுத்து முன் அறையில் வைத்துவிட்டு அன்றைய தினசரிகளையும் எடுத்து வைத்துவிட்டு மாடி ஏறி செல்கின்றாள்.

"லலிதா லலிதா காப்பி ரெடியா" என்று குரல் கொடுத்தபடி வந்த தனது மாமி பத்மினியிடம் "ரெடி மாமி" என்று பதில் கூறிவிட்டு குழந்தைகளின் அறையில் புகுந்து அவர்களுக்கு பாடசாலைக்கு வெளிக்கிடுவதற்கு உதவி செய்து அவர்களை கீழே அனுப்பிவிட்டு அறைகளை ஒழுங்கு செய்து தோய்க்க வேண்டிய உடுப்புக்களையும் காப்பிக் கோப்பைகளையும் கொண்டு கீழ் இறங்கி வருகின்றாள்.

அவற்றை குழாயடியில் வைத்துவிட்டு வந்து குழந்தைகளுக்குப் பரிமாறுகின்றாள். அவர்கள் சாப்பிடும்போதே மாமனாரும் மாமியும் வருகின்றார்கள். அவர்களுக்கும் உணவு பரிமாறுகின்றாள். அவர்கள் சாப்பிட்டதும் தானும் தட்டு எடுத்து வந்து சாப்பிடுகின்றாள். பின் அன்னம்மாவிடம் அவ்விடத்தை ஒழுங்கு பண்ணும்படி கூறிவிட்டு தானும் பாடசாலை செல்வதற்குத் தயாராவதற்கு தன்அறைக்குச் செல்கின்றாள்.

அவள் வெளிக்கிட்டு வரும்போது மாமனார் குடும்பம் "லலிதா போய்ட்டு வாறோம் மச்சாள் போய்ட்டு வாறோம்" என்று குரல் கொடுத்தபடி காரில் ஏறிப் போகின்றார்கள். அவளும் கேற்றை சாத்திவிட்டு வரும் அன்னம்மாவிடம் தானும் போய் வருவதாகவும் மத்தியான சமையலையும் கூறிவிட்டு செல்கின்றாள்.

அவள் போவதையே பார்த்திருந்த அன்னம்மா "பத்து வயதில் தாய் தந்தையரைக் கார் விபத்தில் பறிகொடுத்துவிட்டு இங்கு வந்த பிள்ளை இந்த எட்டு வருஷமாக மாமா குடும்பத்துக்காக உழைக்கின்றது" என்று சலித்தபடி கதவை சாத்திப் பூட்டிவிட்டு தன் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டாள்.

## 2

அவள் தான் கற்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு செல்கின்றாள். அங்கு தோழி வசந்தி நிற்கின்றாள். இருவரும் கதைத்தபடி வகுப்பறைக்குள் நுழைகின்றார்கள். இருவரும் அருகருகில் அமர்ந்து தங்கள் சந்தேகங்களைப் பகிர்ந்து தீர்த்து படிக்கின்றார்கள். அவர்கள் A/L இறுதி ஆண்டு விஞ்ஞானப் பிரிவில் படிக்கின்றார்கள். அவர்கள் இருவரும் எப்பொழுதும் ஒன்றாகவே இருப்பார்கள். தேவைக்கு ஏற்பவே அவர்கள் மற்றவர்களுடன் பழகுவார்கள். மாமா வீட்டில் இருந்த தன்னைப் பாடசாலையில் சேர்க்க வேண்டும் என்றும் ஊரார் உங்கள் மீது வீண் பழி சுமத்துவார்கள் என்றும் மாமா மாமியுடன் வாதாடித் தன்னைத் தான் படிப்பிக்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சேர்த்த கனகா ஆசிரியையின் மகள் வசந்தி மீது லலிதாவுக்கு அலாதியான பிரியம்.

லலிதாவின் நிலைமையும் தன் தாய் அவள் மீது எடுத்த அக்கறையும் சேர்ந்து வசந்திக்கு லலிதா மீது ஒருவித பாசத்தைக் கொடுத்தது. லலிதாவும் சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியர்களிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்வாள். அவளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து மற்றவர்களும் தங்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்திக் கொண்டு வந்தார்கள். கல்லூரி விட்டதும் கனகா ஆசிரியையைக் கண்டு கதைத்துவிட்டே லலிதா வீட்டிற்குச் செல்வாள்.

## 3

வீடு வந்ததும் கைகால் முகத்தைக் கழுவி தனது மாமி குடும்பம் பாடாசலையால் வந்து உணவு அருந்தி இருந்தால் தானும் உணவு அருந்துவாள் அல்லது அவர்கள் வரும்வரை அன்றைய தினசரியை எடுத்து வாசிப்பாள். அவர்கள் வந்ததும் அவர்களுக்கு உணவு பரிமாறிவிட்டுத் தானும் உண்பாள். அவர்கள் சாப்பிட்ட பிறகு அன்னம்மா அவ்விடத்தை ஒழுங்கு பண்ணுவாள். பின் சிறிது நேரம் அவர்கள் வாங்கும் சஞ்சிகைகளை வாசிப்பாள். அப்புறமாக தனது அறைக்குச் சென்று சற்றுநேரம் படுப்பாள்.

பிறகு எழுந்து சலவைத் தொழிலாளி தோய்த்து வைக்கும் உடுப்புக்களை எடுத்து உள்ளே வைத்து அயன் பண்ணிய உடுப்புகளை எடுத்து அவர் அவர்கள் பீரோவில் வைப்பாள். மாமா குழந்தைகள் களைந்து வைத்த பாடசாலை சீர் உடைகளையும் மாமி களைந்து வைத்த உடுப்புகளையும் எடுத்து வந்து வாளியில் போட்டு வைப்பாள்.

அவள் நேர அட்டவணை போட்டுக் கொடுத்தபடி அன்னம்மா பின்னேரச் சிற்றுண்டி வகைகள் இரவுச் சமையல் செய்வாள். அவள் செய்து மேசையில் வைத்த சிற்றுண்டி தேனீரை உண்டுவிட்டு தனக்குத் தேவையான பொருட்களை வாங்கக் கடைக்கு அல்லது படிக்க இருந்தால் வசந்தி வீட்டிற்குப் போவாள்.

இரண்டும் இல்லாவிட்டால் அன்னம்மாவிற்கு சமையலுக்கு உதவி பண்ணுவாள் அல்லது குழந்தைகளுடன் விளையாடுவாள். 6 மணியானவுடன் முகம் கைகால்களை கழுவிவிட்டு பூஜை அறை விளக்கை ஏற்றி வைப்பாள்.

குழந்தைகள் படிப்பதற்கு உதவி செய்வாள். பத்மினி மாமியும் பாடசாலை வேலைகள் கொண்டு வந்து இருந்தால் உதவி செய்யும்படி கேட்டால் உதவி செய்வாள்.

வரதன் மாமா கடையால் வந்ததும் அவருக்குத் தேனீர் சிற்றுண்டி கொண்டு வந்து கொடுப்பாள். 8 மணியானதும் எல்லோரும் ஒன்றாகவே சாப்பிடுவார்கள். பிறகு அன்னம்மாவுடன் சேர்ந்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்வாள்.

பிறகு தனது அறைக்குள் புகுந்து வீட்டுக்கு தேவையான சமான்களை எழுதி வரதன் மாமாவிடம் கொடுப்பாள். அவள் எழுதி கொடுப்பதை மாமாவும் அடுத்த நாள்வேண்டி வைத்திடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் தனது அறையினுள் போய்விடுவாள். அங்கு இருக்கும் தனது தாய் தந்தையரின் திருமணப்படத்தை சற்று நேரம் பார்த்து இருந்துவிட்டு அப்படத்திற்கு முத்தம் கொடுத்துவிட்டு சற்று நேரம் படிப்பாள். பின் துயிலச் சென்று விடுவாள். இப்படியே அவளின் அன்றாட வாழ்க்கை போய்க் கொண்டு இருந்தது. காலமும் நிற்பதில்லை அதுவும் ஓடிக்கொண்டு இருந்தது.

## 4

ஆமாம் ! தோழிகள் இருவரும் எதிர்ப்பார்த்திருந்த வசந்தியின் திருமணமும் வந்தது. வசந்தியின் வீடும் இனிய சேதியினால் கலகலத்தே இருந்தது. அவளின் அண்ணன் வரவை எதிர்பார்த்து எல்லோரும் இருந்தார்கள்.

தோழியோ சந்தோஷத்தில் மிதந்தாள். தான் விரும்பும் தன் அத்தான் சேகருக்கே ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் அல்லவா ! அவளின் சந்தோஷமும் லலிதா மீது ஒட்டிக்கொண்டது. திருமணத்திற்கு ஒரு வாரம் தான் இருந்தது. ஆதலால் தோழிக்கு பரிசளிப்பதற்குப் பொருள் வேண்ட அவள் கடைத்தெருவுக்குப் போய் இருந்தாள். தேடித் தனக்குப் பிடித்த அருமையான பொருளையும் வேண்டிக்கொண்டு வந்தாள்.

வரும்போது என்ன நடந்ததோ அவளுக்கு தெரியவில்லை. எதோ காலில் தடுக்கி விழுந்துவிட்டாள். வெட்கத்துடன் அவசரமாக எழ முயன்றாள். அப்பொழுது "அட அட விழுந்து விட்டீர்களே காயம் இருக்கின்றதா" என்று கேட்டபடி வாலிபன் ஒருவன் அவள் எழுவதற்கு உதவி செய்தான்.

அவள் நாணத்துடன் "ஒன்றுமில்லை" என்றாள். ஆனால் வலது கால் பெருவிரலில் வலி இருந்ததால் அதை குனிந்து பார்த்தாள். அவனும் பார்த்தான். விரலில் இரத்தம் வருகின்றது. என்னுடன் வாருங்கள் அருகில் மாமி வீடு இருக்கின்றது கட்டு போட்டுக்கொண்டு போகலாம் என்று கூட்டிச் சென்றான்.

"இந்த முகத்தை எங்கோ பார்த்தமாதிரி இருக்கின்றதே என்று நினைத்தபடி பின் தொடர்ந்தாள். அவன் நுழைந்த வீட்டை பார்த்ததும் இது ராஜம் அம்மா வீடு அல்லவா? அப்படியானால் இவர் யார் ? ஒரு வேளை இவர்" என அவள் நினைக்கும் போது இவர்கள் வருவதைக் கண்ட ராஜம் யாரு ? வசந்தகுமாரா ! பின்னால் யாரு? நம்ம லலிதாவா ! வாருங்கள் என்று குரல் கொடுத்தாள்.

அவனும் சிரிப்புடன் "நான்தான், எனக்கு கொஞ்சம் வெந்நீர் தருகின்றிர்களா மாமி" என்றுகேட்டபடி உள்ளே நுழைந்தான். லலிதாவை உட்காரும்படி கூறிய ராஜம் "எதுக்கடா வெந்நீர்" என்று கேட்டபடி பின்னால் போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் அந்த பெண் வரும் வழியில் விழுந்து விட்டாள்; பெருவிரலில் சிறுகாயம்; மருந்து கட்ட கூட்டி வந்தேன்" என்றான். அவன் மருந்துடன் வரவும் ராஜம் வெந்நீருடன் வரவும் சரியாக இருந்தது. அவன் "காலை காட்டுங்கள் மருந்து கட்டுவோம்" என்று கூறினான். அவள் கூச்சத்துடன் "வேண்டாம் நான் கட்டுகிறேன்" என்றாள்.

"கூச்சப்படாதே லலிதா அவன் டாக்டர்தான் வசந்தியின் அண்ணன்" என்றாள் ராஜம். அவளும் மறு பேச்சில்லாமல் காலைக் காட்டினாள். அவனும் வெந்நீரால் கழுவி மருந்து போட்டுக் கட்டினான். அவன் குனிந்து இருந்து செய்யும் வேலையைப் பார்த்திருந்த அவளுக்கு அவனின் சுருட்டை மயிரைக் கோதிவிட வேணும் போல் ஆசையாக இருந்தது. அந்த நினைவில் அவளுக்கு எரிவு தெரியவில்லை.

மருந்து கட்டிய அவனுக்கோ அவளின் உள்ளங்கால்களை வருடிவிடத் தோன்றியது. அந்த எண்ணமே ஏக்கமானது. அது ஆச்சரியமானது. ஏன் ? இவளிடம் இந்த எண்ணம் வருகின்றது என திடுக்குற்று நிமிர்ந்தான். இருவரின் கண்களும் சந்தித்தன. சில நிமிடங்கள் நிலைத்து நின்றன. கதை பல பேசின. அவள் நாணிக் குனிந்தாள். அவன் முக மகிழ்வுடன் மருந்துகளை எடுத்துச் சென்றான்.

"இந்தா லலிதா காப்பி குடி" என்று ராஜம் அம்மாவின் குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்து காப்பியை எடுத்துப் பருகத் தொடங்கினாள். உள்ளிருந்து வந்த வசந்தகுமார் "என்ன மாமி நம்ம லலிதா, வசந்தியின் அண்ணன் என்றெல்லாம் கூறுகின்றீர்களே இவள் யார் என்று எனக்கு கூறவில்லையே" என்று கேட்டபடி காப்பியை எடுத்துக் கொண்டு கதிரையில் இருந்தான்.

"இவள் வசந்தியின் இணைபிரியா தோழி. இவளின் அம்மா சுசிலாவும், உன் அம்மா கனகாவும், நானும் ஆருயிர் தோழிகள். ஒன்றாகவே படித்தோம். இரண்டு நட்பின் சொந்தத்தால் நம்ம லலிதா என்றேன்" என்று கூறினாள். "வரதன் சாரின் அக்கா மகள் என்று கூறுங்கள் சிறுமியாய் பார்த்தது நல்லாய் வளர்ந்து விட்டாள் அடையாளம் தெரியவில்லை அவளா இவள்" எனறு கேட்டான்.

"ஆமாம் அவள்தான். எங்கள் மூவரின் நட்பின் கதையைக் கூறுகின்றேன் கேள்" என்று கூறத் தொடங்கினாள்.

## 5

மதுரா புடவை மாளிகையின் பங்குதாரர் உதயசங்கரின் செல்வப்புதல்வி சுசிலா. அவள் எங்கு சென்றாலும் காரில்தான் போய் வருவாள். பழக இனியவள் எல்லோரையும் சமமாகவே மதிப்பாள். அவளின் குணம் எங்களை அவளின் சிநேகிதி ஆக்கியது. ஆனால் நாங்கள் மத்திய தராதரத்தில் இருந்ததால் அவளை எங்கள் வீட்டுக்கு விடுவதில்லை. நாங்கள் தான் அங்கு செல்வோம். சேர்ந்து படிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது மதுரா புடவை மாளிகையின் மற்ற பங்குதாரர் மருதநாயகத்தின் மகன் செல்வகுமார் கணக்குப் பார்ப்பதற்காக அங்கு அடிக்கடி வருவார். அவர் கனகா மீது மையல் கொண்டார். செல்வகுமாருக்கும் சுசிலாவுக்கும் திருமணம் முடிப்பதற்கு பெரியோர் முடிவு செய்தார்கள். அதைக் கேள்விப்பட்ட செல்வகுமார் தன் தந்தையிடம் மறுப்புத் தெரிவித்துக் தான் கனகாவை விரும்புவதாக கூறினார். தந்தை அதைக் கேளாது சுசிலாவையே திருமணம் முடிக்கும்படி கூறினார். தந்தையிடம் எடுத்த முயற்சி தோல்வியடையவே செல்வகுமார் சுசிலாவிடமே வந்தார். தான் கனகாவையே விரும்புவதாகக் கூறினார்.

அதைக் கேட்டதும் சுசிலா உதயசங்கரிடம் கூறி கனகாவுக்கும் செல்வகுமாருக்கும் திருமணம் செய்து வைக்கும்படி வேண்டினாள். வேறு ஒரு பெண்ணை விரும்புபவருக்கு தன் மகளை கட்டாய திருமணம் செய்து வைத்தால் தன் மகள் வாழ்வு சந்தோஷமாக இருக்காது என்பதை எண்ணி தன் பங்குதாரர் மருதநாயத்திடம் சென்று கதைத்தார். கனகாவிற்கு அவர் தன் பங்கில் ஒரு பகுதியை கொடுப்பதாகவும், நாங்கள் இருக்கும் இந்த வீட்டைச் செப்பமிட்டு திருத்தி கனகாவின் பெயரில் எழுதி விடுவதாகவும் கூறி அப்படியே செய்தார்.

மருதநாயகமும் சம்மதம் தெரிவித்து செல்வகுமாருக்கும் கனகாவுக்கும் திருமணம் செய்து வைத்தார். ஆனால் கனகா மத்திய தராதரத்தை சேர்ந்தவள் என்று மருதநாயகத்தின் மனத்தில் உறுத்திக் கொண்டு இருந்ததால் தன் பங்கில் ஒரு பகுதியை தன் மகன் செல்வகுமாருக்கு எழுதி நீங்கள் தற்போது இருக்கும் வீட்டையும் ஒரு காரையும் கொடுத்து மகனின் உறவை அறுத்துக் கொண்டார். அதே போல் செல்வகுமாரின் சகோதரர்களும் அவருடைய தொடர்பை துண்டித்துக் கொண்டார்கள். நன்மை தீமை ஒன்றுக்கும் கூப்பிடுவதில்லை.

உதயசங்கர் கனகாவிற்கு நல்லதொரு வாழ்வு கொடுத்ததோடு நிற்கவில்லை. சுசிலாவின் தூண்டுதலால் கனகாகவின் தமையனாரான உன் மாமாவுக்கும் நல்ல உத்தியோகம் எடுத்துக் கொடுத்தார். கனகாவும் அவள் அண்ணனும் தனியே இருந்தபடியாலும் அவள் திருமணம் முடித்துப் போனதும் மாமா மருதநாயகம் தங்களை தள்ளி வைத்ததாலும் உறவுக்காரரை நம்பாது என்னிடம் வந்து கேட்டு என் சம்மதம் தெரிந்ததும் தன் அண்ணாவை எனக்கு திருமணம் செய்து வைத்தாள். சுசிலாவும் இதற்கு உறுதுணையாக நின்றாள். வரதனுக்கு இவை எல்லாம் பிடிக்காவிட்டாலும் தந்தை தமக்கையின் பக்கம் நின்றதால் பேசாது இருந்தார்.

ஆனால் சுசிலா குமார் அண்ணா என்றும் கனகா என்றும் நட்பை அறுக்காது போய் வரவே உன் தந்தையும் தனது உடன் பிறவா சகோதரி என்று பாசத்தை பொழிந்தார். தனது சினேகிதனான சண்முகம் என்பவரை உதயசங்கருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். சண்முகத்தின் குண நலன்கள் அவருக்கு பிடித்துப் போய்விடவே தன் மகள் சுசிலாவை அவருக்கு திருமணம் செய்து வைத்தார். மூவரின் வாழ்க்கையும் சந்தோஷமாகவே போய்க் கொண்டு இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால வெள்ளத்தினால் ஒரு நாள் ஒரு பேர் இடி எல்லோர் தலையிலும் வந்து விழுந்தது. குரல் அடைப்பட்டு சிறிது நேரம் இருந்தாள் ராஜம். பின் தன்னை தேற்றிக்கொண்டு கூறத் தொடங்கினாள்.

"உதயசங்கர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள் வரவும்" என்று தந்தி சுசிலாவுக்கு அனுப்பினான் வரதன். தந்தியைக் கண்டதும் சுசிலாவும் சண்முகமும் குழந்தை லலிதாவுடன் காரில் வெளிக்கிட்டார்கள். திருகோணமலையில் இருந்து வரும் வழியில் அவர்களின் கார் விபத்துக்கு உள்ளானது. ஒரு பெரிய மரத்துடன் கார் மோதுப்பட்டு முன் பக்கம் முழுவதும் நசிந்துவிட்டது. அதனால் முன்னே இருந்த சுசிலாவும் சண்முகமும் இறந்துவிட்டார்கள். லலிதா பின்னுக்கு உறங்கிக் கொண்டு வந்ததால் உயிர் தப்பினாள். சுசிலாவின் வரவை எதிர்பார்த்து இருந்த வரதனுக்கு விபத்துச் செய்திதான் வந்தது. அவன் என்ன செய்வது என்று தெரியாது தவித்தான்.

அவனை இங்கு இருக்கும்படி கூறிவிட்டு செல்வகுமாரும், உன் மாமனாரும் போனார்கள். செல்வகுமாரைக் கண்டதும் திகைத்துப்போய் நின்ற குழந்தை லலிதா 'மாமா" என்று கூறியபடி அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவர்களின் நிலையைக் கண்டதும் உன் அப்பாவும் திகைத்துவிட்டார். வந்ததோ அரசாங்க வாகனம். ஆதலால் விசாரணை எல்லாம் முடித்து பிரேதத்தை எடுத்து வரவே 2 நாட்கள் ஆகிவிட்டது. சாமான்களை ஏற்றிக்கொண்டு குடி வெறியில் கண்மண் தெரியாது லொறியை ஓட்டி வந்திருக்கின்றான் டிரைவர். லொறியில் அடிப்பட்டிடுவோம் என்று சற்று காரை ஒடித்து திருப்புவதற்குள் கார் பாதையைவிட்டு விலகி அருகில் இருந்த பெரிய மரத்துடன் மோதுண்டு விட்டது என விசாரணையில் கூறப்பட்டது.

அந்த 2 நாட்களும் லலிதா உன்அப்பாவைவிட்டு விலகவே இல்லையாம். கட்டிப்பிடித்துக் கொண்டு நின்றாளாம். அவர்களின் பிரேதம் யாழ்ப்பாணம் வருவதற்குள் உதயசங்கரின் காரியம் எல்லாம் முடிந்து விட்டது. அடுத்தநாள் அவர்களின் காரியத்தையும் வரதன் செய்து முடித்தான். அவர்களின் இறுதிக்கிரியைக்குப் போய்விட்டு வந்த உன் அப்பா "பணத்தாசை கொண்ட பத்மினி பணத்துக்காக அவளை வைத்திருப்பாள். ஆனால் குழந்தைக்கு ஒன்றும் செய்யமாட்டாள் நாங்கள் தான் அவளுக்கு உதவ வேண்டும்" என்று கூறி படுத்தவர்தான் பின் எழுந்து இருக்கவில்லை.

சண்முகத்தின் உறவினர்களும் லலிதாவை வைத்திருக்க முடியாது என்று கூறி சண்முகத்தின் பங்கு இவ்வளவு தான் என்று கூறி சிறு தொகைப்பணத்தை கொடுத்து உறவை முறித்துக் கொண்டார்கள். லலிதாவை பார்க்க வருவதே இல்லை. வேறு இடம் இல்லாது லலிதாவும் வரதனுடன் இருக்கின்றாள். பணத்துக்காக பத்மினியும் மறுப்புக்கூறாது வைத்திருக்கின்றாள் என்று கதையைக் கூறி முடித்தாள். அங்கு ஒரு பெரும் அமைதி நிலவியது. எல்லோருமே தங்கள் உணர்வுடன் கட்டுண்டு இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

சுதாரித்துக் கொண்டு முதலில் மீண்டது லலிதாதான் "அம்மா அண்ணா எங்கே?" என்று கேட்டாள்.

"கல்யாண அலுவலாக நல்லூர் சிவன் கோவிலடிக்கு போயிருக்கின்றான்" என்று கூறினார். "அப்போ அப்பா எங்கே ?" என்று கேட்டாள். அவர் வழக்கம் போல் உள்ளே இருக்கின்றார். நான் கதையில் ஆழ்ந்ததினால் கூற மறந்து விட்டேன். இதோ கூப்பிடுகிறேன் என்று எழ போனார். "வேண்டாம் மாமி நான் போய் பார்க்கிறேன்" என்று வசந்தன் உள்ளே சென்றான். "நீயும் உள்ளே வா அம்மா" என்று அவளையும் அழைத்துச் சென்றார். அவர்கள் இருவரையும் கணவனுடன் கதைக்கவிட்டு தான் மறுஅறைக்கு சென்று ஒரு பாசலுடன் வந்தார்.

"வசந்தன் உனக்கு ஒரு சேதி தெரியுமோ ? எங்களுக்கு மகள் இல்லாதபடியால் லலிதாவை தான் தோழியாக நிற்கும்படி கேட்டுள்ளோம். இந்த லலிதா உனக்கு அம்மாவும் அப்பாவும் தரும் கல்யாண புடவை" என்று கூறி அப்பாசலை நீட்டினாள். "எதுக்கம்மா இது எல்லாம் வேண்டாம்" என்றாள். "சேகருக்கு ஒரு தங்கை இருந்தால் அவளுக்கு ஒரு புது புடவை வேண்டி கொடுக்க மாட்டோமோ ? பிடியம்மா" என்ற கூறவே கூச்சத்துடன் நன்றி கூறி பெற்றுக் கொண்டாள்.

"அம்மா எனக்கு நேரம் ஆகிறது வரவா?" என்றுகேட்டபடி எழுந்தாள். "தம்பி நீயும் அவளுடன் கூட போய் வீடு வரை விட்டு விட்டு உன் வீடு போய் வா என கூறி இருவரையும் அனுப்பி வைத்தாள்.

அவள் கஷ்டப்பட்டு நடந்து வருவதை பார்த்து தன் கையைப் பிடித்து வரும்படி கேட்டான். அவளும் வெட்கத்துடனுடம் சிறு தயக்கத்துடனும் அவன் கையைப் பிடித்து நடந்தாள். அந்த தொடுகை உணர்ச்சி அவளுக்கு தான் துணையாக இருக்கவேணும் என்ற உணர்வை கொடுக்கவே தன் கை பிடித்த அவள் கையை அழுந்திப் பிடித்தான். அந்த அழுத்தம் தான் தனியில்லை தனக்கும் ஒரு துணை இருக்கு என்ற உணர்வை அவளுக்கு கொடுத்தது. அந்த உணர்ச்சிகளுடன் இருவரும் மௌனமாக நடந்து சென்றார்கள். அவளை மதுரவாஸ கேற்றடியில் விட்டு விட்டு தன்வீடு நோக்கி நடந்தான்.

## 7

வசந்தியின் திருமணமும் இனிதே நடந்தேறியது. மூன்றாவது நாள் அவள் மறு வீடு வருவதாக இருந்தது. அன்று காலையில் லலிதாவை தன் வீடு வரும்படி கனகா அழைத்திருந்தாள். அவள் அழைப்புக்கு இணங்க லலிதாவும் வந்தாள்.

அவளை வரவேற்ற வசந்தன் "அம்மா சமையல் அறையில் இருக்கிறார்" என்று கூறினான். "நானும் அங்கே போகின்றேன்" என்று கூறியபடி சமையல் அறை நோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தாள். பின்னோடு போன வசந்தனும் சமையல் அறையில் நுழைந்து தான் விட்டு வந்த வேலையைத் தொடங்கினான். அவன் மரக்கறி வெட்டுவதை கண்ட லலிதா தான் உதவுவதாக கேட்க அவன் மறுத்து விட்டான்.

"மாமி உங்களுக்கு என்ன உதவி செய்ய?" என்று கேட்டாள். அதற்கு அவன் அவசரமாக "அவளிடம் ஒன்றும் கொடுக்காதே அம்மா பின் எங்கள் வயித்தில் அடி விழுந்திடும்" என்றான்.

அவளும் உடனே "இப்ப மாத்திரம் என்ன மாதிரி உங்கள் வயித்திலும் அடி விழத்தான் போகின்றது" என்றாள் கண்களில் குறும்புடன். "என் வாக்கியத்தால் என்னையே அடிக்கின்றயா ? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கூறித் திரும்பியவன் அவள் கண்களில் குறும்பைக் கண்டவன் "அமெரிக்காவில் ஐயாதான் சமையல்" என்றான்பெருமையுடன்.

நீங்கள் மாத்திரம் என்னைக் கிண்டல் செய்யலாமோ ? எனக்கும் சமையல் தெரியும். மாமி மிகுதி சமையலை நானே செய்கின்றேன் என்று கரண்டியை வேண்டினாள். மூவரும் கிண்டலும் பகிடியுமாக சமையலை முடித்து முன் கோலுக்கு வந்தார்கள்.

"அம்மா லலிதா உன்னை இன்று வரச்சொன்னதே உங்கள் இருவரையும் வைத்து கதைப்பதற்குத்தான். சுற்றி வளைத்து கேக்காது நேரடியாகவே கேக்கின்றேன் உனக்கு வசந்தனை திருமணம் செய்ய பரிபூரண சம்மதமா ? என்று கேட்டாள்.

லலிதா பேசாது இருந்தாள். அவள் மௌனத்தை கண்ட கனகா "மாமா மாமிக்குப் பயப்படுகிறாயா ? அவர்களிடம் சம்மதம் வாங்குவது என் பொறுப்பு உனக்கு சம்மதமா ? அதை முதலில் கூறு. அப்பதான் மேல் கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியும்" என்றாள். "உங்களுக்கும் அவருக்கும் சம்மதம் என்றால் எனக்கும் பரிபூரண சம்மதம்" என்றாள் மிகுந்த நாணத்துடன்.

"மிக்க சந்தோஷம். உன் அபிப்பிராயம் என்னடா" என்று மகனைப் பார்த்து கேட்டாள். அவன் உடனே பதில் கூறாது ஒற்றைப் புருவத்தை உயர்த்தி நாடியை தடவியபடி லலிதாவை பார்த்துக் கொண்டு இருந்தான். அவனிடம் இருந்து பதில் வராததால் லலிதா அவனைப் பார்த்தாள். அவள் பார்வையுடன் தன் பார்வை கலந்ததும் "கரும்பை சாப்பிட கசக்குமா ? அம்மா. எனக்கு பரிபூரண சம்மதம்" என்றான்.

"நீங்கள் சுத்த மோசம்" என்றாள் வெட்கம் பொங்க. "நான் சுத்த மோசம் என்றால் அப்ப நீ ?" என்றான் சிரிப்புடன். கோபத்துடன் அவனை முறைத்துப் பார்க்க முயன்றாள். முடியவில்லை எனவே, அவனுடன் சேர்ந்து சிரித்தாள். அவர்கள் சிரிப்பில் தாயும் கலந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

அன்று பின்னேரம் லலிதாவிடம் கூறியபடி வரதன் வீட்டுக்கு எல்லோரும் வந்திருந்தார்கள். அவர்கள் தாங்கள் வந்த காரணத்தை கூறினார்கள். வரதனும் பத்மினியும் திகைத்து இருப்பதைக் கண்டு "என்ன யோசிக்கின்நீர்கள். அவளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டியது எல்லோருடைய கடமையும் தானே?" என்று கேட்டார்கள்.

"செய்து வைக்க வேணும்தானே இப்பொழுது என்ன அவசரம் என்று இழுத்தார்கள்" வரதனும் பத்மினியும். "வசந்தனுக்கும் வயது ஆகிறது எவ்வளவு நாளைக்கு அவனை வைத்திருக்கிறது. கொஞ்சம் யோசியுங்கோ" என்றார்கள். பத்மினியும் ஒருக்கால் உள்ளே வாருங்கள் என்று கணவனுடன் உள்ளே சென்றாள்.

வெளியில் வந்த இருவரும் "ஒரு நிபந்தனைக்கு நீங்கள் உடன்பட்டால் எங்களுக்கு சம்மதம்" என்றார்கள். அவர்களும் என்ன நிபந்தனை என்று கேட்டார்கள். "அவளுக்கு என்று பங்கு ஏதும் இல்லை. இருந்ததும் அவளுக்கு செலவு போய்விட்டது. தருவதற்கு ஒன்றும் இல்லை" என்றார்கள்.

இதை எதிர்பார்த்து வந்து இருந்த அவர்களும் "எங்களுக்கு லலிதா மாத்திரம் போதும் வேறு ஏதும் வேண்டாம்" என்றார்கள். பத்மினியும் முகம் மலர்ந்து "கல்யாண செலவுக்கு நாங்கள் எங்கே போவது" என்றாள்.

அதற்கு கனகா"பரவாயில்லை நாங்களே செய்கின்றோம் பெரிசாக இல்லை சுருக்கமாக கோயிலில்" என்றாள். வரதனும் பத்மினியும் சம்மதிக்கவே தம்பி திரும்பி போக வேணும் ஆதலால் எவ்வளவு விரைவில் திருமணம் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் திருமணத்துக்கு நாள் வைப்பதாக கூறினார்கள்.

வெகு விரைவில் அவர்கள் திருமணம் சுருக்கமாக நல்லூர் சிவன் கோயிலில் நடைபெற்றது. பின் திருமண பதிவும் நடைபெற்றது. மாலையும் கழுத்துமாக லலிதாவை பார்த்த அன்னம்மா பூரிப்புடன் ஆனந்தக் கண்ணீர் விட்டாள். கனகாவோ நன்றியில் கரைந்து மகிழ்ந்து துக்கத்தில் கலந்து சிரித்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

வசந்தியோ "அண்ணி, அண்ணி" என்று சந்தோஷத்தில் கரைந்தாள். கனகாவின் தமையனோ தங்கையின் பொறுப்புகள் முடிந்தது என்று மகிழ்தார். ராஜமோ மனநிறைவோடு மகிழ்ந்தார்.

வசந்தகுமார் கையோடு லலிதாவை அமெரிக்கா கூட்டிச் சென்றான். ஆறு மாதத்தில் தாயையும் கூப்பிட்டான். அருமை மாமியுடனும் அன்புக் கணவனுடனும் லலிதாவின் வாழ்க்கை அங்கே வசந்தமாக மலர்ந்து பூத்துக் குலுங்கியதில் ஆச்சரியம் இல்லையே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# ANALYTICA SCIENTIFIC SERVICE (PVT) LTD

FOR

## ANALYTICAL INSTRUMENTS

**Sole Agents For :**

| | | |
|---|---|---|
| SHIMADZU CORPOATIO-JAPAN | : | UV, FTIR, AAS, RF, GC, GC-MS, HPLC, GPC, XRF, XRD THERMAL ANALYZERS & Labortory Weighing Scales. |
| HORIBA LTD. - JAPAN | : | Water Quality Measuring Instruments. |
| TOMY CORPORATION - JAPAN | : | Centrifuges, Autoclaves. |
| JAPAN I. T. S. CO. LTD. | : | General Laboratory Equipments. |
| THERMO ENV. Inc. U. S. A. | : | Air Quality Monitoring Instruments. |
| SUPELCO Inc. U. S. A. | : | Chromatography Accessories, Chemical Stadards. |
| YOUNG Inc. U. S. A. | : | Meteorological Instruments. |
| TESTO GMBH - GERMANY | : | Temp., Humidity, Velocity, Lux/Sound & RPM Measuring Instruments. |
| TPSLTD - AUSTRALIA | : | Ph, Conducivity, TDS Meters and |
| | | Dealers for Laboratory Glassware & Chemicals |

**SERVICES DONE BY QUALIFIED PROFESSIONALS**

**"Nanda Investments Bldg.," 25 1/4, C.W.W. Kannangara Mawatha, Colombo 07.**
**Tel/Fax : 94-1-691220, E-mail : analytica@eureka.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமை

பெண்களைக் கடவுளின் சக்தி இயற்கையின் விசித்திரம் எனப் போற்றுவார்கள். எங்கெல்லாம் பெண்மை போற்றப்படுகின்றதோ அங்கு பல்வகைப் பெருமைகளோடும் தெய்வத்துவம் மிளிர்கின்றது. இயற்கையாகவே பொறுமை, சகிப்புத்தன்மை, பக்தி, பிரேமை நிரம்பியவர்கள் பெண்கள்.

பெண்ணின் பெருமைக்கு பதிவிரதா தர்மம் இலட்சியம். கற்பு சிறந்த கிரீடம். நாணம், பொறுமை அணிகலன்கள் ஆகும்.

பதிவிரதா தர்மம் என்னும் நற்பண்பின் சக்தியைக் கொண்டு சாவித்திரி தன் கணவனின் உயிரை மீட்டாள். அநுசூபமா திருமூர்த்திகளையும் குழந்தைகளாக மாற்றினாள். நளாயினி தொழுநோய் பிடித்த கணவரின் உயிரைக் காப்பதற்கு கதிரவனின் சஞ்சாரத்தை தடை செய்தாள்.

மலைபோல் துன்பம் வந்தாலும் கற்பு என்னும் சக்தியால் அவள் காப்பாற்றப்படுவாள், இரட்சிக்கப்படுவாள்.

எளிமை, பணிவு, சுறுசுறுப்பு இனிய சுபாவம், உயர்ந்த தத்துவங்களின் மேல் பற்றுதல், அடக்கம் ஆகியவைகளின் கூட்டுக் கலையே நாணம். நாணம் பெண்ணை தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது.

*"நிறை உடைமை நீங்காமை வேண்டின்*
*பொறை உடைமை போற்றி ஒழுகப்படும்"*

என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்கிற்கு அமைய பொறுமையாக வாழவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் இல்லற வாழ்வில் இருக்கும் போது கணவனின் பாதி அங்கமாகும். இறைவனையும் அர்த்த நாரீஸ்வரர் முகூர்த்தத்தில் வழிபடுகிறார்கள்.

ஆணிற்கு வீடு ஒன்று, பெண்ணிற்கு வீடு இரண்டு. பிறந்த வீடு, புகுந்த வீடு என்பனவாகும். இரு இல்லங்களின் மேன்மையையும், நாட்டின் புகழையும் மேலோங்கச் செய்வது பெண்ணின் கரங்களிலேயே உள்ளது.

பெண்களிற்கு தாய்மை இறைவனால் அருளப்பெற்ற அருபெரும் கொடையாகும். ஒவ்வொரு குழந்தையின் முழு எதிர்காலமும் கருவில் சிசு வளரும் ஒரு தாயின் பழக்கத்தையும் நடத்தையையும் சார்ந்து இருக்கின்றது. வீட்டையும் சமூகத்தையும், நாட்டையும், மனித இனத்தையும், தாங்கும் தூண் தாயாவாள்.

பெண்களை பிரக்கிருதி தேவி என அழைக்கிறார்கள். எல்லா வேதங்களிற்கும் ஆதாரம் காயத்ரி தேவி. காயத்ரியை பெண்மை வடிவமாக சித்தரித்து இருக்கிறார்கள். வேதங்களை வேத மாதா, பூமியை பூமி மாதா, இயற்கையை இயற்கை அன்னை என உலகம் மதித்து வணங்குகிறது. இதன் மூலம் பெண்களை இல்வுலகம் எத்தகைய உயர் நிலையில் வைத்துப் போற்றுகின்றது என உணரலாம்.

எந்தக் காலத்திலும் பெண்களே நாட்டிற்கு முதுகெலும்பு போன்றவர்கள். இதயம், உயிர்மூச்சு போன்றவர்கள்.

இன்றைய நிலைமைக்கு வீட்டுப் பெரியவர்களான தாய் தந்தையர்தான் மூல காரணம். எனவே இளம் சந்ததியாரிடம் நல்லொழுக்கம், நற்பண்பு, தெய்வ நம்பிக்கை முதலிய சகல நற்பழக்க வழக்கங்களை தாய் தந்தையர்கள், ஆசிரியர்கள் கூறி செயற்பாட்டில் காட்டி வளர்த்துவிடல் வேண்டும்.

*"தாயிற் சிறந்த கோவிலும் இல்லை*
*தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"*

குமுதினி . சி
*பழைய மாணவி*
*இந்து மகளிர் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vertigo And Phobias

Phobos in Greek means fearing or fleeing, or being averse to something. In French, Phobos means flight - that is running away from something. It is in fact, an exaggerated, usually inexplicable and illogical fear of a particular object or class of objects. For example, here is a list of such Phobias -

| | | |
|---|---|---|
| Zoo phobia | - | Fear of animals |
| Acrophobia | - | Fear of heights |
| Nyctophobia | - | Fear of night |
| Ochlophobia | - | Fear of crowds |
| Xenophobia | - | Fear of strangers |
| Claustrophobia | - | Fear of being in closed or narrow spaces |
| Hydrophobia | - | Fear of water |
| Agorophobia | - | Fear of being in open or public places |

And so to be phobicus in Latin, phobic or phobique as the French say it, and phobikos in Greek, mean to be averse to something or be afraid of something or flee from something.

The fact that - this word phobia exists in most European Languages, show that the Lyophic condition was found in many western countries.

Acrophobia or fear of height may result in an individual having vertigo - which means dizziness, where the environs seem to whirl, or the individual may feel himself/ herself revolving. It is not a disease, it is a subjective symptom of disturbed stability. In mild form, it may be feeling of lifelessness, giddiness, mental confusion, insecurity, or even unsteadiness.

In the severe form, that is vertigo it gives a feeling of whirling or propulsion, often accompanied by sweating nausea, vomiting, and inability to stand. The body mechanisms that control normal stability are.

(1) The muscles and joints of the body,
(2) The muscles of the eyes,
(3) The end organ of equilibrium, the three canals situated in the internal ear.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is when these three mechanisms coordinate, the equilibrium is maintained. They promptly adjust the body to changes of position in space.

Vertigo occurs when there in no prompt adjustment made, either because the equilibrium system fails to funtion, or if the individual is not able to cope with an unaccustomed motion.

Take the case of air craft pilots and under water divers - They are subject to vertigo because the environs in which they work frequently have no reference point by which to orient their direction of movement. A pilot may for example, sense that he is gaining height when actually he is losing height. He may feel he is turning left, when he is in fact going straight.

Vertigo is caused by many factors visual disturbances or disturbances of the eye muscle, chronic alcoholism, anemia, changes in blood supply to the brain, due to changes in blood pressure, falls, fainting, certain infection of the coverings of the brain, and tension are some of the causes of vertigo or dizziness.

Vertigo can also accompany injuries. When an eardrum membrane ruptures the in- rushing air or water is usually of a temperature different from the internal body temperature. Until the temperature of the air or water, becomes equal to the internal ear temperature, dizziness, vertigo usually occurs.

In the case of air pilots and divers, there is the inability for them, to determine, the true position of their body, motion or altitude relative to the Earth, or his surrounding. The human sensory apparatus is not delicate enough to perceive slow and gradual changes in motion. This will result in spatial disorientation. If the pilot looks down while turning, a coriolis effect occurs - that is he feels he is going down.

A natural reaction to this is to spin. An illusion of non - motion is created. When the pilot corrects it he has the feeling of spinning in opposite direction, and when he counter acts to correct it, he goes back into the original spinning pattern. This phenomenon is known as the "Grave yard spin" - only a pilot will know what it is. And so phobias and vertigo play havoc on an individual and may completely shatter him.

*Source - Encyclopaedia Britanica*

**Thilaka V. Wijiyaraman**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

# A Well Wisher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்புக் கிளை- மூன்றாம் ஆண்டு (1996) அறிக்கை

## 25.02.1996 தொடக்கம் 25.01.1997 வரை

சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 1996ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 25ம் திகதி மாலை 3.00 மணியளவில், 24 டீல் பிளேஸ் ஏ இல் உள்ள திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் இல்லத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு 29 அங்கத்தவர்கள் வருகை தந்திருந்தனர். கூட்டம், செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில், திருமதி. மனோன்மணி அருணாசலத்தின் தேவாரத்துடன் ஆரம்பமாகியது.

செயலாளர் திருமதி தயாநிதி செல்வநாயகம் ஆண்டறிக்கையை வாசித்தார். செயலறிக்கை சரியென திருமதி அபிராமி கயிலாசபிள்ளை முன்மொழிய திருமதி மகேஸ்வரி கணேஷமூர்த்தி வழிமொழிந்தார். அதைத் தொடர்ந்து பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை கணக்கறிக்கையை வாசித்தார். கணக்கு அறிக்கை சரியென திருமதி மனோன்மணி அருணாசலம் முன்மொழிய திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் வழி மொழிந்தார்.

பின்பு நடைமுறை ஆண்டிற்கான நிர்வாகக் குழுவினரை அங்கத்தவர்கள் தெரிவு செய்தனர். செல்வி சற்சொரூபவதி நாதன் மீண்டும் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார். திருமதி தயாநிதி செல்வநாயகம் தான் கண்டியில் இருப்பதால் தனக்குத் தொடர்ந்து செயலாளர் பதவியில் இருந்து வேலைகள் செய்வது கடினமாக இருக்கும் எனவும் தான் அப்பதவியில் இருந்து விலக விரும்புவதாகவும் கூறினார். அங்கு குழுமியிருந்த அங்கத்தவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு அவரை உப செயலாளராக பதவி வகிக்கும்படி கூறினர். அவரும் அதற்குச் சம்மதித்தார். அச்சமயம் செயலாளரின் கடமைகளைச் செய்துவந்த திருமதி சிவகாமி அம்பலவாணர் புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மீண்டும் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சென்ற ஆண்டு நிர்வாகக் குழுவினரையே சில மாற்றங்களுடன், அன்று குழுமியிருந்த அங்கத்தவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.

### தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

| | |
|---|---|
| தலைவி | ✦ செல்வி சற்சொரூபவதி நாதன் |
| உபதலைவர்கள் | ✦ திருமதி இந்திராணி சோமசுந்தரம் |
| | ✦ திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன் |
| | ✦ திருமதி பொன்மலர் கந்தசாமி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பொதுச்செயலாளர் | ✦ | திருமதி சிவகாமி அம்பலவாணர் |
| உதவிச்செயலாளர்கள் | ✦ | திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| | ✦ | திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் |
| பொருளாளர் | ✦ | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| உதவிப்பொருளாளர் | ✦ | திருமதி கௌரி தேவசேனாதிபதி |
| நிர்வாகக் குழுவினர் | ✦ | திருமதி நாகராஜேஸ்வரி அலெக்ஸாண்டர் |
| | ✦ | திருமதி ருக்மணி அரசரத்தினம் |
| | ✦ | செல்வி ஞானலக்ஷ்மி பாலசிங்கம் |
| | ✦ | செல்வி சீதா செல்லையா |
| | ✦ | திருமதி மகேஸ்வரி கணேஷமூர்த்தி |
| | ✦ | திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் |
| | ✦ | திருமதி நாகேஸ்வரி கனகசபை |
| | ✦ | திருமதி விமலா மணிவாசகன் |
| | ✦ | திருமதி நந்தினி மோகன் |
| | ✦ | திருமதி யோகேஸ்வரி (சந்திரா) பரமேஸ்வரன் |
| | ✦ | திருமதி சீதா பொன்னுத்துரை |
| | ✦ | திருமதி மல்லிகாதேவி சரவணபவான் |
| | ✦ | திருமதி புவனேஸ்வரி சத்தியநாதன் |
| | ✦ | திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம் |
| | ✦ | திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம் |
| | ✦ | திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன் |
| | ✦ | திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ் |
| | ✦ | திருமதி பத்மா சோமகாந்தன் |
| | ✦ | திருமதி நாகபூஷணி சுப்பிரமணியம் |
| | ✦ | செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| | ✦ | செல்வி பிருந்தா தவக்குமாரன் |
| | ✦ | திருமதி தற்பராதேவி தில்லைநாதன் |
| | ✦ | திருமதி குகஜோதி விஜயநாயகம் |
| | ✦ | திருமதி திலகா விஜயரத்தினம் |
| | ✦ | திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம் |
| போஷகர் | ✦ | திருமதி புஷ்பம் சுப்பிரமணியம் |
| மீள் பரிசோதகர் | ✦ | ரீ அலெக்ஸாண்டர் அன்ட் கம்பனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி தயாநிதி செல்வநாயகம், இவ்வளவு காலமும் செயலாளராக இருந்து திறமையாகச் செயலாற்றியதைப் பாராட்டி நன்றி கூறினார். அவர் உப செயலாளராகப் பதவி ஏற்க சம்மதித்தமைக்காக தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

தலைவி, நாட்டின் சூழ்நிலை காரணமாக யாழ்நாதம் இதழ் 2 புது வருடத்துடன் வெளியிடுவது கடினமாக இருக்கும் எனவும் வெளியீட்டு விழாவை சிறிது பிற்போடுவோம் எனவும் தெரிவித்தார். அங்கத்தவர்கள் சிலர் யாழ்நாத இதழுக்கு கட்டுரைகள் எழுதவும், விளம்பரங்கள் சேர்த்துத் தரவும் முன்வந்தார்கள்.

பொருளாளரின் ஆலோசனையின்படி நடைமுறைக் கணக்கில் இருக்கும் ரூபா 50,000/– த்தை வைப்பிட்டுக் கணக்கில் போடுவதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டம் திருமதி சத்தியா சிவலிங்கத்தின் தேவாரத்துடன் பி.ப.4.00 மணிக்கு இனிதே நிறைவேறியது.

1996ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு 2, கியூ வீதி 131ஆம் இலக்கத்தில் உள்ள கொம்பனித் தெரு – அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் அபிஷேகம் –பூசை ஒழுங்கு செய்து எங்கள் கல்லூரி நலன் குறித்து பிரார்த்தனை செய்தோம். திருமதி பரமேஸ்வரி பாலசிங்கமும் திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும் முன்னின்று பூசை ஒழுங்குகளைக் கவனித்தனர்.

யாழ்நாதம் இதழ் 2 வெளியிடுவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக சங்கத்தின் பொதுக் கூட்டம் 1996ம் ஆண்டு ஜுலை மாதம் 14ம் திகதி பி.ப.3.00 மணிக்கு கொழும்பு–4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 18 அங்கத்தவர்கள் வந்திருந்தனர். வெளியீட்டு வேலைகளை அங்கத்தவர்கள் பகிர்ந்து செய்ய முன்வந்தார்கள்.

யாழ் நாதம் இதழ் 2 நூல் வெளியீட்டு விழா 1996ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3ஆம் திகதி பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்தில் செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. எங்கள் கல்லூரி பழைய மாணவியும் இல்மா இன்ரநாஷனல் கல்லூரி அதிபருமான திருமதி ரஷிதா மொகிதின் பிரதம அதிதியாக வருகை தந்திருந்தார். திருமதி யமுனா கணேஷலிங்கம் சிறப்பு அதிதியாக வருகை தந்திருந்தார். அவர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றி உரித்தாகட்டும். மேலும் இவ்விழாவில் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டு எம்மை உற்சாகப்படுத்திய முன்னால் அதிபர் திருமதி நாகராஜா அவர்கட்கும் எமக்கு அறிவு புகட்டிய ஆசிரியைகளாகிய

திருமதி சுப்பிரமணியம்
திருமதி மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சொக்கலிங்கம்
திருமதி கோடீஸ்வரன்
திருமதி முத்துக்குமாரசுவாமி
திருமதி முத்துவேல்பிள்ளை
செல்வி செல்வநாயகம்
திருமதி நாகரத்தினம்
திருமதி சபாநாயகம்
திருமதி சரவணா
திருமதி பாலசிங்கம்
திருமதி இராஜகுரு
திருமதி சிவகுருநாதன்
திருமதி துரைசிங்கம்

ஆகியோருக்கும் எங்கள் சங்கத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நூல் வெளியிட்டு விழாவை நாம் நடாத்துவதற்காக சரஸ்வதி மண்டபத்தை இலவசமாகத் தந்துதவிய இந்து வித்தியா விருத்திச் சங்கத்திற்கு எமது பிரத்தியேக நன்றி உரித்தாகட்டும். என்றும் போலச் சகோதரிகள் " திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன் – திருமதி குகஜோதி விஜயநாயகம்" இறை வணக்கமும் கல்லூரி கீதமும் பாடி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்கள். திருமதி திலகா விஜயரத்தினம் பிரதம அதிதிக்குப் புகழுரை வழங்கினார். விழாவைச் சிறப்பிக்க செல்வி அனுராதா அம்பலவாணர், செல்வி கீதா சோனாதிராஜா, செல்வி சாந்தாவதி தர்மலிங்கம், செல்வி ஞானேஸ்வரி பாலசிங்கம், திருமதி லீலாவதி இரத்தினசிங்கம், திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கம் ஆகியோர் இனிமையான இன்னிசை விருந்து அளித்தனர்.

அதைத் தொடர்ந்து செல்வி பிருந்தா தவக்குமாரன், செல்வி அனுராதா அம்பலவாணர், செல்வி கீதா சோனாதிராஜா, திருமதி விமலா மணிவாசகன், செல்வி ஞானலஷ்மி பாலசிங்கம் செல்வி சாந்தாவதி தர்மலிங்கம் ஆகியோர் வில்லிசை அளித்தனர். தரமான வில்லுப்பாட்டை மிகவும் குறுகிய காலத்தில் எழுதி இசை அமைத்து மேடை ஏற்றும் தகுதியை உருவாக்கிய செல்வி பிருந்தா தவக்குமாரனுக்கும் செல்வி அனுராதா அம்பலவாணருக்கும் எங்கள் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றிய ஏனைய அங்கத்தவர்களுக்கும் எங்கள் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

இவ்விழா இன்னல்கள் இன்றி இனிதே நடைபெற இன்முகத்துடன் உழைத்த எங்கள் சங்க அங்கத்தவர்கள் எல்லோருக்கும் முக்கியமாகத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனிற்கும் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நாதம் இதழ் இரண்டை பிரசுரிக்க உதவிய யுனிஆர்ட்ஸ் நிறுவனத்திற்கும் குறிப்பாக அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்கட்கும், இம்மலர் அழகுருப் பெற சகல ஒத்துழைப்பும் வழங்கிய திரு எம்.ஆர். ராஜ்மோகன் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அடுத்த பொதுக்கூட்டம் 1996ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி டீல் பிளேஸ் ஏ, 24ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்றது. யாழ்நாதம் இதழ் 1 புத்தகம் தங்களுக்கு கிடைக்கவில்லை எனச் சில அங்கத்தவர்கள் தெரிவித்து இருந்தனர். ஆகவே இதழ் 2 சஞ்சிகை எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற நோக்கில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 18 அங்கத்தவர்கள் வந்திருந்தனர். கூட்டததிற்குச் சமூகமளித்திருந்த அங்கத்தவர்கள் இதழ் 2 சஞ்சியை விற்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தனர்.

சங்கத்தின் 3வது நடப்பு ஆண்டில் பின்வரும்
செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 11.05.96 | 61/2 அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு– 3 | 16 |
| 22.06.96 | கொழும்புத் தமிழ்ச் சங்கம் | 19 |
| 09.11.96 | 61/2, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு–3 | 11 |
| 07.12.96 | 61/2, அப்துல் கபூர் மாவத்தை கொழும்பு–3 | 3 |
| 17.12.96 | 24, டீல் பிளேஸ் ஏ, கொழும்பு–3 | 9 |

07.12.96 கூட்டம், அதன் எண்ணிக்கை (Quorum) அங்கத்தவர்கள் சமூகமளிக்காததால் இரத்துச்செய்யப்பட்டது.

நாட்டு நிலைமை காரணமாக கூட்டங்களுக்கு அங்கத்தவர்கள் வருகை மிகக் குறைவாகவே எப்போதும் இருந்தது.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு உதவும் பொருட்டு எங்கள் சங்கம் எழுதும் உபகரணங்கள் வாங்கி 186 சிறு பொதிகளாகச் செய்து வட கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்திடம் (வகீபிபாபமாசம்) 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி கையளித்தது. இப்பொதிகள் செய்வதில் திருமதி பரமேஸ்வரி பாலசிங்கமும் திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். அவர்களுக்கு எமது பாராட்டுகள் உரித்தாகட்டும். சம்மேளனம் சேர்த்த பொதிகளுடன் இவை வட பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எங்கள் சங்கம், மற்றைய ஸ்தாபனங்கள் சில முன் நின்று செய்த காரியங்களுக்கு ஆதரவு அளித்தது. எங்கள் சங்கம் உட்பட 11 மகளிர் அமைப்புகள் ஒன்றிணைந்து செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷாந்தி குமாரசாமி மீதான பாலியல் வன்முறை, கொலை என்பவற்றைக் கண்டித்து மேன்மை மிகு ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கு ஒரு கடிதம் 1996ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அனுப்பியிருந்தோம். அதில் பெண்களைக் கைது செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற கண்டிப்புக் கூட்டங்களிலும் கண்டன அமர்வுகளிலும் எங்கள் சங்க அங்கத்தவர்கள் சிலர் பங்கு பற்றினார்கள்.

தேசிய சமாதானப் பேரவை 1996ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி பி.ப. 3.00 மணிமுதல் 21ஆம் திகதி காலை வரை விஹாரமகாதேவி பூங்கா—கொழும்பில் ஒழுங்கு செய்த நாடளாவிய சமாதானத்திற்கான இரு நாள் அமர்விற்கு எங்கள் சங்க அங்கத்தவர்கள் சிலர் சமூகமளித்திருந்தனர்.

யாழ்ப்பாணத்துடன் ஓரளவு கடிதமூலம் தொடர்பு கொள்ளத்தக்கதாக வந்தவுடன், நாங்கள் எங்கள் கல்லூரி அதிபருடன் 25.06.1996, 14.09.1996 திகதிகள் இடப்பட்ட இரு கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டு கல்லூரிக்கு தற்சமயம் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்கள் பற்றி அறிவிக்குமாறு கேட்டோம். கல்லூரி அதிபர் தற்சமயம் கல்லூரிக்கு பின்வரும் உபகரணங்கள் தேவைப்படுவதாக 27.09.1996, 04.10.1996 திகதிகள் இடப்பட்ட இரு கடிதங்கள் மூலம் தெரிவித்திருந்தார்.

தமிழ், ஆங்கில தட்டச்சு பொறிகள்
பிரதி செய்யும் இயந்திரம், பிரதி செய்யும் தாள்கள், ஸ்ரென்ஸில்ஸ்
மாணவர்களுடைய குடிதண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு நீர் இறைக்கும் இயந்திரம்

மேலும் அவர் தன் கடிதத்தில் எங்கள் சங்கத்தின் நிதி நிலைமைக்கேற்ப எங்களால் முடிந்தவற்றை கல்லூரிக்குத் தந்து உதவுமாறும் நாங்களாகவே முன்வந்து உதவுவதற்கு அனைவர் சார்பிலும் நன்றியைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டு இருந்தார்.

அதைத் தொடர்ந்து நாங்கள் இந்த உபகரணங்கள் வாங்கினால் எப்படி எங்கள் கல்லூரிக்கு அனுப்பலாம் என ஆராய்ந்து கொண்டு இருந்தோம். எங்கள் பிரச்சனையை வகீபிபாபமாசம் தலைவர் கலாநிதி. வி.அம்பலவாணரிடம் தெரிவித்தோம். அவர் மூலம் எங்களுக்கு யாழ் இந்து கல்லூரி பழைய மாணவர்களான திரு.பரமேஸ்வரனும் திரு.கனகரத்தினமும் அறிமுகமானார்கள். அவர்கள் நாங்கள் எங்கள் கல்லூரிக்கு உதவ விரும்பும் உபகரணங்களை தாம் பொறுப்பேற்று எங்கள் கல்லூரியில் சேர்ப்பிப்பதாகக் கூறினார்கள்.

இதை அறிந்ததும் நாங்கள் 17.11.1996 கூடிய செயற்குழுக்கூட்டத்தில் எங்கள் சங்கத்தின் வைப்பீட்டுக் கணக்கு ஒன்றில் உள்ள ரூபா 50,000/— த்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைக் கணக்கில் இருந்து ரூபா 25,000/– த்தையும் பயன்படுத்தி ஒரு தமிழ் தட்டச்சுப் பொறி ஒரு பிரதி செய்யும் இயந்திரம் ஆகியவற்றை வாங்குவதாகத் தீர்மானம் எடுத்தோம்.

நாங்கள் ஒரு தமிழ் தட்டச்சுப் பொறி (Tamil Typewriter Model Olympia SG3 with 18 inch carriage), Lanka General Trading Company Limited, Successors to Sri Lanka State Trading (General) Corporation, 100 Navam Mawatha, Colombo 02 இல் ரூபா 22,400/– க்கு 20.12.1996 அன்று வாங்கினோம். ரூபா 20,000/– க்கு மேற்பட்ட பொருள் வாங்கியதால் எங்களுக்கு இலவசமாக ஒரு மருந்து அடிக்கும் கருவி (Sprayer), ஒரு சிறு கத்தரிக்கோல், ஒரு அழி இரப்பர் (erasor) என்பன தந்தார்கள் அவற்றை எங்கள் கல்லூரிக்கு அனுப்பும் பொருட்டு திரு. பரமேஸ்வரனின் காரியாலயத்தில் 26.12.1996ல் கையளித்தோம்.

பிரதி செய்யும் யந்திரம் (Roneo Machine Model Cyklos M212) Ceylon Business Appliances Ltd., Head Office, 112 Reid Avenue, Colombo 4 இல் ரூபா 62,000/–க்கு 21.01.1997ல் வாங்கி அதை எங்கள் கல்லூரிக்கு அனுப்பும் நிமித்தம் 24.01.1997இல் திரு பரமேஸ்வரனின் காரியாலயத்தில் ஒப்படைத்தோம்.

எங்கள் வைப்பீட்டுக் கணக்கில் உள்ள ரூபா 50,000/– ம் 01.03.1997இல் தான் நிறைவடையும். அத்திகதிக்கு முன் அதனை மாற்றினால் அதிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட 15% இலும் குறைவான வட்டியே எமக்குக் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பிரதி செய்யும் இயந்திரம் வாங்குவதற்காக ரூபா 60,000/– முற்பணமாகத் தந்து உதவினார். அவருக்கு எங்கள் சங்கத்தின் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது ஆங்கில தட்டச்சுப் பொறி, நீர் இறைக்கும் யந்திரம் ஆகியவற்றை வாங்குவதற்கு நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

எங்கள் செயற்குழு அங்கத்தவர்களில் ஒருவரான திருமதி நாகராஜேஸ்வரி அலெக்ஸாண்டர் தனது கணவரின் நிறுவனமான ரீ அலெக்ஸாண்டர் அன்ட் கம்பனி, ரீ 3/7 Anderson Flats, Colombo-5 மூலம் எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக மீள் பரிசோதனை (Audit) செய்வித்துத் தந்தார். திருமதி நாகராஜேஸ்வரிக்கு எனது பாராட்டுகளையும் ரீ அலெக்ஸாண்டர் அன்ட் கம்பனிக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது சங்க அங்கத்தவர்கள் யாழ்நாதம் இதழ் 3 இற்கு தேவையான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். மூன்றாவது மலர் சங்க அங்கத்தவர்கள் எல்லோரினதும் பங்களிப்பை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு டீல் பிளேஸ் ஏ, 24ஆம் இலக்கத்தில் உள்ள திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் இல்லத்தில் நடைபெற உள்ளது.

சீரற்ற நாட்டு நிலைமை காரணமாக எங்கள் கல்லூரி மாணவிகளும் ஆசிரியைகளும் தங்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டு அயல் ஊர்களுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் கல்லூரித்தளபாடங்கள், உபகரணங்கள் பல காணாமல் போய்விட்டன. அயல் ஊர்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரில் பலர் இன்னும் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பவில்லை. தமது வீடுகளுக்குத் திரும்பிய சொற்ப மாணவர்கள், ஆசிரியர்களுடன் பல இன்னல்களுக்கு மத்தியில் எங்கள் கல்லூரி ஒருவாறு இயங்கிக் கொண்டு இருக்கின்றது.

இன்று பதவியேற்க இருக்கும் புதிய நிர்வாகக் குழு தங்கள் திறமைகள் முழுவதையும் உபயோகித்து எங்கள் கல்லூரி பழைய நிலைமைக்குத் திரும்ப தம்மாலான உதவிகளைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

திருமதி சிவகாமி அம்பலவாணர்
*கௌரவ செயலாளர்.*
*25.01.1997*

## யாழ் நாதம் இதழ் 2 வெளியீட்டின்போது



பிரதம அதிதியை வரவேற்று மேடைக்கு அழைத்து வருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பு விருந்தினராக வருகை தந்த முன்னாள் ஆசிரியைகள்.



பார்வையாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




The largest animal ever to live on earth is 100 feet long and weighs 400,000 pounds. That is four times larger than the largest dinosaur. The only place big enough for it is the sea. The monster is the blue whale!

The average pencil can draw a line 35 miles long before it runs out of lead!

Americans swallow 17 billion aspirin tablets a year. That's an average of 77 aspirins for every person and that's a lot of headaches!

In order for one bee to make one table spoon of honey, it must make 4,200 trips to flowers! So now you know what it means to be busy as a bee!

Most people think of powdered milk as something very modern. But 700 years ago desert soldiers made powdered milk by drying horse's milk in the sun. When they wanted to drink some, they just mixed the powdered milk with water.

There are lizards that can bark like dogs.

The word holiday comes from the words "holy" and "day". Holidays were days when people did not go to work because they went to church services instead. Later the word holiday was used for any day when people did not work.

During every meal you sprinkle something on your food that is made up of two poisons - sodium and chlorine. But when these

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

two poisons are chemically combined they turn into a harmless seasoning called salt.

Today it is not surprising to hear of a doctor operating on a sick person's heart. But the first open-heart operation was done in Chicago in 1803. The doctor was a surgeon named Danel Hale Williams.

If you add an h to the word tough, you get though. Right. Now add an r and you have through. Did you notice that each time you added a letter, the sound of the last four letters o-u-g-h changed? Pretty tricky!

The kangaroo got its name from Captain James Cook. When the English explorer was in Australia, he asked a native what the name of the strange, jumping animal was. The native replied, "kangaroo" In his language it meant "I don' know".

***Compiled by Indrani Somasundram***

### குழந்தை விளையாட்டு - ஒரு விபரீதம்.

*ஒரு வயது வரை - குழந்தையை மிகவும் கவனமாகப் பராமரிக்க வேண்டும். பிறந்த குழந்தைக்கு ஒரு மாதம் வரை தாயின் அரவணைப்பு அவசியம். தனித்து விடப்படும் குழந்தைக்கு பெரும்பாலும் **SIDS** எனும் தீடீர் மரணம் சம்பவிக்கிறது. அது போலவே சிறு குழந்தைகளைத் தலைக்கு மேலே தூக்கிப் போட்டு விளையாட்டுக் காட்டுவதும், காலில் நிற்க வைத்து ஆட்டுவதும், கைகளைப் பிடிக்கச் சொல்லி தூக்குவது போன்ற செய்கைகளிலிருந்தும் மூளைத் தண்டு வடப் பகுதி பாதிப்படைவதாக ஒரு மருத்துவக் குறிப்பு கூறுகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "HOW SHOULD I BE?"

"As a girl I am asking you,
how should I be?.
In front of our society, tell me
how should I be?.

When I spend much
they say I am a spendthrift.
When I spend a little
they say I am a miser.

I don't know how much
I should spend!.
Please tell me clearly
how should I be?.

When I insist much
they say I am obstinate.
When I insist a little
they say I am fickle.

I don't know how much
I should insist!.
Please tell me frankly
how should I be?.

When I play much
they say I am playful.
When I play a little
they say I am lazy.

I don't know how much
I should play !.
Please tell me briefly
how should I be ?.

When I speak much
they say I am talkative.
When I speak a little
they say I am reserved.

I don't know how much
I should speak!.
Please explain to me
how should I be ?.

When I advance much
they say I am wayward
When I lay behind
they say I am laggard.

I don't know how
I should behave !.
Please tell me clearly
how should I be?.

When I eat much
they say I am greedy.
When I eat a little
they say I am fussy.

I don't know how much
I should eat!.
Please tell me frankly
how should I be?.

When I am accommodating
they say I make myself cheap.
When I remain stiff
they say I am proud.

I don't know how
I should behave !.
Please tell me briefly
how should I be ?.

When I dress well
they say I look so stylish.
When I dress simply
they say I look indecent.

I don't know how
I should dress !.
Please explain to me
how should I be?.

As a girl I am asking you,
how should I be?.
In front of our society, tell me
how should I be?.

**T. Brintta**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Are you anxious to know about anxiety

**Miss. Satsorupavathy Nathan**

As long as we consider that events are fated to happen to us, we are subject to them. Anxiety will constantly oppress us. We shall have to spend much of our strength in overcoming it instead of putting it to good use in our work. For that reason alone it is necessary to ask what anxiety really means.

When our sense of security suddenly collapses, we feel as though we were falling into what seems a void, and we may believe ourselves to be inextricably caught by the situation. Is this fear, dread or anxiety? It is fear because fear relates directly to something tangible. However, when it is overwhelming, it can become anxiety. Anxiety is caused primarily by the intangible. It is difficult to realize anxiety; or to find a reason for the oppressive feeling. Consequently it overshadows and hinders our thoughts and actions. Anxiety can have purely physiological causes. With heart patients the sensation of tightness in the chest produces anxiety symptoms; with Asthma it is the need for breadth. Greed may arise from a sense of inner emptiness, which one hopes to overcome through material possession. Extreme possessiveness is always a weakness. It reflects an anxious desire for possession. There is an anxiety, which comes when we fear that the roots of our being may be attacked, perhaps with pain to ourselves. Strikes, Economic Catastrophe or Political upheaval may undermine the efforts of a lifetime to assure one's income and social status. In this industrial society not even social insurance can permanently eliminate latent anxiety arising from these ever-present threats to one's livelihood. Just as primitive men feared that fire, war or terror would drive them from their caves; so we may fear the loss of our homes. Then we may fear the horror of life itself, but in such conditions of terror, we also fear death.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Such basic situations make it clear that anxiety is a normal component of every human life. It is a great handicap. However every handicap contains within it a challenge to overcome it. Were there no anxiety in the world, there would also be no confidence. To be touched by fear is no shame, but it is shameful to be enslaved by it. Although anxiety is always present, we should not forget that confidence making situations exist too. If we are unable find them outside ourselves, then we must search for then within. For, even though he shares life of the animals, man is the only known creature able to overcome anxiety.

The heart of the child trembles between anxiety and curiosity when he enters school for the first time and must leave his mother. The demand for a performance to which the child does not feel equal may be decisive in his life. Failure will bring shame, even a sense of cowardice. Climbing poles or their equivalents may be encountered again and again in life. If the first obstacle is met, then we may hope that later ones will also be endured. Anxiety filled hours, which recur throughout life, begin at school. Extreme severity may cause lasting injury to children unless they have the resources with which to fight back. Many are unable to muster them. To these people, "superior" remains the individual whom they fear. The exaggerated "you must" and "you may" not cripple initiative. Such regulations and prohibitions are the centre of frustration. Disputes between the parents in the presence of children release a poisonous anxiety, which may persist throughout their lives.

Situations, which are immediate causes of anxiety, reveal anew how much it is a component of life. Every while in the throes of anxiety, we are so disturbed that we do not know where to turn and what decision to make. This leads only too often to flight from indecision into compromise from fear into adventure or into new fears, flight from fear of reality and responsibility into alcohol and gambling. Why must these people drown themselves in alcohol? Every mania is a symptom of flight. It is simpler to leave the decision to accident than to take the initiative oneself. Should one be unlucky then it is at least not one's own fault. It is bad luck.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To escape from anxiety one either flees from it or attacks it. But we would be making a mistake if we tried to relate all aggressive reactions to anxiety alone. Often suicide is actually vengeance on hysterical desire to punish. Suicide can also result from genuine despair. However, behind despair lurks anxiety. What are speed demons racing? What drives them to irresponsibility both toward themselves and others? What oppresses them? And why do they wish to overtake that which drives them? It is because they do not know that anxiety drives them. It is possible to escape anxiety through flight - but flight leads to nothing. It ends in exhaustion and fainting fits. There is another method of escape from anxiety and that is transference. Transference exhibits constructive traits in its effects, and it is a lifesaver for those who are still unable to look anxiety in the eye. It is not only knowledge but also creativity which allows us to master anxiety. The creative man transforms anxiety and through this transformation he builds his life by changing chaos into order. For this he needs self-control. To control anxiety even if only partially is a great step forward. Whoever who masters it is also master of his own life. To achieve this dominance is hard indeed. If one wants to remain honest with oneself as well as with one's fellows, yet there is something else, which goes further than simple control. One is bound to it, as the fisherman to his fish and the actor to his public. What we must achieve is freedom - freedom from anxiety. This means not only to control fear but also to overcome anxiety. He who overcomes anxiety bears death with the same equanimity as life. Whoever awakens trust within himself can accept fears without anxiety. His positive acceptance disarms fear. He is able to perceive the Divine with clear vision and untroubled heart. Whenever people unite in the service of a higher unity anxiety gives way, provided that devotion is not denatured by emotionalism. Should that be present, then even this cornmeal praise of God is but a flight from anxiety. The ultimate conquest of anxiety lies in the smile. Its radians mixes shadow and light, fear and trust in that harmony in which we all participate.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முறுக்கு

### தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| அரிச்சந்திரா பச்சை அரிசி மா | – | 1 பக்கற் |
| அரிச்சந்திரா உளுத்தம்மா | – | ½ பக்கற் |
| உப்பு | – | 1 தேக்கரண்டி |
| எள்ளு | – | 4 தேக்கரண்டி |
| சீரகப் பவுடர் | – | ¼ தேக்கரண்டி |
| மிளகுப் பவுடர் | – | ¼ தேக்கரண்டி |
| ஏலக்காய் பவுடர் | – | ¼ தேக்கரண்டி |
| வெள்ளைத் தேங்காய் எண்ணெய் | – | 1 போத்தல் |
| நீர் தேவையான அளவு | | |

### செய்முறை

அரிசி மாவையும் உளுத்தம்மாவையும் அரிதட்டில் அரித்து பெரிய பாத்திரத்தில் போடவும். பின்பு எள்ளுக்குக் கல்லரித்து மாவுடன் போடவும். அதன் பின்பு சீரகப் பவுடர், மிளகுப் பவுடர், ஏலக்காய் பவுடர், உப்பு ஆகியவற்றைப் போட்டுக் கலக்கவும். பின்பு ஒரு பாத்திரத்தில் நீர் எடுத்து சிறிது சிறிதாக விட்டு மாவைக் குழைக்கவும். முறுக்கு உரலில் இட்டு பிழியும் பதம் வரும்வரை தொடர்ந்து குழைக்கவும்.

அதன் பின்பு தாச்சிச் சட்டியில் தேங்காய் எண்ணெய் விட்டு அடுப்பில் காயவிடவும். குழைத்த மாவை முறுக்கு உரலில் இட்டு வாழை இலையில் சிறிது சிறிதாக பிழிந்து எடுத்து காய்ந்த எண்ணெயில் இட்டு பொன் நிறமாக வரும்வரை பொரித்து எடுக்கவும். அப்படி எடுத்த முறுக்கை ஆறவிட்டு தகரத்தில் போட்டு அடைத்து வைக்கலாம்.

## இனிப்புச் சீடை

### தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| வறுத்த சிவப்பு அரிசி மா | – | 2 சுண்டு |
| வறுத்த உளுத்தம்மா | – | 1 சுண்டு (வறுத்த உளுத்தம்மா கிடைக்காவிட்டால் உளுத்தம்மாவை வாங்கி வறுக்கலாம்.) |
| எள்ளு | – | ½ சுண்டு |
| சீனி | – | 1 சுண்டு |
| தேங்காய் | – | 1 பாதி |
| உப்பு | – | ¼ தேக்கரண்டி |

வெள்ளைத் தேங்காய் எண்ணெய் – 1 போத்தல்
வென்னீர் தேவையான அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்முறை

அரிசி மாவையும் உளுத்தமாவையும் அரித்து பெரிய பாத்திரத்தில் போடவும். பின்பு எள்ளைக் கல்லரித்து மாவுடன் போடவும். உப்பையும் கலந்து விடவும்.

தேங்காயைத் துருவி முதலாம் இரண்டாம் பால்களைப் பிழிந்து எடுத்து சோஸ்பானில் விடவும். சீனியை அதனுடன் போட்டு அடுப்பில் வைத்து சீனி கரையும் வரை காய்ச்சவும். பின்பு காய்ச்சின பாலை மாக்கலவையில் விட்டுக் கிண்டவும். பின்பு தேவையான அளவு வென்னீர் மட்டும் பாவித்து இறுக்கமாகக் குழைக்கவும். குழைத்த மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டவும்.

ஒரு தாச்சிச்சட்டி எடுத்து எண்ணெய் விட்டு அடுப்பில் காயவிடவும். காய்ந்தபின்பு சிறு சிறு உருண்டையாக உருட்டி வைத்த சீடையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு பொன்நிறமாகப் பொரிக்கவும். எண்ணெய் இல்லாது எடுத்து ஆறிய பின்பு தகரத்தில் போட்டு வைக்கலாம்.

## மிக்ஸர்

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| அவல் | – 100 கிராம் |
| வறுத்து உடைத்த நிலக்கடலைப் பருப்பு | – 1 சுண்டு |
| கடலைப் பருப்பு | – 1 சுண்டு |
| கறிவேப்பிலை | – 1 பிடி |
| மிளகாய்ப் பொடி | – 3 தேக்கரண்டி |
| உப்பு | – 3 தேக்கரண்டி |
| வெள்ளைத் தேங்காய் எண்ணெய் | – 2 போத்தல் |
| ஓமம் வறுத்துப்பொடி செய்தது | – 1 மேசைக்கரண்டி |
| பேக்கிங் பவுடர் | – 1 தேக்கரண்டி |
| அவித்த கோதுமை மா | – 3 சுண்டு |
| கடலை மா | – 3 சுண்டு |
| உள்ளி | – 50 கிராம் |
| தண்ணீர் | – தேவையான அளவு |

செய்முறை

முதலில் கடலைப் பருப்பை ஊறவைக்கவும். கறிவேப்பிலையை துப்பரவாக்கி கழுவி உலர விடவும். அவலைத் துப்பரவாக்கி பெரிய அவலை எடுத்து வைக்கவேண்டும். பின்பு ஓமப்பொடி செய்யவேண்டும்.

ஓமப்பொடி செய்யும் முறை

1 ½ சுண்டு அவித்த கோதுமை மாவையும் 1 ½ சுண்டு கடலை மாவையும் அரித்து பாத்திரத்தில் போடவும். அதனுடன் ஓமத்தூளையும் ஒரு தேக்கரண்டி மிளகாய்த்தூளையும் ஒரு தேக்கரண்டி உப்பையும் போட்டுக் கலக்கவும். பின்பு தண்ணீர் விட்டு உரலில் இட்டுப் பிழியும் பதத்திற்குக் குழைக்கவும்.

அடுப்பில் தாச்சிச் சட்டியை வைத்து எண்ணெயை விட்டுக் காயவைக்கவும். எண்ணெய் காய்ந்ததும் ஓமப்பொடி உரலில் மாவை அடைத்து காயும் எண்ணெயில் முழு உரலையும் இடியப்பத்திற்குச் சுற்றிப் பிழிவது போல் பிழியவும். பின்பு மறுபக்கம் திருப்பிவிட்டுப் பொன்னிறமாக வரும்வரை பொரித்து எண்ணை இல்லாது எடுத்து வைக்கவும். அடுத்ததாகக் காராபூந்தி செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMMON ACCIDENTS - PRECAUTIONARY MEASURES

*SAFEGUARD YOURSELF FROM ACCIDENTS*
*EVERY YEAR MANY ACCIDENTS OCCUR.*

*COMMON ACCIDENTS*

Don't use an electric heater with an exposed heating coil. If you touch the coil you may get an electric shock. Your hand may get burnt. From such a coil, heat will leak out to the surrounding area and your electricity bill will go up.

Replace quickly any damaged plugs or switches.

If the insulated cord is damaged or deteriorated, get it repaired or replaced by an electrician specially the leads connecting the electric iron.

Press the button once in a way to check whether the Trip switch operates.

Don't touch any wires fallen on the ground. Inform quickly the C.E.B. or the area officer to cut off the Electricity supply. Don't attempt to remove a tree touching any electric wires

Don't fix T.V. antennae close to any electric lines. Accidents have occured by such antennae falling on electric lines while being repaird or by being blown on to electric lines during stormy weather.

Quickly switch off the main switch. The person who received the electric shock should be pulled out by his clothes without touching his body. If you touch his body, you too will get the electric shock. To pull him out, use a dry cloth or coir string.

If a child inserts a piece of wire or a pencil into a plug socket it may end up in a tragedy.

*(Courtery Lanka Business Pages 1993, Part I)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments :-*

*Wellawatta*

*Nithyakalyani*

*Jewellery*

***Manufacturers & Exporters of Gems & Jewellery***

230, Galle Road, Colombo - 6, Sri Lanka.
Tel : 583392, 581566, 585427
Fax : 94-1-503948

*With Best Compliments :-*

**Books - Books - Books -Books - Books - Books**

Accountancy, Astrology, Law, Science,
Medicine, Management, Veterinary, Dental,
Engineering, Children, Computer, Marketing, Banking Etc.
Wide Variety for London O/L, A/L International Schools & School
Also
Greeting Cards, Gift Wrappers and Stationery

**Sri Lanka Stockist For**

**DP** PUBLICATION & THE ELBS

**BPP** CIMA, ACCA, AAT, CIB, ICSA, CIM.

LETT'S EDUCATIONAL
EARLY LEARNING
GCSE
A LEVEL

**PITRABAN**

**IMPORTERS WHOLESALER, RETAILER**

**(BOOKS AND STATIONERY)**

S/23, 2ND FLOOR, CENTRAL SUPER MARKET COMPLEX,
N. H. M. ABDUL CADER MAWATHA (RECLAMATION ROAD)
COLOMBO - 11, SRI LANKA.
TELEPHONE : 445340

RECLAMATION ROAD BUSES
112, 102, 107, 116, 145,168, 173 ETC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகின் எல்லா நாடுகளிலும் கைமருந்துகள் பாவிக்கப்படுகின்றன. பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த நோய்களைக் குணப்படுத்தும் முறைகள் இந்த நாடுகளிற் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றன.

சில கை மருந்துகள் மிகவும் பெறுமதிவாய்ந்தவையாக இருக்கலாம், சில பெறுமதி குறைந்தவையாகும். மற்றும் சில பயங்கர விளைவுகளைத் தரக்கூடும். கைமருந்துகளையும் நவீன மருந்துகளைப்போலக் கவனமாக கையாள வேண்டும். கைமருந்துகளை எவ்வாறு பாவிக்கவேண்டும் என்பதையும், அவ்வாறு பாவிப்பதால் தீமை ஏற்படமாட்டாதா என்பதையும் அறிந்து அவற்றைப் பாவிக்க வேண்டும்.

ஒரு சில நோய்களுக்கு நவீனமருந்துகளைப் போலவோ அல்லது அவற்றிலும் பார்க்கவோ கைமருந்துகள் சிறப்பாகவிருக்கலாம். அவை அநேகமாக மலிவாகவும் பாதுகாப்பாகவும் இருக்கின்றன. உதாரணமாக சாதாரண தடிமன், இருமல் போன்றவற்றுக்கு கொத்தமல்லி அவித்த நீர் ஏனைய வலிமையான மருந்துகளிலும் பார்க்கச் சிறந்தது.

ஒரு சில தாய்மார்கள் தங்கள்பிள்ளைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்பட்டால் கொடுக்கும் உப்புக் கஞ்சி, தேனீர், செவ்விளநீர் போன்ற பானங்கள் நவீன மருந்துகளிலும் பார்க்க வயிற்றோட்டத்தினால் ஏற்படும் சோர்வைத் தடுக்கிறது.

ஒரு சில நோய்களைக் கைமருந்துகளாற் குணப்படுத்த முடிந்தாலும் எல்லா நோய்களையும் கைமருந்துகளால் குணப்படுத்த முடியாது. அத்தகைய நோய்களுக்கு நவீன மருந்துகள் அவசியம். ஈர்ப்புவலி, நெருப்புக்காய்ச்சல், சளிக்சுரம் (நியூமோனியா), சமூக நோய்கள், வளரியளர்ச்சி (அபெண்டிசைரிஸ்) பிரசவத்தின் பின்னர் ஏற்படும் காய்ச்சல் போன்ற கொடிய நோய்களை விரைவாக குணப்படுத்த வேண்டியிருப்பதால் அவற்றுக்கு நவீன மருந்து வகைகளைக் கட்டாயமாகப் பாவிக்கவே வேண்டும். இந்த நோய்களை பரப்பும் கிருமிகளை அழிக்க நவீன மருந்துகளைத் தவிர கைமருந்துகளால் முடியாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அண்மையிலுள்ள சுகாதார ஊழியரின் ஆலோசனைகளைப் பெறுவது முக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைமருந்துகள் மீது வைத்துள்ள நம்பிக்கை காரணமாகவே மக்கள் கற்பனையாக ஏற்படுத்திக் கொள்ளும் நோய்களும் பயங்களும் குணமடைவதுண்டு. இந்த வகையைச் சேர்ந்த நோய்களாகப் பேய்ப் பயம், மாந்திரீக நோய்கள், தலையிடி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் நோயாளிக்கு குணமடையலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுவதும் ஆர்வத்தோடு பராமரிப்பது போன்று காட்டிக் கொள்வதும் முக்கியமாகும்.

## மனிதர்களை நோயாளிகளாக்கக் கூடிய நம்பிக்கைகள் :

மனிதர்களைச் சுகப்படுத்துவதற்குச் சில நம்பிக்கைகள் உதவுவதோடு அவற்றால் மனிதனை அழிக்கவும்முடியும். ஏதாவது ஒன்றினால் தனக்கு ஆபத்து ஏற்படலாமென ஒருவர் நம்புவாரானால் அதனால் ஏற்படும் பயத்தின் காரணமாகவே அவன் நோய்வாய்ப்படக்கூடும். வேறொருவர் தனக்குத் தீங்கு (சூனியம்) செய்து விட்டாரென உறுதியாக நம்புவதனாலும் ஒருவர் நோயாளியாகி விடலாம். ஒருவருக்கு பிசாசு பிடித்திருப்பதாகவோ திருஷ்டிப்பட்டிருப்பதாகவோ நம்புவதனால் ஏற்படும் அச்சம் காரணமாகவும் ஒருவர் நோய்வாய்ப்படக் கூடும். மாந்திரீகர் ஒருவருக்குத் தன்னிடம் நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் இருக்கின்றதென்ற நம்பிக்கையை ஏற்படுத்தலாமேயொழிய அவர்களிடம் குணப்படுத்தும் ஆற்றல் இல்லை. மாந்திரீகத்தில் நம்பிக்கையில்லாத ஒருவரின் நோயை இம்முறையால் குணப்படுத்த முடியாது.

## கிராமப்புற நம்பிக்கைகளும் கை மருந்துகள் பற்றிய சில வினா விடைகளும்

பின்வரும் வினா விடைகளால் எந்த நம்பிக்கை தங்களது பிரதேசத்தில் நிலவுகிறதென அடையாளம் கண்டு சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கு எந்த நம்பிக்கைகள் பயன்படக்கூடுமெனச் சிந்தித்துப் பாருங்கள்.

1. ஏதாவது ஒன்றை வீட்டுத் தோட்டத்தில் புதைத்து விடுவதால் ஒருவரை நோயாளியாக்க முடியுமா ? ஒருவருக்கு மாந்திரீக நோய் ஏற்பட்டிருந்தால், வீட்டுத் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த ஏதாவது ஒன்றை வெளியே எடுப்பதால் நோய் குணமடையுமா ? இல்லை. மனிதர்களின் மயிர், எலும்பு வகைகள் என்பனவற்றை ஜபம் செய்து புதைப்பதால் எந்தவிதத் தீங்கையும் செய்ய முடியாது.
2. குழந்தையின் தலையிலுள்ள உச்சிக் குழி உட்புறமாகப் பதிவடைந்திருப்பது குழந்தை மரணமடையும் என்பதற்கான அறிகுறியா? அநேகமாக இதில் உண்மையுண்டு. இதற்கான காரணம் குழந்தையின் சரீரத்தில் திரவம் குறைவதாகும். தேவையான அளவுகளில் திரவங்கள் கொடுக்கப்படாவிட்டால் குழந்தை இறக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தாய்மார்கள் குழந்தை பெறுவதற்கு இருட்டறைகளுக்குட் செல்ல வேண்டுமென்பது உண்மையா ? குழந்தைக்கும் தாய்க்கும் பிரகாசமான வெளிச்சம் கண்களுக்கு வேதனை கொடுக்கலாம், எனினும் மருத்துவச்சி தனது வேலைகளைச் செய்யக் கூடிய அளவுக்கு வெளிச்சம் இருக்கவேண்டும். சாதாரண வெளிச்சமுள்ள ஓர் அறை இதற்குப் பொருத்தமானது.

4. புதிதாகப் பிறந்த குழந்தையின் தொப்புள் நாண் உதிரும் வரை அதனைக் குளிப்பாட்டக் கூடாது. ஒரு தாய் தனக்குக் குழந்தை பிறந்து எத்தனை நாட்களுக்குப் பின்னர் குளிக்க வேண்டும் ? தொப்புள் நாண் உதிரும் வரை வெட்டப்பட்ட இடத்தில் ஈரலிப்பு இருக்கக்கூடாது. எனினும் மெல்லிய நனைத்த துணியால் குழந்தையின் சரீரத்தைத் துவட்டி விடலாம். குழந்தை பிறந்த மறுதினமே தாயின் உடலை வெந்நீரினால் கழுவுவது நல்லது. குழந்தை பிறந்து பல வாரங்களுக்குப் பின்னர் குளிக்கும் பழக்கத்தினால் ஏற்படும் அழுக்கின் காரணமாகத் தாய்க்குச் சில வேளைகளில் நோய் தொற்றக் கூடும்.

5. குழந்தை பிறந்து பல வாரங்கள் கழியும் வரை தாய் அவியல் ரசம் குடிப்பது அவசியமா? இல்லை. குழந்தைப் பிரசவத்தின் பின்னர் தாய்க்கு சத்துள்ள உணவு அவசியம். ஆகவே அவள் சோறு, இறைச்சி, மீன், பால், கீரை, மரக்கறி, பழங்கள் என்பனவற்றை உண்பது அவசியமாகும்.

6. தாய்ப்பால் ஊட்டுவது நவீன பால்மாவைக் கொடுப்பதிலும் பார்க்க சத்தானதா? ஆம். தாய்ப்பால் ஊட்டுவது பால்மாவிலும் பார்க்கச் சிறந்தது. குழந்தைக்கு முழுமையான போஷாக்கைப் பெறுவதற்கும் நோய் தொற்றுவதைத் தடுப்பதற்கும் இது மிகவும் சிறந்த முறையாகும்.

7. குழந்தை பிறந்து ஒரு சில வாரங்களுக்குத் தாய் உண்ணக்கூடாத உணவு வகைகள் உண்டா ? இல்லை குழந்தை பிறந்ததும் தாய் உண்ணக் கூடாததாகக் கருதப்படும் எந்த ஒரு உணவு வகையும் இல்லை.

8. நோயாளியைக் குளிப்பாட்டலாமா ? அதனால் தவறு ஏற்படுமா ? நோயாளியைத் தினசரி வெந்நீரால் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்.

9. ஒருவர் தடிமனால் அல்லது காய்ச்சலாற் பீடிக்கப்பட்டிருக்கும் போது தோடம்பழம், எலுமிச்சை என்பன கொடுக்கக் கூடாதா ? ஒருவர் தடிமனால் அல்லது காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கும் போது விட்டமின் "சி" அடங்கிய இத்தகைய பழங்களைக் கொடுப்பதால் நோய் விரைவில் குணமடையும்.

10. கொத்தமல்லி நீர் கொடுப்பதால் காய்ச்சலைக் குறைக்கலாமா ? ஆம். கொத்தமல்லி நீர் கொடுத்தால் வியர்வை வெளியேறுவதால் உடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சியடையும். ஆனால் சிறு குழந்தைகளுக்கு உணவாகக் கொடுக்க இது பொருத்தமானதல்ல.

கைமருந்துகள் பயனுள்ளவையாக இருப்பது போலவே அவற்றால் ஆபத்துக்களும் ஏற்படக்கூடுமாதலால் அவை பற்றி அறிந்து கொள்ள வேண்டிய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

★ மிருகங்களினதும் மனிதர்களினதும் சிறுநீர், மலம் என்பன சேர்க்கப்படும் கை மருந்துகளை ஒருபோதும் பாவிக்க வேண்டாம்.

★ மருந்து மூலிகைகள் – சில தாவரங்கள் மருந்து மூலிகைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. உங்கள் பிரதேசத்திலுள்ள மருந்து மூலிகைகளைப் பற்றி அறிந்து கொண்ட பின்னர் அவற்றைப் பயன்படுத்துங்கள்.

★ அநேகமானவர்கள் அடிக்கடி வஸ்தி செய்து கொள்கிறார்கள் அல்லது பேதி மருந்து குடிக்கிறார்கள். காய்ச்சல் அல்லது வயிற்றோட்டத்தை வஸ்தி செய்வதாலும் பேதி மருந்து குடிப்பதாலும் குணப்படுத்தலாமெனச் சிலர் நம்புகிறார்கள். எனினும், பெரும்பாலும் இது ஆபத்தானது. ஆகவே வைத்தியரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே வஸ்தி செய்து கொள்ளவோ அல்லது பேதிக்கு மருந்து குடிக்கவோ வேண்டும். மரக்கறி, கீரை, பழங்கள், தானியங்கள் முதலியவற்றை அதிகமாக உட்கொள்வதாலும் கூடுதலாக நீரைக் குடிப்பதாலும் மலச்சிக்கலைத் தவிர்த்துக் கொள்வதோடு இலகுவாக மலம் கழிக்கவும் முடியும். மலவியாதி, மலச்சிக்கல், குடல் புற்றுநோய் என்பனவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறவும் இந்த உணவு வகைகள் உதவும்.

பாம்புக் கடிக்குக் கைமருந்துகள் பொருத்தமானவை என்ற நம்பிக்கை பலரிடம் இருக்கிறபோதிலும், அவ்வாறு செய்து காலத்தை வீணாக்காது, உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும். நவீன சிகிச்சை பெறக்கூடிய இடங்கள் பற்றி முன்கூட்டியே அறிந்திருத்தல் அவசர தேவைகளின் போது பயனுள்ளதாகவிருக்கும்.

*நன்றி :*

*வீட்டு வைத்தியர் பராமரிப்பு - தமிழ் மொழி பெயர்ப்பும் பிரசுரமும் 1992*

*அனுசரணை - ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்*

*வெளியீடு - குடும்ப சுகாதாரப் பணியகம், சுகாதார அமைச்சு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# National Poison Information Centre

## THE PROBLEM

In Sri Lanka the incidence of acute poisoning has risen alarmingly in the last decade. In 1986, for example, there were some 25.000 admissions and well over 2.000 deaths due to acute poisoning in our state hospitals. Nearly 65% of the poisoning cases are due to pesticides. Other substances significantly involved in poisoning episodes include household requisites, such as cleaning and disinfectant fluids, drugs, chemicals and toxic plants. Envenomation due to snake bites is a major problem especially in rural areas, which causes at least two deaths daily. Poisoning due to environmental pollution will also be a problem in the future.

*(Courtery Lanka Business Pages 1993, Part 1)*

## THE SOLUTION

Physicians in Sri Lanka also have recognized the need for a Poisons Information Centre. In 1973, seven eminent consultant physicians of the General Hospital, Colombo, the Teaching Hospital providing clinical teaching facilities to the Faculty of Medicine of the University of Colombo, Stated: "We suggest the establishment of a Toxicology Advisory Bureau, whose service should be made available to all medical practitioners throughout the island at any time to render advice in emergencies regarding chemical constituents of different poisons, their actions, etc. This certainly would be a step towards the better care of cases of poisoning".

In 1986, the Ministry of Women's Affairs and Teaching Hospitals initiated steps to establish a Poisons Information Centre and sought funds to complement its own resources. Thanks to a 3 year project grant from the International Development Research Centre, Canada, the General Hospital, Colombo now has the first Poison Information Centre in the Island.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It's aims are to provide rapid and accurate information on poisons and poisoning to physicians and para-medical personnel 24 hours a day, throughout the year. Later, the centre activities may expand and provide information to the general public. The center will continue to collect useful information on pesticides, drugs, household requisites, etc and have this documentation accessible to the medical profession at all times. In addition, data on venomous snakes and other harmful animal species and poisonous plants will also be available. The centre will perform hospital-based retrospective and prospective studies on victims of poisoning to collect epidemiological information and to assess the outcome of therapy. The centre also hopes to store and supply antidotes and other drugs required to treat victims of poisoning.

## How To Get Information

In an emergency phone us. Please identify yourself. Let us know your place of work and phone number.

Give the name of the poison, if known. Otherwise, give the symptoms and signs and the poison suspected. If it is a plant or an animal poison give relevant details.

The information officers and/or the doctors will do their best to help you.

If information is required on chronic poisoning or of any toxic product please phone or write to us.

## Unusual Or Uncommon Poison

Even if the patient had mild symptoms, inform us how you managed the patient and the outcome. Your experience may enable us to answer a query from another caller in the future and even to save a life.

POISONING?
PHONE: 686143 OR 691111 EXT. 306

*(Courtery Lanka Business Pages 1993, Part 1)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் விஞ்ஞானம்



அன்பு மருமக்களே!

யாழ்நாதம் இதழ் 2 வெளிவந்து அதற்குள் ஒரு வருடம் முடிந்துவிட்டது இல்லையா? யார் என்ன செய்தாலும் காலதேவன் தன் கடமையிலிருந்து தவறமாட்டான். ஒரே சீராக ஓடிக்கொண்டிருப்பான். மீண்டும் இதழ் 3 இல் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விதழில் நாம் பொருட்களின் அடர்த்தி பற்றி அறிய முற்படுவோம்

## அடர்த்தி

### *1. இரும்பையும் பஞ்சையும் ஒப்பிடுதல்*

உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன் சரியான பதில் அளிப்பீர்களா?

ஒரு கிலோகிராம் இரும்பா அல்லது ஒரு கிலோகிராம் பஞ்சா நிறை கூடியது? ஆம் சிறிது சிந்தித்துத் தான் விடை கூற முடியும். ஏனெனில் இரும்பையும் பஞ்சையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரும்பு பாரம் கூடியது, பஞ்சு பாரம் குறைந்தது என நாம் எல்லோரும் அறிவோம். ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் என்ன செய்கிறோம்? பொதுவாக ஒரு கன அளவு இரும்பையும், அதே கன அளவு உள்ள பஞ்சையுமே நாம் மனதில் கொண்டு அவற்றின் நிறையை அளக்க எத்தனிக்கிறோம். ஆனால் இங்கு கேட்கப்பட்ட வினா என்ன? வினாவில் இரும்பின் நிறையும் ஒரு கிலோகிராம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் பஞ்சின் நிறையும் ஒரு கிலோகிராம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு கிலோகிராம் என்பது நிறையை அளக்கும் ஒரு அலகு. ஆகவே கேட்கப்பட்ட வினாவிற்கு விடை ஒரு கிலோகிராம் இரும்பும் ஒரு கிலோகிராம் பஞ்சும் ஒரே நிறையுடயவை.

நாங்கள் இவ்வினாவை இன்னொரு விதமாக மாற்றிக் கேட்டுப் பார்ப்போம். ஒரு கிலோகிராம் இரும்பின் கன அளவா அல்லது ஒரு கிலோகிராம் பஞ்சின் கன அளவா கூடியது? இதற்கு விடை ஒரு கிலோகிராம் பஞ்சின் கன அளவு ஒரு கிலோகிராம் இரும்பின் கனஅளவை விட கூடியது. ஏன் ஒரே நிறையுடைய இரு பொருட்களின் கன அளவு வேறுபடுகிறது என கவனிப்போம். இதற்கு அப்பொருட்களின் சார் அடர்த்தியே காரணமாகும். இரும்பின் அடர்த்தி பஞ்சின் அடர்த்தியை விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கூடியது. ஒரு பொருளின் அடர்த்தியை பின்வருமாறு கணிக்கிறோம்.

$$\text{அடர்த்தி} = \frac{\text{நிறை}}{\text{கன அளவு}}$$

இனி நாம் இரும்பினதும் பஞ்சினதும் இயல்புகளை இன்னொரு கோணத்தில் இருந்து பார்ப்போம். நீங்கள் ஒரு கிலோகிராம் எடையுள்ள ஒரு இரும்புத்துண்டை ஒரு மெல்லிய துணியில் சுற்றி, சிறு பொதியாகக் கட்டுங்கள். பின்பு அதே மாதிரி ஒரு கிலோகிராம் எடையுள்ள பஞ்சையும் இன்னொரு மெல்லிய துணியில் போட்டு ஒரு பொதியாகக் கட்டுங்கள். பின்னர் இரு பொதிகளையும் உங்கள் மேல் மாடிக்கு எடுத்துச் செல்லுங்கள். இரு பொதிகளையும் ஒரே நேரத்தில் உங்கள் மேல்மாடியில் இருந்து கீழே போடுங்கள். இரும்புப் பொதியா அல்லது பஞ்சுப் பொதியா முதலில் நிலத்தில் விழும்?

*முக்கிய அவதானம்:*

இதை நீங்கள் செய்யும்போது உங்களுடைய அம்மாவையோ, அப்பாவையோ அல்லது வயது முதிர்ந்த வேறு எவரையாவதோ அவதானத்திற்கு உங்களுடன் வைத்திருக்கவேண்டும். ஏனெனில் நீங்கள் அப்பொதிகளை மேலிருந்து கீழே போடும் போது தற்செயலாக யாராவது (அந்த நேரம்) கீழே வந்தால் அப்பொதிகள் அவர்களின் மீது விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்படுத்தக்கூடும்.

எங்கே கேள்விக்கு விடை யோசித்து விட்டீர்களா? நான் கூறுகிறேன். இரும்புப் பொதிதான் முதலில் கீழே விழும்.

இதற்கு என்ன விஞ்ஞான விளக்கம் கூறலாம்? நாம் பொருட்களை மேலிருந்து கீழே போடும்போது புவியீர்ப்புச் சக்தியினால் பொருட்கள் கீழே விழுகின்றன. பூமியின் மேற்பரப்பில் எமது கண்ணுக்குத் தெரியாத ஆனால் நாம் உணரக்கூடிய வளி மண்டலம் உண்டு. பொருட்கள் மேலிருந்து கீழே விழும் போது இந்த வளிமண்டலத்தின் ஊடாகவே பூமியின் மேல் வந்து விழுகின்றன. வளியை உரசிக்கொண்டு ஒரு பொருள் கீழே விழும்போது வளி கீழே விழும் பொருளை ஓரளவு தடுத்து உராய்வு விசையைக் கொடுக்கிறது. இந்த எதிர்த்தாக்கம் அடர்த்தி குறைந்த பொருட்களின் மீது கூடுதலாகவும் அடர்த்தி கூடிய பொருட்களின் மீது குறைவாகவும் இருக்கும்.

இதுதான் ஒரே அளவு எடையுள்ள இரும்பையும் பஞ்சையும் ஒரே சமயத்தில் ஒரே உயரத்தில் இருந்து கீழே போடும்போது இரும்பு முதலில் விழுவதன் இரகசியம்.

## 2. நீர்

நீரின் அடர்த்தி அதன் வெப்பநிலையில் தங்கியிருக்கிறது. நீர் $4^{\circ}$ C இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகபட்சம் அடர்த்தியைக் கொண்டிருக்கும். $4^0$ C இல் இருந்து அதன் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டுபோக அதன் அடர்த்தியும் குறைந்து கொண்டே போகும். $100^0$ C இற்கு மேல் நீரை வெப்பமாக்கினால் நீர் நீராவியாக மாறும்.

$4^0$ C இல் இருந்து நீரின் வெப்பநிலை குறைய, அதன் அடர்த்தியும் குறைந்து கொண்டுபோகும். $0^0$ C இல் நீர் பனிக்கட்டியாக மாறும். நீரின் அடர்த்தி குறைந்து கொண்டு போகும்போது அதன் கனஅளவு கூடிக்கொண்டு போகும். இதை நாம் முன்பு பார்த்தோம். அதாவது

$$\text{அடர்த்தி} = \frac{\text{நிறை}}{\text{கன அளவு}}$$

$4^0$ C இல் உள்ள நீர் பனிக்கட்டியாக மாறும்போது பனிக்கட்டியின் கனஅளவு நீரின் கன அளவை விடக் கூடவாக இருக்கும்.

இதை நீங்கள் அறிவதற்கு உங்கள் குளிர் சாதனப் பெட்டியை பாவிக்கலாம். ஒரு கண்ணாடிப் போத்தலை எடுத்து அதை நீரால் நிரப்புங்கள். பின்பு போத்தலை அதன் மூடியால் மூடி விடுங்கள். பின்பு நீர் நிரம்பிய போத்தலை குளிர்சாதனப் பெட்டியில் அதிகுளிராக்கிப் பகுதியினுள் வையுங்கள். அப்படி வைக்கும் போது அப்போத்தலின் கீழ் ஒரு தட்டையும் பாதுகாப்பிற்காக வையுங்கள்.

அடுத்த நாள் குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து நீங்கள் வைத்த போத்தல் எப்படி இருக்கிறது எனப் பாருங்கள். போத்தல் வெடித்து இருக்கும். நீங்கள் வைத்த நீர் பனிக்கட்டியாக மாறி இருக்கும்.

பனிக்கட்டியாக மாறும்போது நீரின் கனஅளவு கூடிய படியால் போத்தல் வெடித்தது. அடியில் வைத்த தட்டு நீங்கள் உங்கள் கைகளைக் காயப்படுத்தாமல் போத்தலை வெளியே எடுக்க உதவும். சிலர் இதை அனுபவ பூர்வமாகவும் அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். குளிர்ந்த நீர் அருந்த விரும்பும் பிள்ளைகள் போத்தல் நீர் விரைவில் குளிர் அடைவதற்காக அதனை குளிர்சாதனப்பெட்டியில் அதிகுளிராக்கிப் பகுதியினுள் வைப்பார்கள். சிறிது நேரத்தில் போத்தல் நீரை எடுத்துப் பருகினால் குளிர்ந்த நீர் தாகசாந்தி அளிக்கும். ஞாபக மறதியினால் போத்தல் நீரை அதிகநேரம் வைத்துவிட்டால் போத்தல் வெடித்து பனிக்கட்டியான நீரை அருந்த முடியாமல் போய்விடும்.

## புதிர்

இனி உங்களுக்கு ஒரு புதிர் கூறுகிறேன். பெரிய விசாலமான மண்டபம் ஒன்று இருந்தது. அதனுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்கள் எதுவும் இல்லை. அதன் கூரை உயரத்தில் இருந்தது. மண்டபத்தின் மத்தியில் கூரையில் கயிற்றால் சுருக்குப்போட்டு தற்கொலை செய்த ஒரு மனிதனின் உடல் தொங்கிக்கொண்டு இருந்தது. கீழே சிறிதளவு நீர் குளமாக இருந்தது. அந்த விசாலமான தளபாடங்கள் அற்ற மண்டபத்தில் உயரே உள்ள கூரையில் எவ்வாறு அந்த மனிதனால் சுருக்குப்போட்டுத் தற்கொலை செய்ய முடிந்தது? சம்பவம் அறிந்து அங்கே வந்த பொலிஸ்காரர்கள், சி. ஐ. டி. எல்லோரும் திகைத்து நின்றனர்.

எனக்குத் தெரியும். நீங்கள் திகைத்து நின்றவர்களுக்கு இப்புதிரை விளக்குவீர்கள் என்பது. அந்த மனிதன் வரும்போது ஒரு உயரமான பனிக்கட்டியை கொண்டு வந்து அதன்மேல் ஏறி கூரையில் சுருக்குப்போட்டு இறந்தான். பனிக்கட்டி மெல்ல மெல்ல உருகி நீராகி ஒரு சிறிய குளமாகக் கீழே இருந்தது.

இது வெளிநாட்டில் நடந்த ஒரு சம்பவம். ஒரு சுட்டிப்பயல் காரணம் கூறி எல்லோரின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டான்.

*மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.*

*உங்கள் அன்புள்ள மாமி*
*திருமதி சிவகாமி அம்பலவாணர்.*

---

## கிராம்பு

1. *தாம்பூலத்துடன் ஒரு கிராம்பைச் சேர்த்து உட்கொள்ள வாய் நாற்றம் நீங்கிச் சீரணம் சுறுசுறுப்பாகும்*

2. *கிராம்பை அரைத்து நெற்றியில் பற்றுப் போடத் தலைவலியும் மூக்கின்மேலும் மேல் உதட்புலும் பூசத் தடிமலும் நீங்கும்.*

3. *வறுத்த கிராம்பு நான்கும், வறுக்காத கிராம்பு நான்கும் வாயில் போட்டுச் சுவைத்துச் சாப்பிட்டால் பெரிய இருமல் நீங்கும்.*

4. *கிராம்புத் தூளைத் தண்ணீரில் கலக்கி, தண்ணீர் நன்றாகத் தெளிந்தவுடன் இரண்டொரு சொட்டுக் காதில் விட்டால் காது வலி குணமாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் விந்தைகள் சில உங்களுக்காக

★ நொதியங்கள் இரசாயனத்தாக்கங்களை $10^9$ - $10^{12}$ துரிதப்படுத்துகிறது. அதாவது 100 வருடங்களாக நடக்கவேண்டிய தாக்கத்தை ஒரே ஒரு வினாடியில் முடிப்பதற்கு உதவுகிறது.

★ ஈரலினுள் மட்டும் 500 இற்கும் மேற்பட்ட அனுசேப, அவசேப தாக்கத்தொடர்கள் நடைபெறுகின்றன.

★ ஒரு முழுதாக வளர்ச்சி - யடைந்த மனிதன் ஏறக்குறைய நூற்றி மில்லியன் மில்லியன் (100,000,000,000,000) கலங்களால் ஆக்கப்பட்டிருக்கிறான்.

★ உலகில் உள்ள பல்வகை உயிர் இனங்களில் ஒரு இனத்தை விபரிக்க ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தினால் மொத்தமாக 3.76 மில்லியன் புத்தக அலுமாரிகள் நிரம்பும்.

★ நாம் ஒவ்வொருவரும் உடலில் உள்ள எங்கள் சொந்த கலங்களைப் போல 10 மடங்கு பக்றீரியா கலங்களை எங்கள் உடலினுள் வைத்திருக்கின்றோம்.

★ முன்பு வாழ்ந்த விலங்கின - ங்களில் 99% இன்று அழிந்து போய்விட்டன. 1% மட்டுமே வாழ்ந்து கொண்டிருக் - கின்றன.

★ உடலிலுள்ள ஒரு கலத்தினுள் உள்ள DNA சுமார் 2 மீற்றர் நீளமானது. ஒரு தனி மனிதனில் உள்ள DNAகளை தொடராக நீட்டிப்பிடித்தால் 8,000 தரம் சந்திரனுக்கு போய் மீண்டும் பூமிக்கு வரும்.

★ 20 நபர்களில் ஒருவர் நிறங்களில் சிறிய வித்தியாசங்களை சரியாக பிரித்தறிய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

★ மலேரியா எனும் பெயர் இத்தாலிய "Mal aria" எனும் சொல்லிலிருந்து வந்தது. இதன் கருத்து "அசுத்த" காற்று. 20ம் நூற்றாண்டு வரை மக்கள் மலேரியாவானது சதுப்பு நிலங்களிலிருந்து வரும் அசுத்த பனிக்காற்றினால் வருவதாக நம்பினார்கள்.

★ Rafflesia எனும் மலர் 1 மீற்றரிலும் கூடுதலான விட்டத்தையும் 7KG இற்கும் கூடுதலான நிறையையும் கொண்டது. அத்துடன் இதிலிருந்து வரும் அழுகும் இறைச்சி மணமானது அதனது மகரந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கைக்கான பூச்சிகளை கவர உதவுகிறது.

★ ஒரு ஆண் மகனின் வாழ்க்கைக் காலத்தில் அவன் ஆகக்கூடியது 12,000,000,000,000, ($1.2 \times 10^{13}$) விந்துக்களை உற்பத்தி செய்கிறான்.

★ பெண் பண்டாக்கள் (Panda) இரு வருடங்களில் இரண்டு அல்லது மூன்று நாட்களே கருத்தரிக்கக் கூடியன. இதுவும் இவற்றின் இனம் இன்று அருகிவருவதற்கு ஒரு காரணமாகும்.

★ ஆகக்கூடிய கர்ப்பகாலத்தை கொண்ட பாலூட்டி ஆசிய யானையாகும். இது சராசரி கர்ப்பகாலமாக 609 நாட்களையும் ஆகக்கூடிய கர்ப்பகாலமாக 760 நாட்களையும் கொண்டது.

★ மனித முளையமானது கர்ப்பகாலத்தின் போது 500 மடங்கு அளவில் அதிகரிக்கின்றது. அதாவது $10cm^3$ இலிருந்து $5,000cm^3$ வரை அதிகரிக்கின்றது.

★ நீலத்திமிங்கிலமே விரைவாக வளரும் பாலூட்டியாகும். இரண்டு வருடத்திலும் குறைவான காலத்தில் இதன் திணிவு 1 மில்லிகிராமிலிருந்து 26 தொன்னாக வருகிறது.

★ மூங்கில் விரைவாக வளரும் தாவரங்களுள் ஒன்றாகும். இதனது பிரதான தண்டானது ஒரு நாளில் 1 மீற்றரிற்கும் அதிகமாக வளருகிறது.

★ இடைவெப்ப காலநிலை காடுகளில் உள்ள Raphia எனும் தாவரத்தின் இலைகள் சுமார் 22 மீற்றர் நீளமானவை.

★ உணவும் நீரும் இல்லாது ஒருவரால் ஆகக்கூடியது 18 நாட்கள்தான் உயிர்வாழ முடியும் என விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன.

★ நிலக்கடலையில் இருந்து பெறப்படும் சக்தியானது மூளையை ஒரு மணித்தியாலத்திற்கு உயிர்ப்பாக வைக்க போதுமானதாகும்.

★ மனித உடலிலுள்ள நாடிகளினதும் நாளங்களினதும் நீளமானது 80,000 மைல்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது.

தொகுப்பு : த. பிருந்தா

ஆதாரம் :-


1. Understanding Biology - Glenn and Susan Toole
2. Biological Science - Green Stout Taylar
3. Biology- Roberts, King


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் பற்றிய தகவல்கள்

திருமதி. சாந்தா இரகுநாதமுதலியார்

தங்கம்

★ 24 காரட் கொண்டது சுத்தமான தங்கம். அது தனி மஞ்சள் நிறம்.

★ பொதுவாக எல்லோரும் உபயோகிப்பது 22 அல்லது 18 காரட் தங்கம்.

★ 24 காரட்டுடன் 2 பாகம் செம்பு சேர்த்தால் 22 காரட் தங்கம். செம்பு சேர்ப்பது தங்க வேலைக்கு எளிது.

★ பழைய ஆபரணங்களை அழித்து புதிதாக ஆபரணம் செய்யும் போது தங்கத்தின் மாற்று குறையும்.

★ காரட் குறைந்த தங்கமே அதிக பலம் உள்ளதாக இருக்கும். அதனால் கல் வைத்த நகைகளுக்கு 18 காரட்டே சிறந்தது.

★ தங்கத்தின் மாற்றை அறிவதற்கு Nitric Acid பயன்படுத்தப்படும். இதன் மூலம் தங்கத்தின் மாற்றை அறிய ஒருமணி நேரம் ஆகும்.

தங்கத்தை சேமிப்பதாக இருந்தால் தங்கக் கட்டிகளாக வாங்கி வைக்க வேண்டும்.

★ கல் பதித்த ஆபரணங்களை வாங்கும்போது கல்லையும் தங்கத்தையும் தனித்தனியாக எடை பார்க்க வேண்டும்.

★ யானை முடி வைத்த மோதிரம் "பிரேஸ்லட்" அணிந்தால் பயம் ஏற்படாது. இந்த நம்பிக்கை தென் இந்தியாவில் உண்டு.

★ புலி நகம் பதித்து அணிந்தால் பிசாசு தொல்லை ஏற்படாது என்று நம்புகின்றார்கள்.

★ ஆபரணம் அணிவதன் மூலம் அழகு மட்டுமன்றி ஆரோக்கியமும் கிடைக்கும். நிறம், புத்தி, ரத்த சுத்தி போன்றவைகளுக்கு ஆபரணங்கள் உதவுகின்றன. தங்க ஆபரணங்கள் சூரியக் கதிர்களை உடலுக்குள் இழுப்பதால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

மணி

★ மணி பதித்த நகைகளை அடிக்கடி அணியக்கூடாது.

★ மணி வெய்யிலில் பட்டு ஒளி குன்றும்.

★ பதித்த மணிகள் கீழே விழும் வாய்ப்பு உண்டு.

★ மணிகளில் வியர்வை படக்கூடாது.

★ வியர்வையும் மணிகளின் நிறத்தை கெடுக்கும்.

★ எண்ணெய் இறங்கி மணிகளின் பளபளப்பைக் குறைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரம்

★ இயற்கை வைரம் 20 கற்கள் கொண்ட காரட்டிற்கு ரூபா 5 ஆயிரம். இதை தலைமுறை தலைமுறையாகப் பாவிக்கலாம். X கதிர் இதை ஊடுருவாது. செயற்கை வைரம் காரட்டிற்கு ரூபா 50. இதை ஒரு தலைமுறைதான் பாவிக்கலாம். X கதிர் இதை ஊடுருவும்.

★ திருச்சியில் அதிக அளவில் செயற்கை வைரம் (அமெரிக்க வைரம்) பட்டை தீட்டப்படுகின்றது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும்.

★ வைரத்தை குளிர் நீரில், சோப் நீரில், சலவைச் சோடா நீரில் கழுவவும். குழாய் நீர் (குளோரின் உள்ளது) கூடாது. பளபளப்பு கெடும்.

★ வியர்வை, சோப்பு, பவுடர் எண்ணெய் என்பன வைரத்தின் ஒளியை குன்றும் எண்ணெய் வைரத்துடன் ஒட்டிக் கொள்ளும்.

★ வைர நகைகளைத் தனித்தனியாகவே வைக்க வேண்டும்.

★ வைரம் ஒன்றுடன் ஒன்று உரசினால் கீறல் விழும்.

★ மற்ற மணிகளின் மீது வைரம் பட்டால் கீறல் விழும்.

முத்து

★ வயசான முத்துக்களில் விரிசல், வெடிப்பு வரும். நிபுணரிடம் கொடுத்தால் அப்பகுதியை மட்டும் லேசாக உரித்து எடுப்பர்.

★ முத்துக்கள் வயதானால் ஒளி குன்றும்.

★ முத்துக்களை கடல் நீரில் போட்டு வைத்தால் அவை மீண்டும் இளமை பெறும்.

★ முத்துக்களைத் தண்ணீரிலே கழுவவே கூடாது. நீர் துளிகளின் வழியே உள் புகுந்து முத்து பழுதுபடும்.

★ முத்துக்களைத் துடைத்தால் போதுமானது. கவனமாகத் துடைத்து வைக்கவும். வியர்வை முத்துக்களின் நிறத்தை பாழாக்கும்.

★ முத்துக்கள் 3 வகை

1. Cultured Pearls
2. Semicultured Pearls
3. Fresh water Pearls

★ Cultured Pearls மிகச் சிறந்தது. தங்கத்தில் கட்ட உபயோகிப்பார்கள்.
ஏனைய இரண்டும் தங்கத்தில் கட்ட உபயோகப்படாது.

★ Semicultured Pearls உருண்டை வடிவம். தோல் உரியும் தன்மை உடையது.

★ Fresh water Pearls உடம்பில் போட்டால் தேயக் கூடியது.
தீயில் காட்டினால் ஒன்றும் ஆகாது.
(இது உண்மையான முத்தை அறியும் பரிசோதனை)

இந்துமதக் கொள்கையின்படி இதைத்தான் அணிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1996ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி யாழ் நாதம் 2 வெளியீட்டின் போது அளித்த மெல்லிசை

இராகம் : செஞ்சுருட்டி
தாளம் : ஆதி

பல்லவி

புல்லாய் பிறவி தரவேண்டும்–கண்ணா
புனிதமான பலகோடி பிறவி தந்தாலும் பிருந்தாவனமதிலொரு
(புல்லாய்)

அனுபல்லவி

புல்லாயினும் நெடுநாள் நில்லாது– கண்ணா ஆதலினால்
கல்லாய் பிறவி தரவேண்டும்–கண்ணா
கமல மலரிணைகள் அணைய என்று மனம்
புளகிதமுற்றிடும் பலமற்றிடும் ஒரு
(புல்லாய்)

சரணம்

ஒரு கணம் உன் பதம் படும் எந்தன் மேலே
மறு கணம் நான் உயர்வேனே கண்ணா– மென்மேலே
திருமேனி ஒருக்காலே படும் எந்தன் மேலே
திருமகள் என மலரடி பெயர்ந்துனை
தொடர்ந்த ராதைக்கு இடம் தருவோனே
திசை திசை எங்ஙனும் பரவிடும் குழலிசை
மயங்கி வரும் பல கோபியருடனே
சிறந்த ரசமிகு நட நீ ஆடவும்
சுருதியொடு லயமிகு கலந்து பாடவும்
திளைப்பிலே வரும் களிப்பிலே எனக்கு
இணையா என மகிழ்வேனே
தலமிகு ஸீரரொடு முனிவரும் இயலார்
தனித்த பெரும் பேறடைவேனே
எவ்வுயிர்க்கும் உன் கலக்கும் இறைவனை
யமுனை துறைவனே எனக்கும் ஒரு
(புல்லாய்)

*கீதா சேனாதிராஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: மத்தியமாவதி
தாளம் : ஆதி

பல்லவி

ஒருவரையும் குறை கூறாதே—உலகில்
உண்மை வழி நிலை மாறாதே நெஞ்சே

(ஒருவரையும்)

அநுபல்லவி

மருளும் மனதினில் மாசுதனையகற்றி
திருவும் நல்வாய்மையும் திறமுடனே பெற

(ஒருவரையும்)

சரணம்

கண்டதே காட்சியாய் கருதிக் கொள்ளாதே
கால நிலைக்கேற்ப கோலம் கொள்ளாதே
கண்டவர் புகழ்வதில் காதல் கொள்ளாதே
கடமையை மறந்து நீ களிப்படையாதே

(ஒருவரையும்)

பொய்களை மெய்யெனப் புரட்டிப் பேசாதே
பொறுமையை இழந்து நீ புலம்பி வாடாதே
உய்வகைகள் அறியா உளம் நிலையாதே
உயர்வு தாழ்வு பேசி உடல் வளர்க்காதே

(ஒருவரையும்)

செல்வி சாந்தி தர்மலிங்கம்
செல்வி ஞானலக்சுமி பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பெருமையை
வாழ்வுள்ள வரையில் நாம் வளர்த்திட வேண்டும்
சின்னஞ்சிறு பெண்களை சிறப்புறு மகளிராய் சீருடன்
வாழ சீர்கொடுத்த தெய்வம் (யாழ் இந்து)

இலக்கியச் சுவையும் இன்னிசைப் பாவும்
கலக்கிய நல்ல கனிந்துறு சாறை
நிகர்த்த நல்ல நித்திய மொழியில்
பகர்த்திய எங்கள் பாடசாலையாம் (யாழ் இந்து)

கணக்கியல் புவியியல் தாவரவியல் விலங்கியல்
இத்தனை இயலுடன் மாண்புமிகு மனையியல்
விளையாட்டுத் துறையுடன் விதவித கலைகளும்
விரிவாய் புகட்டிய எங்கள் கல்லூரியாம் (யாழ் இந்து)

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
பண்பும் பணிவும் சமய அறிவும்
பாங்காய் வாழ்வில் நாங்கள் ஒழுக
பரிவாய்த் தந்த நல் ஆசான்கள்
பலரைத் தந்த எங்கள் கல்லூரி (யாழ் இந்து)

என்றென்றும் வாழிய வாழியவே
அதை வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்றே பாடி புகழ்வோம் நாம் (யாழ் இந்து)

செல்வி *சாந்தி தர்மலிங்கம்*
செல்வி *ஞானலக்சுமி பாலசிங்கம்*

சினமடையாதே சீறிவிழாதே
சிறந்த குணங்களை சிதறவிடாதே
மனம்போன போக்கினில் போகவிடாதே
மாபெரும் புகழ்தனில் மகிழ்ந்துவிடாதே
அற்பரைப்போல் உலகில் அறிவை விற்காதே
அறிவுடை பெரியோரை அவமதிக்காதே
கற்பனை உலகினில் கனவு காணாதே
காலம் கடந்த பின் கண் விழிக்காதே (சினமடையாதே)

*சத்தியலெட்சுமி சிவலிங்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதுகுல திலகா தேவகிசுதனே யமுனாதீரவிகாரா
என் துணை நீயே உன்னையே நம்பினேன் ஏழையைக் கண்ணால் பாராயோ
சஞ்சலம் தீர தருண இரங்கி தயவாய் அருகில் நீ வாராயோ
வேணுவிலோ வா துளசி மாதா மனமோகனனே கோபாலா
தீன பந்தா தேவர்கள் பணியும் திருவடி நான் உன்னை மறவேனே

(யதுகுல திலகா)

*சத்தியலெட்சுமி சிவலிங்கம்*

## துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ....

இராகம் : தேஷ்
தாளம் : ஆதி

பல்லவி

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா
எமக் கின்பம் சேர்க்க மாட்டாயா. (துன்பம்...)

அனுபல்லவி

அன்பில்லா நெஞ்சில் தமிழில் பாடிநீ
அல்லல் நீக்க மாட்டாயா கண்ணே (துன்பம்...)

சரணம்

வன்பும் எழிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க – நீ
அன்றை நற்றமிழ் கூத்தின் முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா – கண்ணே நீ
ஆடிக்காட்ட மாட்டாயா (துன்பம்...)

அறமிதென்றும் யாம் புறமிதென்றுமே
அறிகிலாத போது யாம் – அறிகிலாத போது
தமிழ் இறைவனாரின் திருக்குரலிலே ஒரு பா
இயம்பிக்காட்ட மாட்டாயா – நீ
அன்றை நற்றமிழ் கூத்தின் முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா – கண்ணே நீ
ஆடிக்காட்ட மாட்டாயா.

இயற்றியது :
*பாரதிதாசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"It ought to be beautiful, I live here"

யாழ்/இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
கொழும்புக் கிளை

# J/ HINDU LADIES' COLLEGE - O. G. A.
COLOMBO BRANCH

## அங்கத்துவ மனுப்பத்திரம்
## APPLICATION FOR MEMBERSHIP

முழுப் பெயர் :
Full Name : ..............................................................................

விலாசம் :
Address : ..............................................................................

தொலைபேசி எண் :
Phone No. :
(If any) ..............................................................................

சந்தாப்பணம் / Subscription

1. சாதாரண அங்கத்துவம், ஒருவருடம்
Annual Subscription — Rs. 100.00

2. சீவிய அங்கத்துவம்
Life Membership — Rs. 1000.00

அறிமுகப்படுத்துபவர் :
Introduced by : ..............................................................................

சந்தாப்பணம் ரூபா ............................ இத்துடன் அனுப்புகிறேன்.

..................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்
Signature of applicant

திகதி :
Date : .......................

**Please send this form with the subscription to :**
**J/ HINDU LADIES' COLLEGE, - O. G. A. COLOMBO BRANCH**
**C/o MISS. S. NATHAN, 112 3/1, GALLE ROAD, COLOMBO 4.**
**MRS. S. AMBALAVANAR, 61/2, ABDUL GAFFOOR MAWATHA, COLOMBO 3**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

☆☆☆
☆☆
☆

☆☆☆
☆☆
☆

☆☆☆
☆☆
☆


# LANKEM CEYLON LTD.

760 - 762, Baseline Road,
Colombo - 9.

Tele : 698292-6
Fax : 698753

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*



# Vasantha Jewellery (Pvt) Ltd.

**Manufacturers and Exporters of
Genuine Gold Jewellery
Authorized Money Changers**

11/20, Gold Plaza,
Sea Street, Colombo - 11
T'phone : 342266, 430624
Fax : 449319

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. NO. 48 B. BLOEMENDHAL ROAD, COLOMBO - 13 TEL : 330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org